# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 33 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 14, வியாழக்கிழமை 29.12.2016


## பொலிஸார் சுட்டதில் ஒருவர் சாவு

திருமலையில் சம்பவம்

மூதூர், டிச.29
கந்தளாய்ப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இது தொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது: >> 25

## பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பின்பே ஒட்டாவா ஒப்பந்தம்

பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29
இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே, கண்ணிவெடிகளைத் தடை செய்யும் பன்னாட்டு அறிவிப்பில் அரசு கையெழுத்திடும் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். ஒட்டாவா உடன் >> 25

## இலங்கை அரசைப் போன்று போர்க்குற்றம் புரியும் சிரியா

நாடு கடந்த தமிழீழ அரசு அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 29
கடந்த சில நாள்களாகச் சிரியாவின் அலெப்போ நகர மக்களுக்கெதிராக ரஷ்ய - >> 25

## வடக்குக்கு ஒதுக்கிய நிதியில் அரைவாசியே கிடைத்தது

நடப்பாண்டுத் திட்டங்களின் நிதி விடுவிப்பில் பெரும் நெருக்கடி

யாழ்ப்பாணம், டிசெ. 29
வடக்கு மாகாண சபைக்கு நடப்பு வருடத்துக்கான (2016ஆம் ஆண்டுக்குரிய) குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடை நிதியான 3 ஆயிரத்து 168 மில்லியன் ரூபாவில் இதுவரை ஆயிரத்து 500 மில்லியன் ரூபா மட்டுமே கிடைத்துள்ளதாக வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.
நடப்பு வருடம் நிறைவடைய இன்னும் 2 நாள்களே உள்ள நிலையில் வழங்கப்படவேண்டிய மிகுதி ஆயிரத்து 668 மில்லியன் ரூபா நிதி இதுவரை >> 04

## வடக்கு அமைச்சர்கள் மூவர் ஜனவரியில் வெளிநாட்டுக்கு

எஞ்சிய 2 அமைச்சர்களே ஏனைய அமைச்சுகளையும் நிர்வகிப்பர்

யாழ்ப்பாணம், டிசெ. 29
வடக்கு மாகாணத்தின் 5 அமைச்சர்களில் மூவர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் - ஏக காலத்தில் - வெளிநாடு செல்லவுள்ளனர். எஞ்சிய இரு அமைச்சர்களுமே, ஐந்து அமைச்சுக்களையும் அந்தக் காலப் பகுதியில் >> 25

## மத்தியும் நிராகரித்தது

அபிவிருத்திச் சட்ட வரைவை

கொழும்பு, டிசெ. 29
அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாட்டுச் சட்ட வரைவு மத்திய மாகாண சபையிலும் நேற்றுத்தோற்கடிக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் இலங்கையின் ஆறு மாகாண சபைகளினால் அந்தச் சட்டவரைவு நிராகரிக்கப்பட்டுள்ளது.
மாகாண சபைகளின் ஒப்புதலைப் பெறுவதற்காகக் கொழும்பு அரசால் அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. >> 25

## மறைந்த ரட்ணசிறிக்கு நாடாளுமன்றில் அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ. 29
முன்னாள் பிரதமரும், மூத்த அரசியல்வாதியுமான ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, கொழும்பில் உள்ள தனியார் >> 04

## உருவானது புலம்பெயர் சிங்களவர்கள் அமைப்பு

நாட்டுக்கு எதிரான தமிழரின் நடவடிக்கைகளை முறியடிக்க

யாழ்., டிசெ. 29
இலங்கைக்கு எதிராகப் புலம்பெயர் தமிழர்கள் உலகம் முழுவதும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை முறியடிக்க புலம்பெயர் சிங்கள அமைப்பு நிறுவப் >> 25

## எத்தடை வரினும் பொருத்து வீட்டில் மாற்றமே இல்லை

சுவாமிநாதன் திட்டவட்டம்



யாழ்., டிசெ. 29
என்ன முட்டுக்கட்டை - தடைகள் வந்தாலும் பொருத்து வீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். அதில் மாற்றம் >> 04

## சுவாமிநாதனிடம் மனச்சாட்சியை எதிர்பார்க்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 29
பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் மக்களின் மனதையறிந்தும் - தனது மனச்சாட்சிப்படியும் அமைச்சர் சுவாமிநாதன் நடந்துகொள்ளவேண்டும் என்று அவரிடம் முதற்கட்டமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.
இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் >> 25

## கனடா விபத்தில் 2 ஈழத் தமிழர் சாவு

ரொரன்ரோ, டிசெ. 29
கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் குடும்பத் >> 25



# 2017 இல் அரசியல் மாற்றம்

வாய்ப்புக்கள் அதிகம் என்கிறார் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா

யாழ்ப்பாணம், டிசெம்பர் 29
2017 ஆம் ஆண்டு அரசியல் ரீதியாக நாட்டில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.
அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் பன்னாட்டு ரீதியில் இலங்கையானது பெரும் சவால்களுக்கு >> 25



இராணுவ வாகனம் மோதி

## வற்றாப்பளைச் சந்தி விபத்தில் ஒருவர் சாவு

முல்லைத்தீவு, டிசெ. 29
முள்ளியவளை வற்றாப்பளைச் சந்தியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். >> 25

## தனியார் விடுதிகளில் விருந்து தேவைதானா?

மாகாண சபை விருந்துபசாரத்தின் பின்னர் அனந்தி சபையில் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 29
ஒரு நேரச் சாப்பாட்டுக்கே நாம் கஷ்டப்படுகின்ற நிலையில் மாகாண சபையினர் தனியார் உணவு விடுதிகளில் உணவு உண்ண வேண்டியிருக்கிறதோ என்று மக்கள் கேட்கப் போகிறார்கள். விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மதிய உணவை இங்கேயே ஏற்பாடு செய்திருக்கலாம்.
இவ்வாறு வடக்கு மாகாண >> 25

## தீர்வு கிட்டும்வரை அசையாது நல்லாட்சி

அமைச்சர் மனோ உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 29
தேசிய அரசுக்குள் ஏற்பட்டுள்ள [illegible] [illegible] அமைச்சர்களான டிலான் பெரேரா உள்ளிட்ட ஒரு சிலரே காரணம் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் மனோ >> 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# எல்லைக் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

### மாகாண சபையில் நேற்று நிறைவேறியது பிரேரணை

யாழ்ப்பாணம், டிசெ.29

முல்லைத்தீவு ஒதியமலை மக்கள் மற்றும் எல்லைப்புற கிராம மக்களின் அடிப்படை வசதிகள் தீர்க்கப்பட வேண்டும் என வடமாகாண சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் நேற்று இடம்பெற்ற 74ஆவது அமர்வின் போது மாகாண சபை உறுப்பினர் ரவிகரனால் இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்கு உட்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலும் கடல் வளமும் பெரும்பாலும் பறிபோய்விட்டது. தரையிலும் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. இதில் மோசமாகப் பாதிக்கப்பட்ட செம்மலைக்குத் தெற்கே வசிக்கும் மக்களினதும், ஒதியமலைப் பகுதியில் வசிக்கும் மக்களினதும் அடிப்படை வசதிகள் பல இன்றுவரை சீர்செய்யப்படவில்லை. இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்து ரவிகரன் பிரேரணையை முன்மொழிந்தார். இதனை மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் வழி மொழிந்தார். இதனை அடுத்து பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

குறித்த பிரேரனை தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன் 'ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு தினத்துக்கு நானும் சென்றிருந்தேன். அந்த வீதிகள், பாடசாலை, அங்குள்ள மக்களின் வீடுகள் போன்றவை இன்னும் சீரமைக்கப்படாமல் இருப்பதைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. நிச்சயமாக இந்த மக்களுக்கு முதலமைச்சரின் சேவைகள் தேவையானதாக இருக்கின்றன - என்றார்.

'ஒதியமலைக்கு அருகில் தண்ணிமுறிப்பு, மற்றும் ஆண்டாங்குளம் என்ற கிராமங்கள் இருக்கின்றன. ஒதியமலையில் இருந்து தண்ணி முறிப்புக்கு ஒரு பாதை உள்ளது அந்தப் பாதையைக் கட்டாயமாகச் செப்பனிட வேண்டிய தேவையுள்ளது. இந்த இடம் குடியேற்றப்படாமல் விட்டால் பறிபோகக்கூடிய ஒரு நிலை உள்ளது. இந்த கிராம மக்களைக் குடியமர்த்த வேண்டும். அவர்களது அடிப்படைத் தேவைகளைத் தீர்க்கவேண்டும். மின்சாரம் வழங்கி அவர்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டிய பொறுப்பும் இருக்கின்றது. ஆகவே மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கும் இந்தக் கிராமங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட ஆவன செய்ய வேண்டும் என உறுப்பினர் சிவனேசன் தெரிவித்தார்.

அடுத்துக் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் லிங்கநாதன் 'இந்த மக்களை எமது முதலமைச்சரும் சந்தித்து ஒரு நடமாடும் சேவையை நடத்தினால் அவர்கள் கஷ்டங்களை மறந்து மீண்டும் ஒரு வாழ்வுக்குள் இணைய உதவியாக இருக்கும் - என்றார்.

இவர்களின் கருத்துக்குப் பதிலளித்த ரவிகரன், இந்த மக்கள் வீட்டுத்திட்டம் பெறச் சரியான கஷ்டத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தார்கள். தாய், தந்தை, பிள்ளைகள் என்று நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்குக்கூட வீடு கொடுக்கப்படவில்லை, அதற்கான காரணம் என்ன என்று அந்த மக்கள் கேட்கிறார்கள் - என்றார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, இது ஒரு நிர்வாகம் சார்ந்த விடயம். ஒரு கொள்கை சார்ந்த விடயம் என்றால் பிரச்சினையில்லை. இந்த விடயம் சபைக்கு வரவேண்டிய அவசியமில்லை என்று தான் நான் கூறுவேன். நிர்வாக அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்க்க வேண்டிய விடயத்தை அவர்கள் உரிய முறையில் தீர்க்கவில்லை என்பதால் அது சபைக்கு வந்துள்ளது - என்றார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த லிங்கநாதன், திட்டமிடல் சபையை நீங்கள் உருவாக்கி இருந்தால் உரிய அதிகாரிகளுடன் கதைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கும். அதிகாரிகளை அவர்களது அலுவலகத்தில் தான் பார்க்க முடியும். சபையில் கதைக்க முடியாது. எங்கள் தேவைகளை அவர்களுக்கு உரிய முறையில் தெரிவிக்கவும் முடியாதுள்ளது. இதற்கு ஒரே தீர்வு திட்டமிடல் சபையை உருவாக்குவதுதான். இந்தச் சபையை உருவாக்கினால் நல்ல ஆரோக்கியமான திட்டங்களை நடைமுறைப் படுத்த முடியும் - என்றார். (த-21,8)

# புத்தாண்டிலாவது கைதிகளை விடுவியுங்கள்

### அரசிடம் கோருகின்றது கைதிகள் தேசிய இயக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் புத்தாண்டிலாவது அரசு நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளில் காணப்படும் தாமதம் உட்பட அரசியல் கைதிகள் குறித்த விவரங்கள் அடங்கிய ஆவணத்தை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் செய்தியாளர்களிடம் அந்த அமைப்பின் தேசிய ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் நடவடிக்கைகளே நாங்கள் மனித உரிமை ஆணையகத்தை நாடவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் நாங்கள் அரசியல் கைதிகளை நிரந்தரமாக விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மனுவை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு வழங்கியிருந்தோம்.

அரசியல் தீர்மானத்தை எடுத்து அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தோம். அரசிடமிருந்து உரிய சட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றியே, பயங்கரவாத தடைச்சட்ட நடைமுறைகளைப் பின்பற்றியே அரசியல்கைதிகளை விடுதலை செய்ய முடியும் என்ற தகவல் வந்துள்ளது. இது எங்களைப் பொறுத்தவரை ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பயன்படுத்தி அரசியல் கைதிகள் விடுதலை என்பது சாத்தியமற்ற விடயம் என்பது எங்கள் நிலைப்பாடு.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மனித முகம் இல்லை. அதற்கு மிருகமுகம் உள்ளதாலேயே அரசியல் கைதிகள் மோசமான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

நல்லாட்சி அரசு உண்மையிலேயே மக்களுக்கான நல்லாட்சியாக மாற வேண்டும். புத்தாண்டிலாவது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் - என்றார். (த-5)

# 10 ஆயிரம் வீடுகளை உடன் கட்டவுள்ளோம்

### வீடற்றவர்கள் ஜன. 15 க்கு முன் பதிவு செய்யுங்கள் என்கிறார் சுவாமிநாதன்

வீடுகள் இல்லாதவர்கள் ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் பிரதேச செயலகங்களில் உடன்டியாகச் சென்று பதிவுகளை மேற்கொள்ளுங்கள். 10ஆயிரம் வீடுகளை உடனடியாகக் கட்டுவதற்கு எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

காணிகள் இல்லாதவர்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு வவுனியா கற்பகபுரம் பாடசாலையில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்னும் பல காணிகளை விடுவிப்பதற்காக ஜனாதிபதியும், பிரதமரும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதற்கு ஏற்ற விதத்திலே வவுனியாவில் இருக்கும் மக்களுக்கு காணிகளைக் கொடுப்பதற்கு நாங்கள் முன்வருவோம்.

அரசின் ஒத்துழைப்பின் கீழ் 10 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு எங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். அந்த அனுமதியின்படி நீங்கள் உங்கள் செயலகத்துக்குச் சென்று கோரிக்கைகளை எழுதி பதிவு செய்ய வேண்டும். ஜனவரி மாதம் 15ஆம்திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு அந்த வீடுகளைப் பெறுவதற்குரிய தருணம் இல்லைஎன்றுதான் கூற விரும்புகின்றேன்.

நாங்கள் ஒருவருக்கும் எதிர்ப்பானவர்கள் அல்லர். ஆனால் மக்களுடைய சுயநலத்திற்கு, மக்களுடைய பொருளாதார அபிவிருத்திக்கு, மக்களுடைய முன்னேற்றத்துக்காகத் தான் நாங்கள் பாடுபடுகின்றோம்.

உங்களுக்குச் செய்ய வேண் டிய கடமைகளை நான் செய்து கொண்டு வருகின்றேன். இன்று பலர் வீடுகள் இல்லாமல் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள். அந்தக் குடி சைகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்குச் சரியான ஒரு வீட்டைக்கட்டிகொடுப்பதற்காகத்தான் முன்வந்திருக்கின்றோம் - என்றார். (த-21)

# மாடு மேய்க்கச் சென்றவர் நேற்றுச் சடலமாக மீட்பு

தென்மராட்சி, டிசெ. 29

மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்ற சிறு பண்ணையாளர் நாவற்குளிக் கரிப்பாலத்துக்கு அருகில் உள்ள கடற்கரையருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

நாவற்குளி சித்திவிநாயகர் ஆலயப் பகுதியில் வசிக்கும் இளையதம்பி தர்மகுலசிங்கம் (வயது 65) என்பவர் சிறு பண் ணையமைத்து மாடுகள் வளர்த்து வருகிறார். காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள் ளதையடுத்து பிற்பகல் வேளைகளில் அவற்றைப் பாதுகாப் பாகத் தரவைப் பகுதிகளில் மேய்ச்சலுக்கு விட்டு மாலை யானதும் அழைத்து வந்து பண்ணையில் கட்டி வைத்திருப்பார். தென்மராட்சி தெற்குப் பகுதியில் அண்மைக் காலமாக கால்நடைகள் திருட்டுப் போவதையடுத்து தானே நேரடியாக மாடுகளை அழைத்துச் சென்று மேய்ச்சலுக்கு விட்டு விட்டு காத்திருந்து வீட்டுக்கு அழைத்து வருவார். நேற்றுமுன்தினம் பிற்பகலில் மாடுகளை அழைத்துக்கொண்டு நாவற்குளி கரிப்பால மருகே மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டு விட்டு மர நிழலில் இருந்துள்ளார். மாலையானதும் மாடுகள் வீடு திரும்பியுள்ளன. இவர் வராததால் தேடிச் சென்றபோது சடலமாகக் காணப்பட்டார்.

இது தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸார் விரைந்து சடலத்தை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைத்தனர்.

முதியவரின் சாவு தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (த-9)

# பெயர்போன யு.எஸ். விடுதி

### முதலமைச்சர் பெருமிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யு.எஸ். விடுதி பல நடவடிக்கைகளுக்கு - கூட்டங்களுக்குப் பெயர் போனது. ஆனால் அவை எதுவுமே கணக்கில் எடுக்கப்படவில்லை. இன்று இங்கு ஒற்றுமையாகக் கூடியுள்ளதுபோல் ஒன்றாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் இடையிலான வருட இறுதி ஒன்றுகூடல், யு.எஸ். விடுதியில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

எங்களுக்கு இன்னமும் குறுகிய காலமே இருக்கின்றது. நாம் விரைந்து செயற்பட வேண்டும்.

இந்த விடுதியில் பல நடவடிக்கைகள் - கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. நாம் அனைவரும் ஒற்றுமையாக இங்கே ஒன்றுகூடியிருப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. நாங்கள் அனைவரும் மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். செயற்றிறனான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

நாம் மக்களுக்கு அனைத்து விதமான சேவைகளையும் செய்ய வேண்டும். மக்களின் கடப்பாடுகளை தங்கு தடையின்றி நிறைவு செய்வோம் என்று திட சங்கற்பம் பூணுவோம் - என்றார்.

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வட மாகாண சபையுடன் இணைந்து பணியாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும் நானும் வட மாகாண சபை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்வரும் காலங்களிலும் நாம் மக்களுக்கு வினைத்திறனான செயற்பாடுகளை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார்.

வடக்கு முதலமைச்சருக்கு எதிராக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் யு.எஸ். விடுதியில் கூட்டம் போட்டுத் திட்டம் தீட்டியதாக மாகாண சபை அமர்வில் உறுப்பினர்கள் சிலர் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் இலக்கியம் குறித்து இன்று ஆய்வரங்கு

## தென்கிழக்குப் பல்கலையின் ஒலுவில் வளாகத்தில்

அம்பாறை, டிசெ. 29

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக சமூக விஞ்ஞானத்துறைக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை ஈழத்துத் தமிழிலக்கியத் தொகுப்பு முயற்சிகள் எனும் தலைப்பிலான ஆய்வரங்கம் நடைபெறும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத்தலைவர்பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தலைமையில் நடைபெறஉள்ள ஆய்வரங்கத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் முதன்மை அதிதியாகக் கலந்து கொள்வார். பல்கலைக்கழகக் கலை கலாசார பீட அதிபதி எம்.எச். பௌசுல் அமீர் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்வதுடன் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம். ஏ.நுஃமான் மையப் பொருளுரையும் ஆற்றுவார்.

சுவாமி விபுலானந்தர் அரங்கில் முதலாவது அமர்வு பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் தகைசார் பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும். நாட்டாரிலக்கியத் தொகுப்புக்கள் என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் க.விசாகரூபன், ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியத் தொகுப்புக்கள் என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், நாடக எழுத்துருத் தொகுப்புகள் என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு, முன்னுரைத் தொகுப்புகள் என்ற தலைப்பில்தென்கிழக்குப்பல்கலைக்கழக மொழித்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரன், சஞ்சிகைத் தொகுப்புகள் என்ற தலைப்பில் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் றகிஸ் அப்துல்லா ஆகியோர் முதலாவது அமர்வில்ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

ம.மு.உவைஸ் அரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள்மெய்யியல்துறைத்தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் தலைமையில்நடைபெறும் இரண்டாவது அமர்வில்பெண்ணிய ஆக்கத்தொகுப்புகள் என்றதலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, இஸ்லாமிய தமிழலக்கியத் தொகுப்புகள் என்ற தலைப்பில் தென் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எம்.ஏ.எஸ்.எப். சாதியா, தனிநபர் கட்டுரைத் தொகுப்புகள் என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நதீராமரிய சந்தனம், நவீன இலக்கியத் தொகுப்புகள் என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் திருமதி றூபி வலன்ரைனா பிரான்சிஸ், பத்திரிகை எழுத்துத் தொகுப்புகள் என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

மர்ஹூம் எஸ்.எச்.ஜெமீல் அரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் தலைமையில் நடைபெறும் மூன்றாவது அமர்வில் கவிதைத் தொகுப்புகள் என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், சிறுகதைத் தொகுப்புகள் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன், சிறுவர் இலக்கிய தொகுப்புகள் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, நவீன காவியத் தொகுப்புகள் என்ற தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எப்.எம். அஷ்ரஃப், புகலிட இலக்கியத் தொகுப்புகள் என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா, ஆய்வரங்கக் கட்டுரைத் தொகுப்புகள் என்ற தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றா.ஹிலாசியாட் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

ஆய்வரங்கத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் "பிரவாகம்" எனும் ஆய்விதழின் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறவிருக்கின்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் இந்த ஆய்விதழை வெளியிட்டு வைப்பார். (து-7-30)

# பாதுகாப்புச் சேவை வழங்கலில் யாழ். பல்கலையில் முறைகேடு

## கோல்டன் ஈகிள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புச் சேவை வழங்கலில் முறைகேடு இடம்பெறுவதாக கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை நிறுவனம் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அரச தொழில் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொகையைக் குறிப்பிட்டுத் தாம் ஒப்பந்தம் கேட்கின்றபோதும் வேறு தொகையைக் குறிப்பிட்டு கேட்கும் வேறொரு நிறுவனத்துக்கே அனுமதி வழங்கப்பட்டதாக அந்த நிறுவனம் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவை உறுப்பினர்கள் சகலருக்கும் அனுப்பியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-4)

# முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவார்கள் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவிடம்

## விளக்கம் கேட்கிறது பொதுபல சேனா

மட்டக்களப்பு, டிச. 29

இந்த நாட்டில் முஸ்லிம் இளைஞர்கள் ஆயு தம் ஏந்துவார்கள் என்று இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா விடுத்துள்ள எச்சரிக்கை சாதாரணமானதொன்றல்ல. இது நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு எதிரான இனவாத எச்சரிக்கை என்று தெரிவித்துள்ள பொதுபல சேனா அமைப்பு, அவ்வாறு கூறியதற்கு விளக்கம் கேட்டு இராஜாங்க அமைச்சர் ஹிஸ் புல்லாவுக்கு கையொப்பம் இடப்படாது மின்னஞ்சல் ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 25ஆம் திகதியிடப்பட்டு மின்னஞ்சலில் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

குர்ஆனின் போதனைகளைக் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதம் அமைச்சர் ஹிஸ்புல்லா வெளியிட்டுள்ள கருத்துக் கான பதிலாகும். இந்த நாட்டில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் பௌத்த கலாசாரம் மற்றும் அகிம்சைவாத கோட்பாடுகளுக்குள் நீண்டகாலம் வாழ்ந்து வருகிறார்கள். இவ் வாறான கருத்துகளுக்கு எதிராக அவர்கள் குரல் கொடுக்க வேண்டும்.

உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாது. அரசியல் சண்டித்தனத்தை நிறுத்தி அறிவுபூர்வமான கலந்துரையாடலொன்றுக்காக முஸ்லிம் கற்றறிந்தவர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

அமைச்சர் ஹிஸ்புல்லா இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் விடுத்த எச்சரிக்கை ஞானசார தேரருடன் மிக சூட்சும மாக சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. ஞானசார தேரர் ஊடக சந்திப்பில் இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் பேசினாரா என்பதை விசாரித்து அறியவேண்டும். அவர் பேசிய பின்னர் இஸ்லாமிய அமைப்புகளும் முஸ்லிம் தலைவர்களும் மண்ணெண்ணெய்யில் பட்ட பாம்புகளைப் போல் குழப்பமடைந்துள்ளமை எமது சமூகத்துக்குள் ஏதோவொன்றினை மூடி மறைக்கும் முயற்சியல்லவா?

இஸ்லாத்தின் ஒரே இலக்கு படிமுறையான செயற்பாடுகளினால் முஸ்லிம் அல்லாத சமூகங்கள் ஏனைய மதங்களின் சின்னங்களை அழித்து நாட்டை முழுமையாக கைப் பற்றிக்கொள்வதே. ஹிஸ்புல்லாவின் எச்சரிக்கையின் பின்னணியில் மறைந் துள்ள இஸ்லாமிய போதனைகள் என்ன என்பதை அறிவது நாட்டின் எதிர்கால பாது காப்புக்கு அவசியம்.

முஸ்லிம் இளைஞர்கள் விரைவில் ஆயுத மேந்துவார்கள். அதைத் தடுப்பதற்கு எவராலும் முடியாது என்று ஹிஸ்புல்லா கூறியிருக்கிறார். அவ்வாறு அவர் ஆயுத மேந்தி களத்தில் குதிப்பது நாட்டின் பாதுகாப்புப் பிரிவினருக்கும் நிராயுதபாணிகளான பௌத்த மக்களுக்கும் எதிரானது என்பது தெளிவாகும் - என்றுள்ளது.

இது தொடர்பில் ராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்திருப்பதாவது:

பொதுலசேனா அமைப்பினால் குர்ஆன் ஹதீஸின் சில பிரிவுகளுக்கு விளக்கம் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் மூலமே கோரப்பட்டுள்ளது. கடிதம் அனுப்பியவரின் கையொப்பம் பதிவு செய்யப்படவில்லை.

கடிதத்துக்கு நிச்சயம் பதில் அனுப்புவேன். அதேவேளை கையொப்பம் எதுவுமில்லாமல் கடிதம் அனுப்பியதற்கான விளக்கத்தை பொதுபலசேனாவிடம் கோரியிருக்கிறேன். குர்ஆனையும் ஹதீஸையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். பொதுபல சேனா அமைப்பு உத்தியோகபூர்வ கையொப்பத்துடன் கடிதம் அனுப்பினால் பதில் அனுப்பப்படும். பிரபல்யமான உலமாக்களைக் கொண்ட குழுவொன்றினை அமைத்து அக்குழு மூலமே பதில் தயா ரிக்கப்படும் - என்றார். வ-4,ய,46)

# அன்பளிப்புப் பொருள்கள் பெறுவதை அரச ஊழியர்கள் தவிர்க்கவேண்டும்

## லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 29

பண்டிகைக் காலத்தில் அரச அதிகாரிகள் அன்பளிப்புப் பொருள்கள் பெறுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிவிப்பு ஒன்றை, அந்த ஆணைக்குழு, பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

"பண்டிகைக் காலங்களில் வியாபார நிறுவனங்கள் அரச அதிகாரிகளை கவருவதற்காக அன்பளிப்புப் பொருள்களை வழக்கமாக வழங்கி வருகின்றன. இதன் காரணமாக பொது மக்கள் மத்தியில் அரச அதிகாரிகள் சம்பந்தமாக தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. இந்தச் செயற்பாடுகள் ஊழல் மோசடிகளுக்கும் வழி வகுக்கும்" என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்துகளை தெரிவித்த ஊழல்களுக்கு எதிராக செயல்பட்டு வரும் டிரான்ஸ்பரன்ஸி இன்டர் நேஷனல் இலங்கை கிளையின் தலைவர் வழக்கறிஞர் லக்ஷான் டயஸ், ஊழல் விசாரணை ஆணைக்குழு எடுத்துள்ள இந்தத் தீர்மானத்தை வரவேற்பதாக அறிவித்தார்.

சிறப்பாக சுங்கம், வங்கி மற்றும் அரச துறையில் பணியாற்றும் உயர் அதிகாரிகளுக்கு பண்டிகை காலத்தில் வர்த்தக நிறுவனங்களின் மூலம் லட்சக்கணக் கான ரூபா பெறுமதியான அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படுவதாக தெரிவித்த அவர் சட்ட விரோதமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே அவர்கள் இதனை வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

இது இலஞ்சம் என்று கூறிய வழக்கறிஞர் லக்ஷான் டயஸ், இவ்வாறு அன்பளிப்பு பொருள்களை பெற்றுக் கொள்ளும் அரச அதிகாரிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார். (வ)



# சசிகலா புஷ்பா எம்.பியின் கணவர் மீது அ.தி.மு.க. அலுவலகத்தில் தாக்குதல்

தமிழ்நாடு, டிசெ. 29

தமிழ்நாடு அ.தி.மு.க தலைமை அலுவல கத்தில் அ.தி.மு.க. வினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பா ஆதரவாளர் களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் சசி கலா புஷ்பாவின் கணவர் லிங்கேஸ்வர் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார்.

"ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்கு நேற்று புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பா வருவதாகத் தகவல் பரவியது. அதனால் அங்கு பதற்றம் ஏற்படாமல் தவிர்க்க பொலி ஸார் குவிக்கப்பட்டனர். லிங்கேஸ்வர் வந்தார்.

அ.தி.மு.க. பொதுக்குழு இன்று வியாழக் கிழமை கூட்டம் நடத்தவுள்ள நிலையில், லிங் கேஸ்வர் ஓர் ஆவணத்தைக் கொடுப்பதற் காகவே அவர் நேற்று அங்கு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் சென்றதும் அ.தி.மு.க வினருக்கும், லிங்கேஸ்வர் உள் ளிட்ட ஆதரவாளர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு முறுகல் ஏற்பட்டுப் பின்னர் மோதலாக மாறியது. அதன்போதே லிங்கேஸ்வர திலகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் லிங்கேஸ்வர தில்கர் தலையில் படுகாயமடைந்தார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரைப் பொலிஸார் மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அந்தக் கைகலப்பினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 800 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 300 | 300 | 400 | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 500 | 600 | 500 | 700 | 750 | – |
| பாரை | 550 | 500 | 600 | 650 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 400 | 600 | 800 | 800 | 1000 | – |
| சீலா | 300 | 300 | 500 | 800 | 500 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 800 | 600 | 800 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | 450 | 500 | 700 | 300 |
| கிளாக்கன் | 800 | 500 | 400 | – | 450 | – | – |
| ஓரா | 400 | 300 | 400 | – | 300 | 350 | 300 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 250 | 200 | 200 | 300 | 400 | – | 350 |
| சூடை | 150 | 100 | 150 | 200 | 300 | – | – |
| ஒட்டி | 300 | 200 | 300 | 400 | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 250 | 250 | 350 | 300 | 250 | – |
| மதனம் | 150 | 200 | 200 | – | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 150 | 200 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 100 | 150 | – | 40 | – | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 50 | 60 | 60 | 60 | 50 | – | 60 |
| கத்தரி | 30 | 40 | 30 | 50 | 20–30 | 30 | – | 40 |
| கரட் | 100 | 90 | 80 | 100 | 80–100 | 120 | – | 160 |
| மரவள்ளி | 60 | 70 | 50 | 60 | 60 | 60 | – | 50 |
| பயிற்றை | 180 | 120 | 240 | 140 | 140 | 160–180 | – | 80 |
| பாகல் | 300 | 240 | 320 | 120 | 280 | 280 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 50 | 80 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 100 | 100 | 70 | 120 | – | 160 |
| பூசணி | 50 | 50 | 40 | 50 | 40 | 70 | – | 80 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 | 120 | 160 | – | 200 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 60 | 40–50 | 80 | – | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 30 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 40 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 180 | 160 | 160 | 140 | 140 | 200 | – | 500 |
| புடோல் | 80 | 70 | 100 | 60 | 60–70 | 60 | – | 180 |
| கோவா | 30 | 30 | 25 | 40 | 20 | 20 | – | 140 |
| வெண்டி | 80 | 60 | 100 | 120 | 60 | 60 | – | 80 |
| போஞ்சி | 150 | 120 | 120 | 140 | 120 | 120 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 80–100 | 140 | – | 150 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 35–40 | 30 | 30–40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–140 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 350 | 200 | 450 | – | 280 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 160 | 200 | 240 | 180 | 180 | – | 200 |
| இராசவள்ளி | 300 | 250 | 350 | 200– | 260 | 300 | – | 120 |
| முருங்கைக்காய் | – | 40 | 800 | – | 400 | – | – | 350 |

### தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

கணேசன், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை தேசிய அரசை யாராலும் அசைக்க முடியாது- என்றார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரி கையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் நீண்ட காலமாக நில விவரும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக இரு தேசியக் கட்சிகளும் ஒன்றி ணைந்து அமைத் துள்ள அரசை, அமைச்சர் டிலான் உள்ளிட்ட சிலர் 'டீல்' செய்து விமர் சித்து வருகின்றனர்.

நாம் தேசிய அரசை உருவாக்கியது, தேங்காய் துருவ அல்ல. அரசியலில் விளையாடவும் அல்ல. நாட்டில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கவே தேசிய அரசை உருவாக்கினோம் என்பதை டிலான் பெரேரா, எஸ்.பி.திசாநாயக்க போன்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில அமைச் சர்கள் மனதில் கொள்ளவேண்டும்.

புதிய அரசமைப்பை உருவாக்கிவிட்டு, அதன் பிறகு அவசியமானால், நாம் வெவ்வேறு திசை களில் விலகிச் செல்வோம். முடியுமானால், சிறிலங்கா சுதந் திரக் கட்சி தலைமையிலான அரசை அமைக்கட்டும். ஐக்கிய தேசிய கட்சிகாரர்கள் தங்கள் தலைமையிலான அரசை அமைக்கட்டும். தமிழ் முற்போக்குக் கூட் டணி உரிய முடிவை அப்போது எடுக்கும். இப்போது தேசிய அரசு நீடிக்க வேண்டும். அதை உடைத்து மகிந்தவுக்கு உதவி செய்து 'டீல்' டிலான் ஆக டிலான் பெரேரா மாறக் கூடாது.

பசில் ராஜபக்சவுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 'டீல்' இருப்பதாக அமைச்சர் டிலான் சொல்லி வருகிறார். பார்க்கப் போனால் அவருக்குத் தான் அங்கே 'டீல்' இருக்கிறதோ என்ற சந் தேகம் எமக்கு எழுகிறது. அவர்தான் 'டீல்' டிலானோ என்று கேட்க விரும்புகிறேன்.

டிலான் பொதுவாக சிறுபான்மை மக்கள் தொடர்பில் அக்கறை உள்ளவராக தன்னைக் காட்டிக்கொள்கிறார். அது நல்லது. இனப் பிரச்சினைக்குக் கூட்டாட்சித் தீர்வைக்கூட அவர் வலியுறுத்தியுள்ளார். அதுவும் நல்லது. நடைமுறையில் புதிய அரசமைப்பு வரும் வரைக்கும்கூட இந்த அரசை விட்டு வைக்க அவர் தயார் இல்லை.

இப்போது இருக்கின்ற இந்த அரசும் போய் விட்டால், இனி எந்த அரசாலும் தீர்வு ஒன் றைக் கொண்டு வரமுடியுமா? அதனால்தான், நாம் இந்த அரசை காப்பாற்ற விழைகிறோம். சிறிலங்கா சுதந்திர கட்சியைவிட ஐக்கிய தேசிய முன்னணிக்கே நாடாளுமன்றத் தில் ஆசனம் அதிகம். அவர்களுக்குத் தான் தனியாக ஆட்சியை அமைக்க வாய்ப்புகள் அதிகம். நாம் அதை இப் போது விரும்ப வில்லை என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறோம். இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தால்தான் அரசியல் சித்து விளையாட்டுகள் நின்று புதிய அரசமைப்பு வர வாய்ப்பு ஏற்படும்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி நாம் இந்தப் புரட்சியை ஏற்படுத்திய போது நீங்கள் வேலியின் அந்தப் பக்கத்தில் இருந்தீர்கள். இப்போது உள்ளே வந்து திடீர் பாசத்தை ஜனாதிபதியின் மீது பொழிகிறீர்கள். இதை மறந்துவிட வேண்டாம் - என்றார். (து-5)

### மறைந்த...



மருத்துவமனையில் உயிரிழந்தார். அவரது உடல் அஞ்சலிக் காக நாடாளுமன்றில் நேற்று வைக்கப்பட்டது. அவரது உடல் தாங்கிய பேழையை நாடாளுமன்றத்தினுள், முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, சபாநாயகர் கருஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம் பந்தன், பொது எதிரணியின் தலைவர் தினேஸ் குண வர்த்தன ஆகியோர் கொண்டுசென்றனர்.

இறுதிக் கிரியைகள் நாளைமறுதினம் சனிக் கிழமை முழு அரச மரியாதையுடன் நடைபெற வுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை வெள்ளிக் கிழ மையை தேசிய துக்கதினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. பின்னர் இந்த அறிவிப்பு மீளப் பெறப் பட்டது. (து-5)

### எத்தடை...

இல்லை என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார். தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடந்தது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

கல் வீடுகளைக் கட்டுவதற்குப் பல பிரச் சினை கள் இருக்கின்றன. மண் இல்லை, வேலை களைச் செய்வதற்கு மேசன் இல்லை. இந்தப் பிரச்சினைகளைக் கருத்தில் எடுத்துத்தான், பிரதமருடன் பேசி முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அமைப்பதற்குத் தீர்மானம் எடுத் தோம். உரும்பிராயில் இவ்வாறான வீடு அமைக்கப்பட் டிருக்கின்றது. அதனைப் பலர் சென்று பார்வையிட்டுள்ளனர். இதற்கு எதிர்ப் புத் தெரிவிப்பதற்குப் பலர் இருக்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் இப்போது பேச விரும்பவில்லை.

எதிர்ப்புகள் வந்தாலும் முன்நிர்மாணிக் கப்பட்ட வீட்டுத் திட்டம் மக்கள் நலனைக் கருத் திற் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் - என்றார்.

நிகழ்வின் முடிவில், முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுக்கு விண்ணப்பிக்காத மக்களுக்கு மாற் றுத் திட்டம் எதுவும் இருக்கின்றதா என்று பத்தி ரிகையாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, எந்தப் பதிலையும் வழங்காமல் அமைச்சர் சென்றார். (து-5-35)

### வடக்குக்கு...

வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக் கான நிதி கிடைக்காதுபோனால் அந்தத் திட் டங்களுக்கான நிதி விடுவிப்பில் அடுத்த மாதம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

கொழும்பு அரசினால் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த நிதியின் அடிப்படையிலேயே வடக்கு மாகாணத்தின் 2016ஆம் ஆண்டின் பாதீடும் தயார் செய்யப்பட்டது. அதற்கான திட்டங்களே முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால், இது வரை ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி மட்டுமே வடக்கு மாகாண சபைக்கு கொழும்பு அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாணத்துக்கான பிரமாண அடிப்படையிலான நிதியாக 575 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்ட நிலையில் இதற்கான நிதியின் 92 வீதமான நிதியே விடுவிக்கப் பட்டுள்ளது. எஞ்சிய நிதி தொடர்பில் பிரதமர் மற்றும் நிதியமைச்சர் உள்ளிட்டோர் வாக்கு றுதிகள் அளித்தபோதும், இதுவரையில் வழங்கிய நிதியை விட வழங்காதுள்ள நிதியே அதிக தொகையாகக் காணப்படுகின்றது.

நடப்பாண்டின் அனுமதிக்கமைய மேற் கொள் ளப்பட்ட திட்டங்களுக்கான நிதி கிடைக் காதுபோனால் அந்தத் திட்டங்களுக்கான நிதி விடுவிப்பில் அடுத்த மாதம் பெரும் நெருக் கடிகளை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

500 மில்லியன் ரூபா நிதி கடந்த மாத நடுப் பகுதியிலும், 100 மில்லியன் ரூபா நிதி இந்த மாத ஆரம்பத்திலும் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. (வ-4,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகரஜோதிப் பெருவிழா

காரைநகர், டிசெ.29

காரைநகர், வியாவில் ஐயனார் ஆலய மகரஜோதிப்பெருவிழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணி முதல் இடம்பெறும் மகரஜோதிப் பெருவிழாவில் ஐயனாருக்கு விசேட அபிகேம், மகர ஜோதி பதினெட்டாம் படிப் பூசை, சரணகோம் பஜனை, மகேஸ்வர பூசை என்பனவும் இடம் பெறஉள்ளன. (ற-250)

மிகக் குறைந்த செலவில்

CMA
Certified Management Accountant

**முகாமைத்துவ கணக்காளர் (Management Accountant) தகைமையைப் பெற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு**

இலங்கையின் தேசிய முகாமைத்துவ கற்கைப்பிரிவும், கனடாவின் தொழில் முறைக் கணக்காளர் (CPA) கற்கைப்பிரிவும் இணைந்து வழங்கும் தொழில் சார் கணக்காளர் கல்வியை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்ய அரிய வாய்ப்பு

- இரு வருட தொழில் அனுபவம்/ A/L 3 பாட சித்தியுடன் ஆரம்பிக்க முடியும்.
- HNDA இறுதியாண்டு பூர்த்தி செய்தவர்கள்/ கணக்கீட்டு பட்டம் உடையோர் நேரடியாக இறுதி நிலை (strategic level) கற்கையில் இணைய முடியும்.

**புதிய பிரிவுகள் 31.12.2016 ஆரம்பமாகும்.**

**WHITE LOTUS CAMPUS**
154, A1 Navalar Road, Jaffna.
021 722 3773/ 077 932 4255/ 077 622 3963

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக
க.பொ.த சாதாரணதரத்தில் 2016 இல் தோற்றிய மாணவர்கள், உயர்தரம் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கான

**மாபெரும் கருத்தரங்கு**

இடம் : உரும்பிராய் இந்துக்கல்லூரி நூற்றாண்டு மண்டபம்.
காலம் : இன்று (29.12.2016) வியாழக்கிழமை
பகல் 10.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை.

சிரேஸ்ட விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், வைத்திய கலாநிதிகள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

க.பொ.த உயர்தரத்தில் உயர்நிலை வெட்டுப்புள்ளிகள் பெறுவதற்கும் அது தொடர்பான பாடத்தெரிவும் வினாவிற்கான தேர்வும் மீள் நிரப்பு நோக்குகள் தொடர்பானது.

**அனுமதி இலவசம்**

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பங்குபற்றி பயன் பெறுங்கள்.
- ஏற்பாட்டாளர்கள் -

# சேவைநலன் பாராட்டு

## திரு. கலியாணசுந்தரம் சவுந்தரறாஜா



Congratulations

சேவை விவரம்.

1. மு/விசுவமடு ம.வி - 15.03.1990 - 08.01.1995
2. மு/ கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம் - 09.01.1995 - 01.01.2008
3. மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம் - 02.01.2008 - 21.10.2012
4. மு/வேணாவில் சிறிமுருகானந்தா வித்தியாலயம் - 22.10.2012 - 29.12.2016

சேவையிலிருந்து ஓய்வு பெறும் காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
மு/ வேணாவில் சிறி முருகானந்தா வித்தியாலயம் - புதுக்குடியிருப்பு.

# English Trainer Training Diploma (Teacher Training)

**சர்வதேச தரத்திலான ஆங்கிலத்தை முழுமையாகவும் அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்**

- ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
- " English Medium " மாணவர்களுக்கும்
- Speaking, Writing. Listening and Reading திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்குமானது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் English Medium மாணவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்கள் தெரிவு செய்கின்ற ஒரேயொரு கற்கைநெறி.

New Batches Start on 02.01.2017 9.00 a.m / 1.30 p.m Weekdays — 07.01.2017 9.00 a.m / 1.00 p.m Weekend

**ELAS**
Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின்

# மாபெரும் மலிவு விற்பனை



Table mat - ~~2400/=~~ - 1550/=



Kitchen Rack - ~~2000/=~~ - 1450/=



Iron Board - ~~1300/=~~ - 990/=



மெத்தை ~~2600/=~~ 2250/=



பிரம்பு செற் ~~16500/=~~ 14750/=



லெதர் சோபா செற் (டீபோ இலவசம்) ~~41400/=~~ 36500/=



6 கதிரை ரீப்போ ~~5500/=~~ 4000/=



ஸ்ரீல் அலுமாரி ~~10999/=~~ 8750/=



6X4 கட்டில் ~~10500/=~~ 8750/=



TV ஸ்டாண்ட் ~~10700/=~~ 8500/=

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415, 077 358 3879

ஒளி அழகனின்

# British College Of Beauty Studies





**இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி**

- அழகுக்கலை
- தையற்கலை
- சமையற்கலை
- Computer
- கேக்ஐசிங்
- ஆங்கிலம்
- Ladies Skills Development

- குறுகிய கால பயிற்சி வகுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- 3.6.மாத கால முழுநேர மற்றும் பகுதிநேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
- எங்களிடம் எந்த பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் எப்பகுதியிலும் சுயமாக உரிய தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

20ற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பொருத்தமான டிப்ளோமா பாடநெறிகள்

**01/01/2017 அன்றைய தினம் வருடத்துக்கான முதல் வகுப்புக்கள், அனைத்துப் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. பதிவுகளுக்கு முந்துங்கள்.**

வெகுவிரைவில் வேலணைப் பகுதியிலும் பயிற்சி[illegible]

Kathooriyar Road Jaffna 076 - 7011645 Palaly Road Thirunelvely Jaffna

# இஷாரா

## நியூ டிரெஸ் மார்ட் (பி.லிமிட்)

**பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இஷாரா வழங்கும் விசேட சலுகைகள்**



ரூ.5000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட பரிசுக் கூப்பன்களும், பரிசுப் பொதிகளும் வழங்கப்படவிருக்கின்றன.



இவை தவிர ரூ. 5000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவு செய்பவர்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக மவுன்டன் துவிச்சக்கர வண்டியும் மற்றும் ஐந்து பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.



**அதிர்ஷ்டம் பார்க்கப்படும் திகதி:- 22.01.2017**
**நேரம் :- மாலை 6.00 மணி**

தெரிவுசெய்யப்பட்ட ஆடைகளுக்கு, விசேடவிலைக்கழிவுகளுக்கு நாடுங்கள்

**இஷாரா நியூ டிரெஸ் மார்ட் பி.லிமிட்**

இல.199A,199B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9925

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பௌத்த மக்கள் இனவாதிகளே அல்லர்

*சமாதானத்தை சீர்குலைக்க ஒரு சிலர் முயற்சி என அமைச்சர் பௌசி சாடல்*

கொழும்பு, டிசெ. 29
சிங்கள பௌத்த மக்கள் ஒருபோதும் இனவாதிகளாக செயற்படமாட்டார்கள். இனவாதத்தைத் தூண்டுவதன் மூலமாக இந்த நாட்டிலுள்ள சமாதானச் சூழ்நிலையைச் சீர்குலைக்க முயற்சிக்கும் ஒரு சில நபர்கள் இந்த நாட்டில் காணப்படுகின்றார்கள். அவ்வாறானவர்களுக்கும் நாம் இடமளிக்கக் கூடாது.

இவ்வாறு தேசிய ஒன்றிணைப்பு மற்றும் மீள் கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுள்ள நத்தார் மரத்தை நான்காம் நாள் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மற்றும் பிரதமர் நாம் அனைவரும் சகோதரர்களாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளார்கள். நத்தார் மரம் மூலமும் அந்தச் செய்தியே எடுத்தியம்பப்படுகின்றது. இலங்கை துறைமுக அதிகார சபையின் அல்லது அரசின் எவ்வித நிதி உதவிகளுமின்றி எம்முடைய சகோதரர்கள் சேர்த்த நிதியைக் கொண்டு இந்த மரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இன்று பெரும்பாலானவர்கள் சாதி, மத பேதங்களைத் தோற்றுவித்து அரசியல் இலாபங்களை ஈட்டிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். இதுவோர் தவறான செயலாகும். நாம் அனைவரும் இலங்கையர்களே. எம்மிடம் அரசியல் நிலைப்பாடுகள் காணப்பட வேண்டுமென்ற போதிலும் சமய நிகழ்வுகள் மற்றும் தேசிய நிகழ்வுகளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தேர்தல் காலத்தில் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இந்தக் காலப் பகுதியில் இனத்தை முன்னிலைப்படுத்தி வாக்குகளை அதிகரித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் சிங்கள பௌத்த மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். ஆனாலும் நான் தேர்தலில் வெற்றி கொண்டேன். சிங்கள பௌத்த மக்கள் ஒருபோதும் இனவாதிகளாகச் செயற்படமாட்டார்கள் - என்றார். (து-5)

# ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்க வேண்டும்

*வன்னி ஆசிரிய உதவியாளர்கள் வடக்கு முதலமைச்சருக்கு மனு*

யாழ்ப்பாணம், டிசெ.29
ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எம்மை இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்து அந்தக் காலப் பகுதியிலிருந்தே எமக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கோரி வன்னி ஆசிரிய உதவியாளர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு மனு ஒன்றைக் கையளித்தனர்.

கைதடியிலுள்ள வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்துக்கு நேற்றுச் சென்ற வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகத்தினர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஊடாக முதலமைச்சருக்கான தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

'போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதிகளில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியர் சேவையாற்றி வரும் நாம் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட பின்னரும் இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமல் சம்பளமும் அதிகரிக்கப்படாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளோம்.

நீண்ட காலமாகச் சேவையாற்றி வந்த எமக்கான ஆசிரியர் நியமனம் கடந்த காலங்களில் வழங்கப்படாது நாம் புறக்கணிக்கப்பட்டோம். அந்த நிலையே தொடர்ந்தும் காணப் படுகின்றது. கடந்த 2003, 2009 ஆம் ஆண்டுகளில் வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனத்தின்போதும் வன்னிப் பகுதியைச் சேர்ந்த எமக்கு மட்டும்தான் நியமனம் வழங்கப்படவில்லை. எமக்கான நியமனத்தை வழங்குமாறு கோரி நாம் மேற்கொண்ட தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக கடந்த 01.07.2013 அன்றைய தினம் எமக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதாகக் கூறி ஆசிரிய உதவியாளர் என்னும் நியமனம் வழங்கப்பட்டு மிகக் குறைந்த சம்பளமே எமக்கு வழங்கப்பட்டது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிகளை முடித்த பின்னர் எம்மை சேவைக்குள் உள்ளீர்ப்பதாகக் கூறப்பட்டு நாம் அந்தப் பயிற்சிகளை முடித்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறி 10 மாதங்கள் கடந்துவிட்டன. எனவே எமது வயது, சேவைக் காலம், சேவை உறுதிப்படுத்தல், பதவி உயர்வு என்பவற்றைக் கருத்திற் கொண்டு எமக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட 01.07.2013 ஆம் திகதியிலிருந்து இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்து சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளையும், அந்த காலப் பகுதியிலிருந்தே கிடைக்க ஆவன செய்யுமாறு தங்களை கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது.(த-21,426)

## அதிபர்களுக்கு செயலமர்வு

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான மாநாடு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்றும் நாளையும் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரை இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அண்மையில் உள்ளீர்க்கப்பட்ட தரம் 3 அதிபர்களையும் இதில் பங்கு கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (வ-4)

# வெளியிலிருந்து வடக்குக்கு கள்ளுக் கொண்டுவரத் தடா

## தீர்மானம் நிறைவேற்றியது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், டிசெ. 29
வடக்கு மாகாணத்துக்கு வெளியிலிருந்து கொண்டுவரப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளை வடக்கு மாகாணத்துக்குள் பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்வதற்குத் தடைவிதித்துப் பிரேரணை நிறைவேற்றியது வடக்கு மாகாண சபை.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்துக்கான இறுதி அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரேரணையை முன்வைத்தார்.

"வடக்கு மாகாணத்துக்கு வெளியில் இருந்து எடுத்து வரப்படும் கள்ளை வடக்கு மாகாண அபிவருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்வதைத் தடை செய்தல் வேண்டும். வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தச் சங்கங்களின் உறுப்பினர்களால் இயற்கையாக உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்ய ஆரம்பிக்கப்பட்டவை கூட்டுறவுச் சங்கங்கள். வடக்கில் உள்ள சில அபிவிருத்திச் சங்கங்கள் வடக்கு மாகாணத் துக்கு வெளியில் இருந்து செயற்கையாக நொதிக்க வைக்கப்பட்டு உருவாக்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளைக்கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று பனை தென்னைவள உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பொது அமைப்புக்கள் பலவும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்கள்.

இவற்றைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் வடக்கு மாகாணத்துக்கு வெளியே இருந்து எடுத்து வரும் கள்ளை உடனடியாக தடை செய்ய வேண்டும். வடக்கில் இயற்கையாக உற்பத்தி செய்யும் கள்ளையே விற்பனை செய்யவேண்டும்" என்று தெரிவித்துப் பிரேரணையை முன்மொழிந்தார் அமைச்சர் ஐங்கரநேசன்.

கட்டாயமாக நிறுத்த வேண்டிய ஒரு விடயம்தான் என்று தெரிவித்த சிவனேசன் பிரேரணையை வழிமொழிந்தார்.

இதற்குத் தனது கருத்தை அவைத் தலைவரும் பதிவிட்டார். "வெளி மாவட்டத்தில் இருந்து வருகின்ற தடை செய்யப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள் இந்த மாகாணத்தில் தடை செய்யப்படுகின்றது என்ற ஒரு தீர்மானத்தை நாம் இயற்றவில்லை. அந்த ஒரு தீர்மானத்தை இயற்றும் நோக்கில் தான் அமைச்சரின் பிரேரணை அமைந்தது. நாம் முறைப்படியான தீர்மானத்தை இனித்தான் எடுக்கலாம்" என்றார் அவைத்தலைவர்.

"கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான நிறுவனங்களில்தான் கள் விற்க முடியாது என்றால், வெளியார் விற்பதையும் தடைசெய்ய வேண்டும். வடக்கு மாகாணத்திலே விற்கக் கூடாது என்று சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்" என்றார் சிவயோகன்.

"கள் உண்ணாமை என்பது எமது மதங்கள் எங்களுக்கு குறிப்பிடுகின்றது. ஆனால் கள் மருத்துவக் குணங்கள் நிறையப்பெற்றது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். வெளிநாட்டில் வாழுகின்ற உறவுகள் எமது நாட்டுக் கள்ளைக் குடிப்பதற்கு ஆவலாக உள்ளார்கள். எமது சீவல் தொழிலாளர்களின் நல்வாழ்வையும் நாம் பார்க்க வேண்டும். அவர்களின் தொழிலுக்கு ஏற்ற முறையில் உற்பத்திகளை உரிய முறையில் விற்பனை செய்ய நாம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். கள்ளுத் தவறணைகளில் குந்தி இருந்து குடிக்கின்றனர். அதற்குப் பதிலாக அங்கு கதிரைகள், மேசைகள் போடப்படவேண்டும். நாங்கள் பணத்தைப் போட்டு தரமான கள்ளு விற்பனை செய்யக்கூடிய மதுபான சாலை ஒன்றை அமைக்க முடியும். அங்கு ரின்களில் கள்ளை அடைத்து விற்கமுடியும். ஆகவே அவற்றைப் பேணவேண்டிய முறையில் நாம் எமது சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். கள் செயற்கையாக உற்பத்தி செய்வதால் போதையின் தாக்கம் அதிகமாக இருக்கின்றது" என்றார் சிவாஜிலிங்கம்.

"எமது பெண்களின் ஏதிலியான நிலைக்கு இந்த மதுவும் ஒரு காரணம். இன்றைய இந்தப் பிரேரணையினூடாக தொடர்ந்துவரும் ஆண்டிலும் வடக்கு மாகாணம் மதுபானமற்ற ஒரு மாகாணமாக வரவேண்டும். அனுமதியுள்ளதா என்று பார்ப்பதை விட ஒருமுறை நாம் முயற்சித்துப்பார்க்க வேண்டும். பின்பு அதற்கான வழிவகைகளை நாம் ஏற்படுத்தலாம்" என்று அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

"3 ஆண்டுகளாக 300 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்கு என்ன நடந்தது? அவற்றில் எத்தனை நடைமுறைக்கு வந்துள்ளன என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது. எனவே அவை தொடர்பில் ஒரு குழு ஒன்றை நியமித்து ஆராய வேண்டும். ஐங்கரநேசனின் தீர்மானத்தை அதி முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கவனத்தில் கொண்டு அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துங்கள்'' என்றார் சர்வேஸ்வரன்.

"நான் இந்தப் பிரேரணையை எதிர்க்கின்றேன். நாங்கள் போதையை ஒழிப்போம் என்று கூறிக்கொண்டு வெளியில் இருந்து வரும் கள்ளை தடைசெய்து விட்டு இன்னொன்றை முன்னேற்றுவதற்கு வழிவகுக்கின்றோம். எனவே வெளிமாவட்டத்திலிருந்துவரும் கள்ளையும் தடைசெய்ய வேண்டும். அதே சமயத்தில் முழுமையாக போதை பொருள்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார் அஸ்மின்.

அதன் பின்னர் ஐங்கரநேசன் முன்மொழிந்த பிரேரணை சபையால் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்படுவதாக அவைத்தலைவர் சிவஞானம் அறிவித்தார். (வ-4,8,ரி)

# சாரதிகளை உள்ளீர்க்க அமைச்சர் இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 29
சுகாதாரத் திணைக்கள சாரதிகளின் நேற்றைய போராட்டத்தையடுத்து அவர்களைச் சுகாதாரத் திணைக்களத்துக்குள் உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அகில இலங்கை இணைந்த சுகாதாரத் திணைக்கள சாரதிகள் சங்கத்தினர் அநுராதபுரத்தில் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தில் பணிபுரியும் சாரதிகள் சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

தமது கோரிக்கையைச் சுகாதார அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அதனையடுத்து தாம் பணிக்குத் திரும்பியதாகவும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரத் திணைக் கள சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (வ-4)

# பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளின் பெருந்திருவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி மு.ப.11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 10ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பெருந் திருவிழாக் கிரியைகள் சிவசக்தி ஸ்ரீராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

# நல்ல காலநிலை ஏற்படுத்த சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.29
நாட்டில் நல்ல காலநிலையை ஏற்படுத்தும் முகமாக நல்லூர் பிரதேச செயலகத்தின் வளாகத்தினுள் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் நாளை மு.ப. 10 மணிக்கு சிறப்பு முழுக்கு,வழிபாடுகள் பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ளன என்று நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்தார்.

"தற்போது நாட்டின் சகல பிரதேசங்களிலும் வறட்சியான காலநிலை நிலவுகின்றது. சகல பெரு நீர்ப்பாசனங்கள் உள்ளிட்ட சகல நீர்த்தேக்கங்களிலும் நீரின் கொள்ளளவு விரைவாகக் குறைகின்றது. இந்த நிலைமையானது நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் அன்றாட நடவடிக்கைகளிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த நிலையைத் தவிர்த்து அடுத்த ஆண்டு நல்ல காலநிலை அமைய வேண்டியே வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இவை நடைபெறுகின்றன" என்று அவர் தெரிவித்தார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

நத்தார்பண்டிகையை முடித்து வீடு திரும்பியபோது நடந்த விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த ஜெபரட்ணம் பிரான்சிஸ் அந்தோனி (வயது - 54) என்பவரே உயிரிழந்தார்.

"குருநகரில் உள்ள நண்பர் வீட்டில் 25ஆம் திகதி நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது கல்லுண்டாய் வெளியில் நாயுடன் மோதுண்டு பாடுகாயமடைந்தார். அதனால் வீதியில் இருந்த அவரை அந்த வீதியால் சென்றவர் ஒருவர் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தார். தலையில் காயமடைந்து கோமா நிலையில் இருந்த அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(வ-4,7)

## ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து தொண்டர் ஆசிரியர்களின் உணவு ஒறுத்தல் நிறைவு

தொண்டர் ஆசிரியர் பிரச்சினை தொடர்பில், யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் புதன்கிழமை வருகை தரும் ஜனாதிபதியுடன் பேசி முடிவு எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் தொண்டர் ஆசிரியர்களிடம் நேற்று உறுதியளித்தார். அதனையடுத்து அவர்கள து உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று மாலை நிறைவுற்றது.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்றுக்காலை தொடக்கம் காலவரையற்ற உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அவர்களது பிரதிநிதிகள் சிலரை தனது அலுவலகத்துக்குள் நேற்று மாலை ஆளுநர் அழைத்தார். ஆளுநர் சில உறுதிமொழிகளை வழங்கினார். அவற்றை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்று தொண்டர் ஆசிரியர்கள் சார்பில் ஆளுநரைச் சந்தித்த பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்ததாவது:

ஏனைய பகுதியில் உள்ளவர்களுக்கான தீர்மானம் எடுப்பதுபோல் வடக்கு மாகாணத்தில் தீர்மானங்களை எடுக்க முடியாது. இங்குள்ள பிரச்சினைகளைப் புரிந்துகொண்டுதான் தீர்மானங்களை எடுக்க வேண்டும். ஆசிரியர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தர உதவிசெய்வேன் என்று 4 மாதங்களுக்கு முன்னர்அவர்களிடம் கூறியிருந்தேன். அதன்படி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களோடு கதைத்திருந்தேன். அதற்குரிய குழு அமைத்து அமைச்சரவைப் பத்திரங்களைத் தயார் செய்யுமாறு கூறியபடி வேலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு நான் உதவி செய்தேன்.

இன்று இந்த ஆசிரியர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். பாதையை வழிமறித்திருக்கிறார்கள். இதுவே முன்னைய ஆளுநராக இருந்தால் என்ன நடந்திருக்கும் என்று எல்லோருக்கும் நன்கு தெரியும். அதனை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆசிரியர்களது பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தரும்போது கடிதம் கொடுப்பது மட்டுமல்லாமல், அவருடன் பேசிநிரந்தரத் தீர்வுக்கு உதவி செய்வேன் - என்றார். (வ-4,ரி)

(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)



# கடற்படையினரைக் கண்டித்து மன்னார் மீனவர்கள் போராட்டம்

## ஒருவர் தீக்குளிக்க முயற்சித்ததால் பதற்றம்

மன்னார், டிசெ. 29

சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படையினரால் நேற்று அனுமதி மறுக்கப்பட்டதனால் மன்னார் தாழ்வுபாடு கிராம மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியில் ரயர்களைப் போட்டு எரித்து அவர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் வீதிப் போக்குவரத்து முற்றாக முடங்கியது. மீனவர் ஒருவர் தீக்குளிக்க முற்பட்டு மண்ணெண்ணெய் ஊற்றியதால் அங்கு பதற்றமும் ஏற்பட்டது.

"வழமைபோன்று நாங்கள் நேற்றுக் காலையும் சுருக்குவலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றபோது, கடற்படையினர் வழிமறித்தனர். சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்க முடியாது, அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கடற்படையினர் எங்களைக் கடலுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

மன்னார் மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட பல தொழில் முறைமைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் தற்போதும் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அவற்றை நிறுத்தவில்லை. எங்களிடம் மட்டும் வந்து நிறுத்து என்று கூறுவது எந்த வகையில் நியாயம்?

ஏனைய இடங்களிலுள்ளவர்கள் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைக் கைவிட்டால் அல்லது அவற்றுக்குத் தடை விதித்தால் நாங்கள் சுருக்கு வலை பயன்படுத்துவதனைக் கைவிடுகிறோம் என்று கடற்படையினரிடம் கூறினோம். எனினும் எமக்கு தொழில் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை" என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

### ரயர் கொளுத்தி ஆர்ப்பாட்டம்

இதனால் மீனவர்கள் தமது கிராமத்துக்குள் வந்து வீதியை மறித்து வீதித் தடைகளைப் போட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, வீதியில் ரயர்களை எரித்துக் களேபரத்தில் ஈடுபட்டனர். தொடர் மழைக்கு மத்தியிலும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதனையடுத்து மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைத்தனர். எனினும் அரச பேருந்துகளை வழிமறித்து நீண்ட நேரம் மீனவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சுய நலத்துடன் செயற்பட்டு மீனவர்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்" என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

### தீக்குளிக்க முயற்சி

அவ்வாறு ஆர்ப்பாட்டம் நடந்துகொடிருந்தபோது திடீரென மீனவர் ஒருவர் கையில் வைத்திருந்த மண்ணெண்ணெய்யை தனது உடலில் ஊற்றித் தீக்குளிக்க முயற்சித்தார். பின்னர் ஏனைய மீனவர்களினால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் எவரும் வந்திருக்கவில்லை.

### தீர்வு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் பங்குத்தந்தை ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்து மீனவர்களுடன் உரையாடினர். அவர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பில் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

அதனையடுத்து, எதிர்வரும் முதலாம் திகதி வரை மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியும் என்றும் அதற்கிடையில் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அத னையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது

"அது தடை செய்யப்பட்ட வலை. அவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளதனைத் தெரிந்தும் அனுமதி வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தது தவறு. அனுமதிக்கப்பட்ட தொழில் முறைகளையே ஏனைய இடங்களிலுள்ளவர்கள் செய்கிறார்கள். தடை செய்யப்பட்ட பல தொழில் முறைகளை மீறிச் செய்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கிறோம்" என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மிராண்டா தெரிவித்தார். (வ-4,56)

## மாவாவுடன் ஒருவர் கைது

வவுனியா - மன்னார் வீதியில் மூன்றரைக் கிலோகிராம் மாவா போதைப் பொருளை மீட்டதாகவும் அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.நேற்று மதியம் சம்பவம் இடம்பெற்றது.

"இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் விசாரணையிலுள்ளார். அவர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்: (வ-4)

# கள்ள மாடு வெட்டுவதால் சீரழிகின்றது வேலணை

## கோயில் முன்றில் என்றும் பாராமல் கொடூரம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

தீவுப் பகுதியிலிருந்து குறிப்பாக வேலணையில் இருந்து மாடுகளைத் திருடி இறைச்சியாக்கும் போக்கு அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆலயம் என்றும் பாராது அதன் முன்றலில் வைத்து மாடுகளை அறுத்துப் பெரும் அட்டூழியம் புரிகின்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தீவகத்தில் களவாக வெட்டப்படும் இந்த மாடுகள் கடல் வழியாக யாழ். நகருக்கு எடுத்துவரப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. குடா நாட்டில் உள்ள பிரபல மாட்டிறைச்சி வியாபாரி ஒருவரின் கடைகளுக்கே இந்தக் கள்ள இறைச்சி விற்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரபல வியாபாரிக்கு அரசியல்வாதி ஒருவரின் பின்புலம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

போருக்குப் பின்னரான காலத்தில் தீவகத்தில் கட்டாக்காலி மாடுகளும் பெருகி நிற்கின்றன. அதேநேரத்தில் மக்களின் பராமரிப்பில் உள்ள ஆயிரக்கணக்கான மாடுகளும் உள்ளன. இரவு நேரத்தில் வேறு கிராமங்களில் இருந்து வேலணைக்கு வருபவர்கள் மக்களின் மாடுகளையும் கட்டாக்காலிகளையும் பிடித்து இரவோடு இரவாக அறுத்து இறைச்சியை மட்டும் எடுத்துக்கொண்டு மறைந்துவிடுகிறார்கள்.

நேற்றுமுன்தினமும் வேலணை முத்துமாரி அம்மன் கோயில் முன்றிலில் அதிகாலை வேளை மாடு ஒன்றை வெட்டி அதன் எச்சங்களை அந்தப் பகுதியிலேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்று மக்கள் தெரிவித்தனர்.

அனுமதியின்றி மாடுகள் பிடிக்கப்பட்டு அறுக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொலிஸார் காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுப்பதில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 370 குடும்பங்களுக்கு நேற்று காணி அனுமதிப் பத்திரங்கள்

## மீள்குடியேற்ற அமைச்சர் வழங்கினார்

வவுனியா கற்பகபுரம் பகுதியில் நீண்டகாலமாக காணி அனுமதிப்பதிரம் இன்றி வசித்த 370 குடும்பங்களுக்கு நேற்று காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று நண்பகல் வவுனியா கற்பகபுரம் பாடசாலையில் இடம்பெற்றது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவற்றை வழங்கினார்.

காணி அனுமதிப்பதிரம் இன்றி வசித்த குடும்பங்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தால் நடமாடும் சேவை நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 370 குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப் பட்டன.

நிகழ்வில் அமைச்சின் செயலாளர், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப் பாளர் கருணதாசா, வவுனியா இணைப்பாளர் சிவலிங்கம், வவுனியா உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம அலுவலகர், பிரதேச செயலக காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-21)



## அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை
## நல்லூர் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்றம்

**62(பகுதி) முருகன் ஒழுங்கை வட்டாரம் - 06**

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 06 இல 62, முருகன் ஒழுங்கை எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் **இரத்தினம்** எனும் பெயரில் காணப்படுகின்றது.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி, திருநெல்வேலி இறை "கருவேம்பன்" நிலபர 1 குளி 04.54 இது நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் வரையப்பட்ட 1059/2009.05.21 ஆம் இலக்கப் படத்தில் 4ஆம் இலக்கத் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனம் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான அ.இராஜரட்ணம் என்பவரால் வரையப் பட்ட 5284/25.06.2009 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் **மார்க்கண்டு இராசதுரை என்பவரிடமிருந்து அன்னலிங்கம் பெண் தேவராணி என்பவரை சென்றடைந்தது.**

இவ் உறுதியில் ஆதனத்தின் தாயுறுதி இலக்கம் குறிப்பிடப்படாமல், தனது காலஞ்சென்ற பிதா பாலன் மார்க்கண்டு என்பவரால் 1950 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி செய்யப்பட்டு வந்ததென்றும், அவர் மரணிக்க 1960 ஆம் ஆண்டிலிருந்து தனது மாதாவின் ஆட்சியிலிருந்து வந்ததென்றும், அவர் பாராதீனப்படுத்தாது தன்னிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு 1969ஆம் ஆண்டு இறந்தார் என்றும், அன்று தொடக்கம் தன்னிடமே ஆட்சிப் பொறுப்பு இருந்ததாக நன்கொடை வழங்கிய **திரு.மார்க்கண்டு இராசதுரை** வெளிப் படுத்தியுள்ளார்.

நல்லூர் பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினைத் தனது பெயருக்கு மாற்றம் செய்துதருமாறு **அன்னலிங்கம் பெண் தேவராணி** என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்,** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அன்னலிங்கம் பெண் தேவராணி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**2016.12.29** **செயலாளர், நல்லூர் பிரதேசசபை**

**SRINIVASA TRANSPORT**
கட்டடப்பொருட்கள் விநியோகிப்போர்
SRINIVASA TRANSPORT

யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா மாவட்டங்களில்

**கட்டடப் பொருட்களுக்கான**
மிகச் சிறந்த தெரிவு

- 3/4" சல்லி கற்கள்
- 1" சல்லி கற்கள்
- 1½" சல்லி கற்கள்
- "6X9" அத்திவாரக் கற்கள்
- "4X4" அத்திவாரக் கற்கள்
- கருங்கல் சிப்ஸ் வகைகள்
- கருங்கல் டஸ்ட் வகைகள்

தொடர்பு எண்களை பதிவேற்றிக்கொள்ளுங்கள்
**0777 279179 | 075 9779179**
facebook.com/transportsrinivasa
www.transportsrinivasa.com

**89/A, Soosaipillayarkulam Road, Vavuniya.**

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகள்

தென்மராட்சி, டிசெ.29

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலக தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் பிரதேச சபை செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரன் தலைமையில் அண்மையில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றன.

பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனத்தையடுத்து கச்சாய் பொது நூலக நூலகரால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. நிகழ்வில் விருந்தினர்கள் நூலகத்தில் சீரமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையினை திரை நீக்கம் செய்ததுடன், நூல்களின் கண்காட்சி மண்டபத்தையும் கூட்டாக திறந் தனர். நிகழ்வில் மூத்த பிரஜைகள் கௌரவிப்பு



நிகழ்வில் சமூக சேவையாளர் மருத்துவர் இ.கந்தையா விருந்தினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிகள், வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் அதிகளவு நேரம் நூலகத்தைப் பயன்படுத்தியோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக சாவகச்சேரி தொழில் அதிபர் த.ஜெயந்தன், மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளை முகாமையாளர் ம.மாலவன், பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-9)

## வடக்கு மாகாணசபைக்கான "மாகாணகீதம்" ஒன்றினை உருவாக்குதல்

வடக்குமாகாணசபைக்கான " மாகாணகீதம்" ஒன்றினை உருவாக்குவதற்கு வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழகமாணவர்கள், - பொதுமக்கள் மற்றும் புலம் பெயர்ந்து வாழும் மக்களிடமும் ஆக்கங்களை எதிர்பார்க் கின்றோம்.

மாகாணகீதத்திற்கான ஆக்கங்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வியல், மரபுகள், கலைகள், கலாசாரங்கள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றைத் தழுவியதாகவும் பாரம்பரிய இசையினைக் கொண்டதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

மாகாணகீதத்தினை எழுத்துருவில் தயாரித்து சமர்ப்பிக்க விரும்புவோர் வன்பிரதி (Hard Copy) மற்றும் மென்பிரதி (Soft Copy) ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிப்போர் கீதத்திற்கான ராகத்தையும் இணைத்தல் வேண்டும்.

ராகத்தை சமர்ப்பிக்க விரும்புவோர் அதனை வன்பிரதி (Hard Copy) மற்றும் இறுவட்டில் (Compact Disc) பதிவு செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆக்கங்களை சமர்ப்பிப்பவர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடியவாறு பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆக்கங்கள் சுயமாகத் தயாரித்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனையவர்களுக்கு சொந்தமானதாகவோ, பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டதாகவோ இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், சபைநடவடிக்கைக்குழு, பேரவைச் செயலகம், வடக்குமாகாணசபை ஏ9 வீதி, கைதடி என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ councilaf-fairsnpc@yahoo.com என்ற முகவரிக்கு மின்அஞ்சல் மூலமாகவோ, பேரவைச் செயலகத்தில் நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**சீ.வீ.கே. சிவஞானம்**
**அவைத்தலைவர் மற்றும்**
**தலைவர்**
**சபை நடவடிக்கைக்குழு,**
**வடக்குமாகாணசபை.**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## Temporary Lecturer in Law

University of Jaffna will entertain applications up to **09.01.2017** from suitably qualified persons for the post of **Temporary Lecturer in Law.**

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;

**OR**

2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

**OR**

3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

**Salary Scale: Rs. 35,556/= p.m (fixed)**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

**Registrar**
University of Jaffna
Jaffna
28.12.2016

(C/27298) (11,17,18)

**வேலைவாய்ப்பு**
முன்னணி தொழில் நிறுவனம் ஒன்றில் ஆண்,பெண் இருபாலாருக்கும் வேலை வெற்றிடம் உள்ளது.
- வவுனியா, மன்னார்.
- 18 தொடக்கம் 27 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 637 7575**

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மூன்று பேர் கொண்ட சிறிய வைத்திய குடும்பத்துக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 123 5630**

**பணிப்பெண் தேவை**
கொழும்பு 05 இல் உள்ள வீட்டிற்கு பணிப் பெண் தேவை. வயது 35 இற்கு மேல். சம்பளம் 20,000 ரூபாவிற்கு மேல். தங்க தனி அறை உணவு வழங்கப்படும்.

**077 226 8825**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரால் கற்றலுக்குப் பாதிப்பு

## படைமுகாமை அகற்றுமாறு பாலிநகர் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.29
முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பாலிநகர் மகா வித்தியாலயம் முன்பாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அகற்றி மாணவர்களின் இயல்பான கற்றலுக்கு வழியேற்படுத்த வேண்டும். மாந்தை கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பேசப்பட்டும் இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவ்வாறு பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் தெரிவித்தனர்.

"இந்தப் பாடசாலையில் ஆரம்பப் பிரிவுப் பாடசாலை, மேல் நிலைப்பிரிவு என்பன தனித் தனியாக இயங்குகின்றன. சுமார் ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பாடசாலைகளின் எதிரே வீதிக்கு எதிர்ப்புறமாக 8 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் இராணுவத்தினரால் அப்பக் கடையும் நடத்தப்படுகின்றது.

பாடசாலையின் பிரதான வாயிலுக்கு எதிரே படைமுகாம் அமைந்துள்ளதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். உயர்தர மாணவிகள் பலரும் மாற்றுப் பாதைகளையே பயன்படுத்துகின்றனர். மாணவிகள் சிலர் தனியே செல்ல அஞ்சி பெற்றோரைத் துணைக்கு அழைக்கின்றனர்.

இங்குள்ளவர்களின் பிரதான தொழில் விவசாயமே. தினமும் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கொண்டு சென்று விட்டு வர வேண்டியுள்ளதால் நெருக்கடிகளைச் சந்திக்கின்றோம்.

மாணவர்களின் இயல்பான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைக்கு உதவும் வகையில் இராணுவ முகாமை அகற்றவோ அல்லது வேறு பிரதேசத்துக்கு மாற்றவோ முன்வர வேண்டும். - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதேவேளை-
"இராணுவத்தினர் உள்ள நிலப் பகுதியை மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளராக முன்னர் பணியாற்றிய ஒருவர் இராணுவத்தினருக்கு 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளார். அதனால் நிலத்தை விடுவிக்க இராணுவத்தினர் மறுத்து வருகின்றனர்."- என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர். (ற-21,101)

## தொழிற்பயிற்சி தொடர்பான விழிப்புணர்வு

கிளிநொச்சி, டிசெ.29
கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் படவுள்ள தொழிற் பயிற்சிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இன்றும் எதிர் வரும் 3ஆம் திகதியும் மாவட்டத்தின் பிரதேச செயலக பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

வட்டக்கச்சிப் பிரிவு மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்வு இன்று வியாழக்கிழமை வட்டக்கச்சி சிவிக் சென்றர் பொது நோக்கு மண்டபத்திலும், முழங்காவில் பிரதேச மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முழங்காவில் பொது நோக்கு மண்டபத்திலும் நடத்தப்படவுள்ளன.

தொழிற் பயிற்சிகளில் இணையவுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு கிளி நொச்சி மாவட்ட தொழிற் பயிற்சி கல்லூரியில் கணினிப் பயிற்சி உட்பட அவர்கள் தெரிவு செய்யும் பயிற்சி நெறிகள் போதிக்கப்படும். ஒரு பயிற்சி நெறிக்கு போதுமான அளவு பயிற்சியாளர்கள் இணையும் பட்சத்தில் தனியான பயிற்சிகள் ஆரம்பிக்கப் படும் என்று தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் இரா.அகிலன் தெரிவித்தார். (ற-9)



## மருத்துவ முகாம்களால் 400 பேருக்குமேல் பயன்

வவுனியா, டிசெ.29
இயலாமையுடன் கூடிய ஆள்களை அடையாளப்படுத்தும் நோக்கில் வடமாகாண சபையின் மருத்துவ சான்றிதழ் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட வலுவிழந்தோருக்கான புனர்வாழ்வு நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கையில் சுமார் 400 பேர் நன்மையடைந்துள்ளனர் எனதெரிவிக்கப்பட்டது.

வடமாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களம் வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்தது.

வவுனியா பிரதேச செயலக பிரிவிலும், வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவிலும் ஏழு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன என்று வவுனியா மாவட்ட வலுவிழந்தோருக்கான நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு மருத்துவ முகாம்களும், வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 5 மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன. வவுனியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவகத்தைச்சேர்ந்த மருத்துவர் லவன், மருத்துவர் மதிதரன் ஆகியோரும், வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த மருத்துவர் செந்தூர் பதிராஜா தமது மருத்துவ தாதிகள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய அணியினருடன் இணைந்து மருத்துவ முகாம்களில் பங்கேற்றனர்.

மருத்துவ முகாம்களை செயற்படுத்துவதற்கு ஐ.டபிள்யு.பி.ஆர் என்ற போர் மற்றும் சமாதானத்துக்கான அறிக்கையிடல் நிறுவனம் நலிவுற்றோரின் சட்டரீதியான அடையாளப் படுத்தல் உரிமைத் திட்டத்தின்கீழ்நிதியுதவிவழங்கியது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)



கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 'பிள்ளைகளது உரிமைகள் பாதுகாப்பு' தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் நடத்தப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்பட்ட செயலமர்வில் சிறுவர் பாதுகாப்புச் சபை அலுவலர் இ.செந்தூரன் வளவாளராகக் கலந்து கொண்டார். (ற-9)

# வடக்கு முஸ்லிம்கள் விவகாரத்தில் முதலமைச்சர் கூறுவது பொய்

## இப்படிக் கூறுகின்றார் மாகாண சபை உறுப்பினர் அஸ்மின்

யாழ்ப்பாணம், டிசெ. 29
வடக்கு முஸ்லிம்கள் விவகாரம் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் பொய்யுரைக்கின்றார். அவரது இந்த நடவடிக்கை தமிழ் - முஸ்லிம் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஐ.அஸ்மின் தெரிவித்தார். அவர் அனுப்பியுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:
வடக்கு மாகாணத்தின் தமிழ், முஸ்லிம், சிங்கள மீள்குடியேற்றம் தொடர்பில் வடக்கு மாகாணசபை தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்களை நழுவவிட்டது. அதற்கான முழுமையான பொறுப்பையும் முதலமைச்சரே ஏற்கவேண்டும் என்ற குற்றச்சாட்டை பகிரங்கமாக முன்வைத்தேன். எதிர்க்கட்சி உறுப்பினரான ஜவாஹிரும் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம் மக்களுக்கான காணி விநியோக விடயத்தில் முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இரு குற்றச்சாட்டுகளையும் மறுத்த முதலமைச்சர், முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் 75 சதவீதத்துக்கும் அதிகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்து விட்டன என்றும், தமிழ் மக்களே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும் கருத்துக்களை முன்வைக்கின்றார். முதலமைச்சரினால் இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையிலும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் முஸ்லிம் பிரதிநிதிகள் பொய்யான தரவுகளை முன்வைத்து வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஒரு சில பிழையான தரவுகளையும் தன்பக்க நியாயத்தை மேலும் உறுதிசெய்யும் நோக்கோடு இணைத்துள்ளார்.

முதலமைச்சர் மேற்படி தரவுகளை தன்னுடைய பொறுப்பில் இருக்கின்ற மாகாண சபை சார்ந்த நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொண்டாரா அல்லது கொழும்பு அரசின் பொறுப்பில் இருக்கின்ற மாவட்டச் செயலகங்களில் இருந்து பெற்றுக் கொண்டாரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அவருடைய அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கின்ற தரவுகள் அனைத்தும் பொய்யானவையாகும்.

குற்றச்சாட்டுக்களை மறைப்பதற்காக முதலமைச்சர் தமிழ் முஸ்லிம் முரண்பாட்டு நிலையை மூலதனமாக்கியிருக்கின்றார். இது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும். ஒரு தவறு சுட்டிக்காட்டப்பட்டால், அல்லது ஒரு குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டால் எவ்வித காய்தல் உவத்தலுமின்றி குறைபாடு தொடர்பில் தரவுகளைச் சேகரித்து, அது தொடர்பான கருத்துக்களை பல்வேறு தரப்பினரிடமும் இருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர் கருத்துக்களை வெளியிட வேண்டுமே தவிர தன்னுடைய சொந்த விருப்புகளுக்காக தம்மைச் சூழ இருக்கின்றவர்களின் வழிகாட்டுதலின்பேரில் கருத்துக்களை முன்வைப்பது மிகவும் தவறாகும்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவு நிலைகளில் ஏற்பட்ட தவறான நடவடிக்கைகள் காரணமாக இன்று தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக எதிர்நோக்கும் சவால் எதுவென்று எல்லோருக்கும் தெரியும். தமிழ் மக்களின் தலைவர்கள் தமது தவறுகளை உணர்ந்து அவற்றுக்காக பகிரங்கமாக மனம் வருந்தி, மன்னிப்புக் கேட்டு, இதன் பின்னர் அவ்வாறான தவறுகள் இடம் பெறாது என்று கருத்துக்களை முன்வைத்து வரும் நிலையில், நல்லிணக்க செயற்பாடுகளை குழப்பும் வகையிலேயே முதல்வரின் இந்தக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

கொழும்பு அரசுக்கு ஆதரவளிக்கும் வடக்கு முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் ஒரு சிலர் முன்வைக்கும் வேற்றுமைக் கருத்துக்களையும், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் மீதான அவநம்பிக்கைகளையும் முதலமைச்சரின் கருத்துகள் மேலும் நியாயப்படுத்துவதாகவே அமையும். வடக்கில் ஒருவிதமான முரண்பாட்டுநிலையுடன் கூடிய சமூக அமைப்பை நிரந்தரமாக்குவதற்கும் இவரின் கருத்துகள் வழிசெய்யும்.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் முதல்வர் முன்வைக்கும் கருத்துக்கள் தரவுகள் அனைத்துமே மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படல் அவசியமாகும். வடக்கு மாகாணசபையில் முழுநாள் விவாதமொன்று நடத்தப்பட்டு வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலான நிலைப்பாடுகளும் கருத்துக்களும் தெளிவுபடுத்தப்படல் அவசியமாகும் என்று வலியுறுத்துகின்றேன் - என்றுள்ளது. (ற-5)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். வடமாகாணகாணி ஆணையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புள்ளி விவரங்களின்படி 2013– 2016ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் வடக்கில் 73.02 வீதமான காணிகள் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டு மீள்குடியமர்வுக்கு விண்ணப்பித்த 26 ஆயிரத்து 841 முஸ்லீம் குடும்பங்களில் 24 ஆயிரத்து 40 குடும்பங்கள் மீள்குடியர்த்தப்பட்டன. வடக்கில் முஸ்லிம் மக்களுக்கு மீள் குடியமர்விலும், காணி வழங்கலிலும் பாரபட்சம்காட்டப்பட்டது என்றகுற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று அதில் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடுகளுக்கு நிதி இல்லாததால் அரைக்கும் ஆலை வாடகைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.29

கடந்த ஆண்டு கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மீசாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கொடுக்கப்பட் அரைக்கும் ஆலை உள்ளீடுகள் கொள்வனவு செய்வதற்கான நிதி மூலங்கள் இல்லாததால் அதனை அரச நடைமுறைகளுக்கு அமைவாக பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டது.

கடந்த வாரம் வடக்கு மாகாணசபை அமர்வு நடைபெற்றது. அதில் மீன்பிடி கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரனின் பாதீட்டு உரையை



அடுத்து கருத்துத் தெரிவித்த் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் இந்த அரைக்கும் ஆலை தற்போது பாவனையின்றி இருக்கின்றது என்று சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் நேற்று முன்தினம் அங்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட போது அது வாடகைக்குக் கொடுக்கப்பட்ட விடயம் கண்டறியப்பட்டது.

"அரைக்கும் ஆலை அரச நடைமுறைகளுக்கு அமைவாக பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினருக்கு மாதம் தலா 8 ஆயிரம் ரூபாவுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான வாடகையை மீசாலை கிராம அபிவிருத்தி சங்கம் மாதாந்தம் பெற்றுக் கொள்கின்றது. எதிர்வரும் தை மாதம் முதல் அரைக்கும் ஆலையை இயக்கவுள்ளது"- என்று குறித்த பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

"அரசால், தமக்கு கொடுக்கப்படுகின்ற வளங்களை உரியமுறையில் பயன்படுத்தினால் மாத்திரமே அதனூடாக உயர்ந்த பயனை அடையமுடியும். சகல நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தி எதிர்வரும் ஆண்டு சிறப்பாக இந்த அரைக்கும் ஆலையை பயன்படுத்தி உயர் இலாபம் ஈட்ட வகைசெய்ய வேண்டும்." என்று சங்கத்தினரிடமும் அதனை மேற்பார்வை செய்யுமாறு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடமும் அமைச்சர் பணித்தார். (ற-2)



# கிளிநொச்சி சந்தை தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

## 71 மில்லியன் ரூபா நேற்று வழங்கப்பட்டது

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி சந்தையில் தீ விபத்தால் சேதமடைந்த கடை உரிமையாளர்கள் 122 பேருக்கு நட்டஈடாக நேற்று 71 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் நட்டஈட்டு நிதியை வழங்கினார்.

கிளிநொச்சிமாவட்டச்செயலகத்துக்கு நேற்று மு.ப. 10.30 மணிக்கு வந்த அமைச்சர் மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நட்டஈட்டு தொகையை வழங்கினார்.

தீ விபத்தால் அழிந்த 44 பான்சி கடைகளுக்கும், 53 புடைவைக் கடைகளுக்கும், 22 பழக் கடைகளுக்கும், 2 தையல் கடைகளுக்கும், ஒரு தேநீர் கடைக்கும் நட்டஈடுகள் வழங்கப்பட்டன. 19 வியாபாரிகளுக்கு 15 இலட்சம் ரூபா வீதமும், 13 வியாபாரிகளுக்கு பத்து இலட்சம் ரூபா வீதமும், 40 வியாபாரி களுக்கு 5 இலட்சம் ரூபா வீதமும் அவை வழங்கப்பட்டன. ஏனைய வியாபாரிகளுக்கு 3 இலட்சம் ரூபா, 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபா, ஒரு இலடசம் ரூபா என நட்டஈடுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக மாவட்டச் செயலாளர் சத்தியசீலன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ் வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன், கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் க.கம்சநாதன் ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஏற்பட்ட தீ விபத்தில் கிளிநொச்சி பொதுச்சந்தை கட்டடத் தொதியில் நூற்றுக்கணக்கான கடைகள் எரிந்து நாசமாகின. (ற-21,35)

# பொன்விழா நிகழ்வு

காரைநகர், டிசெ.29

இலங்கைப் போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையின் பொன்விழா நிகழ்வுகள் நாளை 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு காரைநகர் சாலையில் சாலை முகாமையாளர் ந.குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவர். காரை மத்தி மேம்பாட்டுக் கழக மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனம், விருந்தினர்கள் உரை, கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம்பெற உள்ளன.

இந்த சாலை 1966 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டு 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. (ற-250)



லங்கா எல்.ஓ.சி நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் பாசையூரில் சீரமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையம் வடக்கு மாகாகண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன், லங்கா எல்.ஓ.சி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சியாம் போகறா ஆகியோரால் நேற்றுத் திறக்கப்பட்டது. (ற-23)

# உதவி கோரிய மாற்றுவலுவுள்ளோரை மதிக்காத மக்கள் பிரதிநிதிகள்!

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சியில் முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ வசதியுடன் தங்கியிருப்பதற்கான இல்லம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி பெறும் நோக்கில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்குச்சென்ற மாற்றுத்திறனாளிகளை மதிக்காத மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் அவர்களை வாசலோடு திருப்பி அனுப்பினர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

கிளிநொச்சி, மாவட்ட செயலகத்தில் கடந்த 24 ஆம் திகதி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்கு 'உயிரிழை' எனும் அமைப்பினர் சென்றனர். போரில் பங்குகொண்டு காயமடைந்து முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்டு இடுப்புக்கு கீழ் இயங்காதவர்களை உள்ளடக்கிய அமைப்பே உயிரிழை அமைப்பாகும். கிளிநொச்சியில் முள்ளம் தண்டு வடம் பாதிக்கபட்டோர் மருத்துவ வசதியுடன் தங்கியிருப்பதற்கான இல்லம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி பெறும் நோக்கிலேயே மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு அவர்கள் சென்றனர்.

அமைப்பின் சார்பாக அதன் செயலாளர் சு.இருதயராஜாவும் அவருக்கு உதவியாக ஒரு இளைஞனும் சென்றனர்.மாவட்டச் செயலக நிர்வாகம் முன் அனுமதி பெறாமல் கூட்ட மண்டபத்திற்குள் அனுமதிக்க முடியாது என மறுத்தது. இந்தத் தகவலை தங்களின் நிர்வாகத்துக்கு தெரியப்படுத்திய அவர்கள் தாம் கொண்டு சென்ற கோரிக்கை கடிதத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிப்பதற்காக மாவட்ட செயலக வாசலில் சக்கர நாற்காலியில் காத்திருந்தனர்.

முதலாவதாக வட மாகாண கல்வி அமைச்சர் வந்தார். சக்கர நாற்காலியில் இருந்த வாறே கோரிக்கை கடிதத்தை வழங்கிய போது 'ஆ.. என்ன?' என வினவிய அவர் கடிதத்தை பெற்றுக் கொள்ளுமாறு தனது பிரத்தியேக செயலாளரிடம் கூறிய வாறே நடந்து சென்றார்.

இணைத் தலைவர்களில் ஒருவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரனிடம் தங்களுக்கு கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள் ளது என்பதை தொலைபேசி ஊடாக தெரியப்படுத்தினர். அவரும் வாசலில் சக்கர நாற்காலியில் காத்திருந்தவர்களை கணக்கிலும் எடுக்காது சென்று விட்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சரும் நடந்து சென்றவாறே பார்க்கிறேன் என்று கூறிய படி தனது பிரத்தியேக செயலாளரிடம் கடிதத்தை கொடுக்குமாறு கூறிவிட்டு சென்று விட்டார். பின்னர் வந்த இராஜாங்க அமைச்சர் விஜயகலாவிடமும் கோரிக்கை அடங்கிய கடிதத்தை கொடுத்தபோது கடிதத்தை பெற்றுக் கொண்ட அவர் சில நிமிடங்கள் கலந்துரையாடி அவர்களின் நிலமைகளை அறிந்து கொண்டு தொலைபேசி இலக்கத்தையும் பெற்றுச் சென்றார் -என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டுக்காக போராடி முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்டு இடுப்புக்கு கீழ் இயங்காது சக்கர நாற்காலியே வாழ்க்கை என்று இருக்கின்ற எங்களுடன் பொறுமையாக ஒரு நிமிடம் கூட பேச முடியாதவர்களாக எங்களின் பிரதிநிதிகள் உள்ளனர் என்று மக்கள் பிரதிநிதிகளைச் சந்திக்கச் சென்றவர்கள் விரக்தியோடு தெரிவித்தனர். (ற-21,35)




# வீதியோரம் குப்பை கொட்டினால் நடவடிக்கை

## வவுனியா நகர சபை செயலாளர் அறிவுறுத்து

வவுனியா, டிசெ.29

வவுனியாவில் வீதி ஓரங்களில்பொதுமக்களுக்குஅசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் குப்பைகளை கொட்டுபவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்கள் நகரை சுத்தமாக வைத்திருக்க நகர சபைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா நகர சபை செயலாளர் ஆர். தயாபரன் அறிவுறுத்தினார்.

வவுனியா புதுக்குளம் செல்லும் பிரதான வீதியில் தண்ணீர் செல்லும் வாய்க்கால் பகுதி அருகே பொதுமக்கள் குப்பைகளை வீசுவதால் அந்தப் பகுதி துர்நாற்றம் வீசுகின்றது என்று நகர சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அங்கு நேரில் சென்ற நிலமைகளை பார்த்த நகர சபைச் செயலாளர் ஊழியர்களைக் கொண்டு அந்தப் பகுயைச் சுத்தப்படுத்தினார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கழிவுகளை நகரசபை கழிவகற்றும் வாகனம் வரும் போது அவற்றை ஒப்படைக்கலாம். தண்ணீர் செல்லும் வாய்க்காலில் கொட்டுவதால் தண்ணீர் மற்றும் சூழல் மாசடைதல் போன்றன இடம் பெறுகின்றன. வீதி ஓரங்களில், வாய்க்காலில் கொட்டுவதால் குப்பைகளை அகற்ற நகரசபை ஊழியர்கள் பல சவால்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளது. வீதியோரங்களில் குப்பைகளை கொட்டுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.-என்றார்

அதேவேளை, நேற்று முன்தினம் நகரசபை ஊழியர்களால் சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் நேற்றுக் காலை மீண்டும் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் ஒன்றுபடும் காலம் கனிந்துள்ளது

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

எருவில், டிசெ.29

ஏனைய இனங்களைச்சேர்ந்த கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட்டுவரும் நிலையில் வேறுபட்டு நிற்கின்ற அனைத்துத் தமிழர்களும் ஒன்றாக இணையும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளதாகக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகமும் இணைந்து நடத்திய முன்பள்ளி ஆசிரியர்களின் வினைத்திறன் கண்காட்சி களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று அரசமைப்பு ஒன்றைத் தயாரித்து அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சில அமைச்சர்கள் அரசமைப்புத் தொடர்பில் வேறுவிதமான வதந்திகளை பரப்பி வருவதை அறியமுடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாக உள்ளது. நாங்கள் நினைத்ததைச் சாதிக்கலாம் என்று அந்த அரசியல்வாதிகள் கருதினால் அது அவர்களின் மடைமை. நீதியான நியாயமான சமத்துவமான அதிகாரத்தையே நாங்கள் கோரி வருகின்றோம். அதன்மூலமே இந்த நாட்டில் அனைவரும் சமாதானமாக இலங்கையர் என்ற வகையில் வாழமுடியும். அதன் காரணமாகவே எமது தலைவர்கள் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்துவருகின்றனர்.

தமிழ் மக்கள் அகிம்சை ரீதியாகத் தங்களின் உரிமையைப் பெறவேண் டும் என்று களத்தில் நிற்கின்றார்கள். அகிம்சை ரீதியாகவே நாங்கள் தீர்வைத் தாருங்கள் என்று கோருகின்றோம். அது சிங்கள தேசத்திற்கு அநியாயமாக இருந்தால் வெளிப்படையாகவே கூறுங்கள், அடுத்தகட்ட நகர்வுகளை நாங்கள் தமிழ் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வோம்.

இன்று அனைத்துத் தமிழர்களும் ஒன்றாக இணையும் காலம் வந்துள்ளது. ஏனைய இனக் கட்சிகள் இன்று ஒன்று சேர்ந்துள்ள நிலையில் தமிழர்களிடையே உள்ள பிரிவினைகள், பாகுபாடுகளை வேற்றுக்கட்சிகள் தமக்குச் சாதகமாக்கித் தமிழர்கள் சிலரை மாற்றி தமது சுயநலத்திற்காக உள்ளீர்த்துள்ளனர் - என்றார். (த-ய)

# அதிகாரப்பகிர்வு கிடைக்காவிடின் போராட்டம்தான்

## மாகாணசபை உறுப்பினர் கருணாகரம் தெரிவிப்பு

செங்கலடி, டிசெ.29

புதிதாக உருவாக்கப்படும் அரசமைப்பில் இணைந்த வடக்கு-கிழக்கில் முழுமையான அதிகாரப் பகிர்வு கிடைக்காவிடின் நாங்கள் மக்கள் போராட்டத்துக்குத் தாயாராக இருக்கவேண்டும் எனக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

செங்கலடி பொது நூலகத்திற்கு புத்தகம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2009 இல் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தநிலையில் பன்னாட்டு உதவியுடன் பேச்சுமூலம் ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறோம்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பான முன்னெடுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இணைந்த வடக்கு-கிழக்கில் அதிகாரங்கள் எவ்வாறு பரவலாக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் கூட்டமைப்பு மிகவும் உறுதியாகவுள்ளது. நாங்கள் போராட்டங்கள் நடத்தாமல் எதுவும் கிடைக்காது. வடக்கு-கிழக்கில் முழுமையான அதிகாரப்பகிர்வு கிடைக்கவில்லையானால் நாங்கள் மக்கள் போராட்டத்துக்குத் தயாராக இருக்கவேண்டும். நாங்கள் ஏற்கனவே ஒரு சந்ததியினரை இழந்த சமூகம். மீண்டும் ஒரு போர் ஏற்பட்டு எதிர்காலச் சந்ததியினரை இழக்கும் நிலைக்கு விட்டுச் செல்ல முடியாது.

புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் ஏழு உப குழுக்கள் மற்றும் நடைமுறைக் குழுவையும் தெரிவுசெய்து விட்டு தற்போது அந்தக் குழுக்கள் வழங்கும் யோசனைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக இல்லை என்ற கருத்து வெளிவந்துள்ளது. அப்படியானால் ஏன் அந்த உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன?.

எனவே மக்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்ற விடயத்தில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்க வேண்டும் - என்றார். (த-ய-47)

# சீருடை வவுச்சர்களை ஏற்க வங்கிகள் மறுப்பு

## பெற்றோர் மத்தியில் குழப்பம்

மட்டக்களப்பு, டிசெ.29

பாடசாலை சீருடைத் துணிக்கான வவுச்சர்களை ஏற்றுக் கொள்ள முடியாது என ஏறாவூரிலுள்ள சில அரச வங்கிகள் தெரிவித்தமையால் கல்வி அதிகாரிகள் மற்றும் பெற்றோர் மத்தியில் குழப்பம் ஏற்பட்டதாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. எஸ். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

இது குறித்துத் தமக்கு அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிலமையை சீர் செய்ததாகவும் அவர் கூறினார்.

பாடசாலைச் சீருடைத் துணிக்கான வவுச்சர்கள் டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று வவுச்சரில் அச்சிட்டுக் குறிப்பிட்டுள்ள போது, அதனை குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக எவரும் நிராகரிக்க முடியாது என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதுபற்றி பெற்றோர் கூறுகையில்,

சீருடைத் துணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட துணிக் கடைகளுக்கு நேற்றுச் சென்றபோது பாடசாலைச் சீருடைத் துணிக்கான வவுச்சர்களுக்கு இன்றுடன் சீருடைத் துணிகள் வழங்க முடியாது என்றும், அதனைப் பொறுப்பேற்க வேண்டாம் என்று வங்கி அதிகாரிகள் தெரிவித்ததாகவும் துணிக் கடைக்காரர்கள் கூறிவிட்டனர். இதனையடுத்து உடனடியாக இது குறித்து மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தோம் - என்றனர்.

இது குறித்து அங்கீகரிக்கப்பட்ட துணிக்கடைக்காரர்களைக் கேட்டபோது, இனிமேல் இலவச சீருடைத் துணிக்கான வவுச்சர்களை பெற்றுக் கொள்ளவேண்டாம் என அரச வங்கிகளின் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்தனர். (த-ய-46)

# மலையகத்தில் கூடும் சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, டிசெ 29

மலையகப் பகுதியைப் பார்வையிடுவதற்காக பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 20ஆம் திகதி முதல் மலையகப் பகுதியைப் பார்வையிடுவதற்காக அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் படையெடுத்தவண்ணமுள்ளனர்.

நுவரெலியா, யக்கல, ஹப்புத்தளை, பண்டாரவளை மற்றும் சீதையம்மன் ஆலயம் ஆகிய பகுதிகளில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகள் அதிகளவில் கூடியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த பகுதிகளிலுள்ள விடுதிகளில் பெருமளவான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கி வருவதாகவும் கூறப்பட்டது. (தி)

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 09 . 1939



இறப்பு
26 . 12 . 2016

## திருமதி பதுமநிதி இராசையா

ஊர்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பதுமநிதி இராசையா 26.12.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கமலம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவதாரணி, காலஞ்சென்ற சாரிகா (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), இளங்குமரன் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமேஸ்வரன் (ரவி), செல்வநாயகம் (பிரான்ஸ்), சிவாநந்தினி (பிரான்ஸ்), ரஜந்தி(சட்டத்தரணி) ஆகியோரின் மாமியாரும் தனுஷன், சாரங்கன், செந்தூரா, சாவித்யா, துலக்ஷன், துவாரகி, ஜெயவரினி, சத்யகி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆனந்த ஈஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிதம்பரம், சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு 56/9, புதிய வீதி, தோணிக்கல், வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இ.துஷ்யந்தன் (பிரான்ஸ்)
0033614879440
0033148896891

இ.இளங்குமரன்
56/9, புதிய வீதி, தோணிக்கல்,
வவுனியா.
077 841 0379/ 024 222 4626

(V/181)
(14,17,18,)

# திருகோணமலையில் கடுமையான வறட்சி

## 400 குடும்பங்கள் பாதிப்பு

திருமலை, டிசெ 29

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

வறட்சி காரணமாக 440 குடும்பங்களில் உள்ள 1,381 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முத்துநகர் பகுதியில் 200 குடும்பங்களும், மங்கையோது பகுதியில் 225 குடும்பங்களும் மற்றும் வெலிகம பகுதியில் 15 குடும்பங்களும் பாதிக்கப்பட் டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மட்டக்களப்பில் இவ்வருடம் 59 பேர் விபத்துக்களால் சாவு

காத்தான்குடி, டிசெ.29
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் பிரிவிலும் 2016 ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் வரை வீதி விபத்துக்களினால் 59 பேர் உயிரிழந்துள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் சார் ஜன்ட் ஜே.பி. கே.ஜெயவீர தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை அபிவிருத்திக்கான ஒன்றிணைவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக, காத்தான்குடி பஸ் தரிப்பு நிலைய நுழைவாயிலில் நிறுவப்பட்ட வீதி விபத்து தொடர்பிலான விழிப் புணர்வுப் பலகை நேற்றுத் திறந்து வைக் கப்பட்டது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
சாரதிகளுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பலவும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன. (து-ய)

## பாணின் விலை உயர்த்தப்படாது

கொழும்பு, டிசெ 29
பாணின் விலை உயர்த்தப்படாது எனத் திறைசேரி அறிவித்துள்ளது.
பாண் மற்றும் பணிஸ் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் உயர்த்தப்படவுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனத் திறைசேரியின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.
சீனி மற்றும் பாம் எண்ணெய் ஆகியனவற்றின் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இந்த வரி உயர்வுக்குச் சமாந்தரமாக வெதுப்பக உற்பத்திகளை அதிகரிக்க நேரிடும் எனவும் வெதுப்பக உரிமையாளர்கள் குறிப்பட்டிருந்தனர்.
எனினும், உள்நாட்டில் சில்லறை விலைகள் உயர்த்தப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள திறைசேரியின் அதிகாரி, உலக சந்தையில் சீனியின் விலை குறைவடைந்துள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை உயர்த்த இடமளிக்கப்படாது எனவும் அவர் கூறினார். (த)

### அபிவிருத்திச் சட்டவரைவு

# தோல்வியை கண்டுகொள்ள போவதில்லை

### கூறுகிறார் ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, டிசெ 29
அபிவிருத்திச் சட்ட வரைவு மாகாண சபைகளில் தோற்கடிக்கப்படுவதனைப் பொருட்படுத்தப் போவதில்லை என சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த சிறப்புச் சட்ட வரைவு மாகாணசபைகளில் தோற்கடிக்கப்பட்டாலும் அதனை பொருட்டாகக் கருதப் போவதில்லை.
நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு முன்வைக்கப்படும் இவ்வாறான சட்டங்களைத் தோற்கடிக்கும் அளவுக்கு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் பிழை செய்யவில்லை.
அவ்வாறு அரசு என்ன பிழைசெய்துள்ளது எனநான் மக்களிடம் கேட்கின்றேன்?
இந்தச் சட்ட வரைவைத் தோற்கடிக்கச் செய்வதன் மூலம் மகிந்தவின் தோல்வியைக் தாங்கிக் கொள்ள முடியாத நிலைமையே வெளிப்படுத்தப் படுகின்றது.
கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் மாகாண சபைகளில் ஈட்டிய வருமானம் இல்லாமல் போய்விடும் என சிலர் கருதுகின்றார்கள்.
அவ்வாறானவர்கள் இந்தச் சட்டம் செயற் படுத்தப் படுவதனை விரும்பவில்லை.
நாட்டைச் சரியான வழியில் இட்டுச் செல்லும் உன்னத இடமாக நாடாளுமன்றம் காணப்படுகின்றது.
நாட்டின் 62 லட்சம் மக்கள் வாக்களித்து ஆறு ஆண்டுகள் ஆட்சி நடத்தவே ஆணை வழங்கியுள்ளனர்- என்றார். (த)

## சுய உணர்வில்லாத சு.க. அமைச்சர்கள்

### ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ 29
அமைச்சரவையில் முன்வைக்கப்படும் பத்திரங்களில் எவற்றை அனுமதிப்பது, எதனை மறுப்பது என்ற சுய உணர்வு இல்லாதவர்களாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் காண்ப்படுவதாக பூ மொட்டு சின்னக் கட்சியின் செயலாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறப்பு அமைச்சருக்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கிவிட்டு, வெளியில் வந்து அது தொடர்பில் தமக்குத் தெரியாது எனக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர் இந்த சு.க. அமைச்சர்கள்.
நாட்டுக்கு ஏற்படும் ஆபத்து என்னவென்பதை இவர்களே அறியாதவர்களாகவுள்ளனர். இவர்களது பொறுப்பையும் சுமக்க வேண்டிய நிலையில் இன்று நாம் உள்ளோம்.
இந்த கூட்டு அரசில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களின் அதிகாரம் பூச்சியமாகக் குறைந்துள்ளதாக நாம் ஆரம்பத்திலேயே சொன்னோம். அது தற்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது-என்றார். (த)

## கேரளக் கஞ்சாவுடன் சிக்கினார் ஒருவர்

திருகோணமலை - தம்பல காமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இரவு நபரொருவரைக் கைது செய்துள்ளதாகத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித் தனர்.
தகவல் ஒன்றுக்கமைய சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் கேரளக் கஞ்சா வைக் கைப்பற்றியதுடன் அவரைக் கைது செய்தனர். (து-ய-45)

## பணிப்புறக்கணிப்பில் புத்தளம் அரச தாதியர்

### நோயாளர்கள் பாதிப்பு

கொழும்பு, டிசெ 29
மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளம் மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள்பணிப்புறக்கணிப்பில்ஈடுபட்டுள்ளதால் நோயா ளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.
புத்தளம் மற்றும் மாரவில் ஆகிய ஆதார வைத்தியசாலைகளிலும் முந்தல், ஆனைமடு, கற்பிட்டி மற்றும் மாதம்பை ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளிலும் கடமையாற்றி வரும் தாதியர்கள் நேற்று முன் தினம் ஆரம்பித்த இந்தப் பணிப் புற கணிப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.
கடந்த ஏப்ரல் மற்றும் நவம்பர் ஆகிய இரு மாதங்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தே தாதியர்கள் பணிப்புறக் கணிப் பில் ஈடுபட்டு வருகின்றனர்.
தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக அவசர சேவைகளைத் தவிர ஏனைய சேவைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாக தெரிவிக்கப் பட்டது. (த)

## அதிவேகப் பாதையில் பயணிப்போர் அவதானம்

கொழும்பு, டிசெ 29
தெற்கு அதிவேகப் பாதையில் பயணிக்கும் சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் வாகனம் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.
காலை வேளைகளில் மூடுபனி உள்ளமையால் அவதானத்துடன் வாகனம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், தெற்கு அதிவேகப் பாதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் தங்கள் வாகனத்தின் மின் விளக்குகளைப் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எஸ்.ஒபநாயக்க தெரிவித்தார்.
இதேவேளை,சாரதிகள் வேகக்கட்டுப்பாடு தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (த)

## நுவரெலியா மாடி வீடுகளில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள்




நுவரெலியா, டிசெ.29
நுவரெலியா - லிந்துலை திஸ்பனை தோட்டத்தில் மாடி வீடுக ளில் வாழும் மக்கள் பல்வேறுப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளைச் சந்தித்து வருவதாகத் தெரிவித்தனர்.
கடந்த 5 மாத காலமாக இந்தக் குடியிருப்புப் பகுதியில் உள்ள வடிகால் நிரம்பி வழிவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக மக்கள் கூறினர்.
இது தொடர்பாக குடியிருப்பாளர்கள் தரப்பில் கூறியதாவது:
லயன் அறைகளில் வாழ்ந்த இந்த மக்களுக்கு 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் லயன் கள் உடைக்கப்பட்டு மாடி வீடுகள் அமைத் துக் கொடுக்கப்பட் டன.
மாடி வீட்டில் நிம்மதியாகக் குடியேறிய மக்கள் இன்று வாய்விட்டு சொல்லமுடியாத நிலையில் ஆதங்கத்து டன் புலம்புகின்றனர்.
மழை காலங்களில் வீதி சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றது. வீடுகளின் முன்புறத்தில் உள்ள வடிகால்கள் மழை நீரால் நிரம்பி வழிவதால் நுளம்புகளின் பெருக் கம் அதிகரித்துள்ளது.
இதன் காரணமாகச் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை சுகாதாரப் பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
வீடுகளுக்கு முன் உள்ள வடிகால்களில் மூன்று அடி உயரம் வரை மண் நிரம்பியுள்ளதால் மழைநீர் தேங்கி நிற்கின்றது.
அத்தோடு மாடி வீட்டில் உள்ள மலசல கூடங்கள் மழை காலங்களில் நீர் நிரம்புவதால் அவற்றைப் பயன்படுத்த முடியாதுள்ளது.
இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தோட்ட நிர்வாகத்துக்கு தெரிவித்த போதிலும் அக்கறை காட்டவில்லை.
மலையக அரசியல்வாதிகளும் அசமந்தப் போக்கில் உள்ளனர்.
எனவே, இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (கு-ய-43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டக் கட்டுமானம் தென்மராட்சியில் நிறைவு

தென்மராட்சி, டிசெ.28
தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் இந்த வருடம் மீள்குடியமர்வு அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட 348 வீடுகள் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட கோயிற்குடியிருப்பு, எழுதுமட்டுவாழ் தெற்கு மற்றும் வடக்கு, கரம்பகம், தனங்களப்பு உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவகளில் தெரிவு செய்யப்பட்ட 290 பயனாளிகளுக்கும், இந்தியாவிலிருந்து சொந்த இடங்களுக்குத் திரும்பிய 18 குடும்பங்களுக்கும், விடத்தற்பளை, கெற்பேலி, மறவண்புலவு ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்குமாக 348 வீடுகளும் பத்து கிணறுகளும் கடந்த ஜூன் மாதத்திலும், செப்ரெம்பர் மாதத்திலும் வழங்கப்பட்டன.
அவற்றின் கட்டுமானங்கள் பயனாளிகளின் துரித முயற்சியாலும் மாவட்டச் செயலகமும் பிரதேச செயலகமும் இணைந்து வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பின் பயனாகவும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
'ஒரே நேரத்தில் பெருமளவு பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டதால் கட்டடப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. பொருள்களின் விலைகளும் இரட்டிப்பு மடங்காக அதிகரித்தன. மாவட்டச் செயலக அதிகாரிகளும், பிரதேச செயலக அதிகாரிகளும் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பின் பயனாக குறிப்பிட்ட காலப் பகுதியில் வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது. வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது அத்திபாரக் கற்கள், மணல் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினோம். வன்னிப் பகுதியிலிருந்து கற்கள் மற்றும் மணல் ஆகியவற்றை அதிக விலைகள் கொடுத்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏனைய வேலைகளுக்கான மணல் பிரதேச செயலகத்தினர் நாகர்கோவில் மற்றும் கச்சாய் பகுதிகளிலிருந்து வழங்கினர். கட்ட வேலைகளைப்பூர்த்திசெய்து கூரை வேலைகளைச் செய்தபோது ஓடுகளின் விலை திடீரென அதிகரித்தமை எமக்கு பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியது. அதிகாரிகள் எமக்குத் தந்த ஊக்குவிப்பு வேலைகளை குறித்த காலத்தில் நிறைவு செய்ய முடிந்தது.'- என்று வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவித்தனர்.
"கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பொருள்களின் விலை அதிகரிப்பைச் சமாளித்து வேலைகளை நிறைவு செய்து தமக்குரிய வீடுகளில் குடியமர்ந்துள்ளனர்.'- எனப் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-9)



# "பதவி விலக வேண்டும் வடக்கு கல்வி அமைச்சர்"

## அதிபர் சேவை தரம் 3 பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் கிடைக்காத அதிபர்கள் போராட்டம்


யாழ்ப்பாணம், டிசெ. 29
வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்திப் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர் அதிபர் சேவை தரம் 3 பரீட்சையில் சித்தி அடைந்து இதுவரை நிரந்தர அதிபர் நியமனம் வழங்கப்படாத அதிபர்கள்.
மு.ப. 9.30 மணியளவில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் முன்பாக நடத்தப்பட்டது. அமைதியான முறையில் பதாகைகள் ஏந்தியவாறு நியமனம் கிடைக்காத அதிபர்கள் போராட்டம் நடத்தினர்.
அவர்களுக்கு ஜனவரி 2ஆம் திகதி கடமையேற்ற கூடியவாறு ஒரே திகதியில் நியமனம் வழங்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி வழங்கினார்.
"மத்திய கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய சித்தி பெற்ற தரம் 3 அதிபர்களை மாகாண பாடசாலைகளில் அதிபர்களாக நிலைப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண முதலமைச்சரும் புதிய அதிபர்களை கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்ள பாடசாலைகள் உட்பட வெற்றிடமாக உள்ள அனைத்து பாடசாலைகளிலும் அதிபர்களாக நிலைப்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார்.
16.12.2016 அன்று கூடிய வட மாகாண கல்விக் குழுவின் தீர்மானத்தின்படி வடக்கு மாகாணத்தில் உள்ள வகை 3 இல் வெற்றிடமாக உள்ள 207 பாடசாலைகளில் புதிய தரம் 3 அதிபர்கள் நிலைப்படுத்தப்படுவார்கள் என்றும், ஏனையவர்களை பிரதி மற்றும் உப அதிபர்களாக ஆளணி வெற்றிடமுள்ள பாடசாலைகளில் நிலைப்படுத்தப்படுவர் என்றும் முடிவு எடுக்கப்பட்டு 02.01.2017ஆம் திகதி கடமை ஏற்கக் கூடியவாறு பாடசாலைகள் வழங்குவதற்கான செயற்பாடு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்டது.
22.12.2016 அன்று ஒருசில கடமை நிறைவேற்று அதிபர்கள் மேற்கொண்ட எதிர்ப்பை காரணம் காட்டி வட மாகாண கல்வி அமைச்சர் 04.01.2017 வரை அந்தச் செயற்பாட்டைப் பிற்போட்டிருந்தார்.
23.12.16 அன்று வட மாகாண கல்வியமைச்சின் ஒதுக்கீட்டு விவாதத்தில் எமது வேண்டுதலுக்கு அமைய வட மாகாண சபை உறுப்பினர்களால் எமது சட்ட பூர்வமானதும் நியாயமானதுமான நியமன விடயத்தை எடுத்துக் கூறிய போதும் கல்வி அமைச்சர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த முடிவை ஏற்றுக் கொள்ளாத நாம் 26.12.2016 அன்று ஒன்று கூடி மாகாண கல்வியமைச்சின் முன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வது என்றும், இல்லையேல் ஆளுநரிடம் முறையிடுவது என்று தீர்மானித்ததுடன், அதையும் ஏற்றுக் கொள்ளாவிடின் 09.01.2017 நீதிமன்றத்தை நாடுவது எனவும் தீர்மானித்தோம்."
என்று வட மாகாண அதிபர்கள் சங்கம் தெரிவித்தது.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வட மாகாண அதிபர்கள் சங்க பிரதிநிதிகளுடன் மாகாண கல்வியமைச்சின் செயலாளர் .இரவீந்திரன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் மற்றும் மாகாணக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தர்மலிங்கம் ஆகியோர் கலந்துரையாடினர். வட மாகாண கல்வியமைச்சருக்கு ஏற்கனவே முதலமைச்சரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய புதிய ஆண்டில் அதிபர்களுக்கு பாடசாலைகள் வழங்க வேண்டும் என்று அதன் போது அதிபர்கள் வலியுறுத்தினர்.
"எதிர்வரும் 2ஆம் திகதி புதிய அதிபர்களில் கடமையேற்கக் கூடியவாறு அனைவருக்கும் ஒரே திகதியில் பாடசாலைகள் வழங்கப்படும். கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்ள பாடசாலைகள் உட்பட 207 பாடசாலைகளுக்கு தரம் 3 அதிபர்கள் நிலைப்படுத்தப்படுவார்கள். ஏனையவர்களை பிரதி மற்றும் உப அதிபர்களாக ஆளணி வெற்றிடமுள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படுவார்கள். 31.12.2016 அன்று வலயக்கல்வி அலுவலங்களில் நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ள முடியும். நியமனங்களில் பாதிக்கப்படுபவர்கள் முறைப்பாடுகள் செய்து தீர்வு பெற முடியும்."- என்று கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி மொழி வழங்கினார். (ற-21,ரி)

# பிரபாகரன் இருந்திருந்தால் பிரதமர் ஆகியிருப்பார் - விஜயகலா

கிளிநொச்சி, டிசெ.29
விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இன்று அவர் பிரதமராகியிருப்பார். இவ்வாறு சிறுவர், பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சா விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.
கடந்த செம்ரெம்பா மாதம் கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
வட மராட்சி என்றால் படிப்பில் மிகவும் பெயர் பெற்ற ஒரு இடம். உங்களுக்குத் தெரியும் எங்களுடைய தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வல்வெட்டித் துறையில் எப்படி இருந்தார். எங்களுடைய ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் பிரபாரன் போல் ஒரு தலைவரைக் காண முடியாது. இன்று அவர் இருந்திருந்தால் அரசில் பிரதமராகவோ, ஓர் உறுப்பினராகவோ இருந்திருக்கலாம். ஆனால் எங்களுக்கு துரதிஷ்டவசமாக அது கிடைக்கவில்லை.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்த அழிவை மகிந்த ராஜபக்ச முடித்து வைத்தார் என்று இங்கு சில அரசியல் வாதிகள் பேசுகின்றனர். இனவாதம் பேசுவதால் எதுவும் கிடைக்காது போய் விடும். இனவாதம் பேசாது இந்த நல்லாட்சி அரசின் மூலம் எதை பெற்றுக்கொள்ள முடியும், எதைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை அறிந்து செயற்பட வேண்டும். தெற்கிலும் சரி வடக்கிலும் சரி இனவாதம் பேசுவதால் எமது சந்ததிகள்தான் பாதிப்படைகின்றன. எமது நல்லாட்சியில் மக்களுக்கான நல்ல விடயங்களே இடம்பெற்று வருகின்றன.- என்றார். (ற-21,35)

# நிரந்தர நியமனம் கோரி தொண்டராசிரியர்கள் உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29
வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும் என்று கோரி நேற்று சாகும் வரையிலான உணவுதவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித் தனர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத் தின் முன்பாக நேற்று காலை 9 மணியள வில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் களின் தொடர்ச்சியான போராட்டங்களின் பின்னர் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளன என்று தெரிவித்து வலயக்கல்வி அலுவலங்களில் தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்களுடைய பெயர்கள் காட்சிப் படுத்தப்பட்டன. எனி னும் இன்றுவரை நியமனங்கள் வழங்கப்பட வில்லை. அதையடுத்தே நேற்று போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தொண்டர் ஆசிரியர்கள் வடமாகாண ஆளு நர் அலுவலத்தின் மூன்று கதவுகளையும் பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனுக்கும், தொண்டர் ஆசிரியர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இளங்கோவன் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு தெரிவித்து அலுவலகத்தின் உள்ளே சென்றார்.
அங்கு வந்த பொலிஸார் அலுவலகத்தின் கதவுகளை மூடாது போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்தனர். 2 மணித்தியாலயங்கள் அவகாசம் கேட்ட தொண்டர் ஆசிரியர்கள் உரிய தரப்பினரு டன் பேசி பதில் தருமாறு கூறி கதவுகளைத் திறந்து போராட்டத்தை தொடர்ந்தனர்.
"கடந்த ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதியும் இதே இடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். அப்போது ஆளுநர் எங்களின் கோரிக்கைகளை ஏற்று இந்த வருடத்துக்குள் நியமனங்களைப்



பெற்றுத் தருகின்றேன் கூறி எங்களுடைய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார். அந்த நேரத்தில் வடமாகாண சபை உறுப்பினர்களான அஸ்வின், ஆனல்ட் போன்றவர்களும் வந்திருந்தார்கள். ஒக்ரோபர் மாதமளவில் நாம் பிறிதொரு போராட்டத்தை முன்னெடுத்து மத்திய கல்வி அமைச்சில் எங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்தோம். இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஜனவரி மாதம் பாடசாலைகள் ஆரம்பிக்கும்போது நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களாகச் செல்வீர்கள் எனக் கூறி உறுதியளித்திருந்தார்.
வருடம் முடிவடையப் போகிறது. இதுவரை எங்களுடைய நியமனம் தொடர்பில் சாதகமான பதில் கிடைக்கவில்லை. நாம் இன்று (நேற்று) ஒன்றுகூடி ஆளுநரிடம் எங்களுடைய கோரிக்கையை முன்வைக்க காத்திருக்கிறோம். நாங்கள் வடமாகாணத் தின் பல பிரதேசங்களில் இருந்து வந்த 800க்கும் அதிமானவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். பதில் கிடைக்கும்வரை எங்களுடை போராட் டம் தொடர்ச்சியாக நடைபெறும்."-என்று வடக்கு மாகாண தொண்டர் ஆசிரிர் சங்கத் தலைவர் இ. ஜெயராஜ் தெரிவித்தார். (ற-21,106,ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பெறுபேறு தாமதமாவது ஏன்?

## ஆசிரியர் சங்கம் கேள்வி

கொழும்பு, டிசெ. 29
2016ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறு பேறு கள் தாமதமாவது தொடர்பாக விரைவில் விசாரணை நடத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலினின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அதே வருடம் டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்ட நிலையில், 2015ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் 2016 ஜனவரி 2ஆம் திகதியே வெளியானதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வருடாந்தம் பெறுபேறுகள் இவ்வாறு தாமதமடைவதாகவும், இதனால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் ஜோசப் ஸ்ராலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பரீட்சைகள் தொடர்பில் இதுபோன்ற நிலமை ஏற்பட்டுள்ளமையானது பெரும் பிரச்சினை எனக் குறிப்பிட்டுள்ள அவர், பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமடைவது பற்றி உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (து)



ஆழிப்பேரலை இடரில் காவுகொள்ளப்பட்ட மக்களுக்கான 12 ஆம் ஆண்டு அஞ்சலி வணக்க நிகழ்வு ஜேர்மனியில் அனுஷ்டிக்கப்பட்டது. ஜேர்மனியின் பல்வேறு இடங்களிலும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆலன் நகரில் உள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற அஞ்சலியில், நகர மதகுருவுடன் இணைந்து புலம்பெயர் தாயக மக்கள் பங்கேற்றிருந்ததுடன் இதன் போது ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட மக்களையும், ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் படுகொலை செய்யப்பட்ட மக்களையும் நினைவுகூர்ந்து சுடரேற்றினர். (த)

# கூச்சலிடுவதே எதிரணியின் பிரதான பணி

## கூறுகிறார் அமைச்சர் ஜோன் அமரதுங்க



கொழும்பு, டிசெ. 29
அபிவிருத்திப் பணிகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புவது வழமையெனத் தெரிவித்துள்ள கிறிஸ்தவ விவகார; சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூச்சலிடுவதும், அபிவிருத்தி திட்டங்களை இல்லாது செய்வதுமே அவர்களின் பணி என குற்றம்சாட்டியுள்ளார்.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தை நான்காவது நாளாகத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய அவர், அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு எதிராகவும் எதிர்க்கட்சிகள் கூச்சலிடுவதாகவும் எனினும் அரசின் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது எனவும் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:
இந்த நிகழ்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் இந்த இரும்புகளை பாதுகாப்பாக வைத்திருந்து அடுத்த வருடம் இதனை விடவும் பெரிய நத்தார் மரத்தை நிர்மாணிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறுவதைத் துறைமுக நகர வேலைத்திட்டங்களைப் பார்க்கும்போதே அறிந்து கொள்ள முடியும். அதன் நிர்மா ணப் பணிகள் நிறைவ டைந்ததும் இலங்கை தெற்காசியாவின் மிகச் சிறந்த வர்த்தகமையமாக மாறும். அதே போல் நிதி மூலாதார மையமாகவும் மாறும். இலங்கையில் மிகப் பெரிய நட்சத்திர ஹோட்டல்களும் அமைக்கப்படுகின்றன. இதுவே அபிவிருத்தி எனப்படுவது. அதற்கு எதிராகக் குரல் எழுப்புபவர்கள் இருக்கின்றார்கள். அது வழமையானது. எதிர்க்கட்சிகளின் வேலை கூச்சலிடுவதும், அபிவிருத்தித் திட்டங்களை இல்லாது செய்வதுமே.

அம்பாந்தோட்டை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு எதிராகவும் கூச்சலிடுகிறார்கள். எவ்வளவு கூச்சலிட்டாலும் அரசை எதுவும் செய்ய முடியாது. ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக ஆளுவோம். இந்த காலப்பகுதிக்குள் வேலை வாய்ப்பற்றவர்களுக்கு அதனை ஏற்படுத்தி, ஆதாயத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம்- என்றார். (து)



# வீதி திருத்தத்தில் முறைகேடு மூதூரில் மக்கள் போராட்டம்

மூதூர், டிசெ. 29
திருகோணமலை - மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெய்தல் நகர் கிராமத்தில் வீதியின் விஸ்தீரணம் குறைக்கப்பட்டதைக் கண்டித்து கிராம மக்கள் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியதாவது:
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபிக்கின் நிதி ஒதுக்கீட்டில், அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் இருந்து பழைய இறங்குதுறை வரையான 800மீற்றர் வீதியைக் காப்பெற் முறையில் புனரமைப்பதாகத் தெரிவித்து அதற்கான கட்டுமானப் பொருள்களும் இறக்கப்பட்டு 2 மாதகாலம் ஆகிவிட்டது. இருந்தபோதும் அதில் 520 மீற்றர் மாத்திரமே தற்போது அமைக்கப்படும் என ஒப்பந்தகாரர்கள் தெரிவிக்கின்றனர். காரணம், மிகுதியுள்ள 280 மீற்றரை இங்குள்ள உள்ளூர் அரசியல்வாதிகள் தமது வீடுகளுக்குச் செல்வதற்கான பிரத்தியேக பாதைகளாக அமைக்க முயற்சி செய்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியபோதும் எவரும் கருத்தில் கொள்ளவில்லை.

எனவே, இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகிட்டும்வரை போராட்டம் தொடரும்-என்றனர். (த-ய-40)

# சம்பளம் எவ்வளவு? எனக்குத் தெரியாது

## கூறுகின்றார் எஸ்.பி.



கொழும்பு, டிசெ. 29
என்னுடைய சம்பளம் எவ்வளவு என எனக்குத் தெரியாது. எனது மனைவி என்னுடைய சட்டைப் பையில் பணத்தை வைப்பார். அதனையே நான் செலவு செய்து வருகின்றேன் என அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பை எதிர்த்துப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார். அதனைப்போன்று ஏன் நீங்களும் இருக்கக் கூடாது? என ஊட கவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

நாங்கள் இப்போது வயதானவர்கள். எங்களால் ரஞ்சனைப் போன்று கஷ்டமான வாழ்க்கை வாழ முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (து)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அம்பாறை, டிசெ.29
அம்பாறை - பொத்துவில் பிரதேசத்தில் உள்ளூர்த் துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பொத்துவில், தாறாம்பளை வயல்வெளியில் வைத்து உள்ளூர்த் துப்பாக்கியுடன் 55 வயதுடைய ஒருவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாறாம்பளைக் காட்டுப் பகுதிக்கு மேற்படி நபர் துப்பாக்கியுடன் வேட்டையாடச் செல்வதாக சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து, குறித்த இடத்துக்குச் சென்ற படையினர் சந்தேகநபரைக் கைதுசெய்து தம்மிடம் ஒப்படைத்ததாக பொலிஸார் கூறினர். (த-ய-49)

# கஞ்சாவுடன் கைதாகிய கான்ஸ்டபிளுக்கு மறியல்

திருமலை, டிசெ.29
திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை இம் மாதம் 30ஆம் திகதிவரை தடுத்துவைத்து விசாரணை செய்யுமாறு திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதிவான் டி.சரவணராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

திருமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஆனமடுவ, மஹவுஸ்ஸ பகுதியைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தகவல் ஒன்றுக்கமைய பொலிஸ் நிலையத்தில் உள்ள அவரது அறைக்குள் இருந்த பெட்டிக்குள்ளிருந்து ஒரு கிலோ 100 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதை அடுத்து அவரைப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். (த-ய-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி.எவ்.சி.சி வங்கியின் தனித்துவமான குடும்ப சேமிப்புத் திட்டம் அறிமுகம்



“சேமிப்புத்திட்டம் என்பது எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான நிதியியல் எதிர்காலத்தை அமைப்பதற்கான அடித்தளத்தை கட்டியமைப்பதற்காக குடும்பமாக சேமித்திடும் வாடிக்கையாளர்களைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது”

DFCC BANK

DFCC BANK

Money and Much more

## நிதியியல் பாதுகாப்பை வழங்கவும் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் நடவடிக்கை

சேமிப்புக்கு ஆதரவளித்துவரும் டி.எவ்.சி.சி வங்கியானது தனித்துவமான குடும்ப சேமிப்புத் திட்டத்தினை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

குறிப்பாக வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் பாதுகாப்பை வழங்கிடும் சேமிப்புப் பழக்கத்தை குடும்பப்பழக்கமாக மாற்றி வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையிலேயே மேற்படி தனித்துவமான திட்டத்தை அறிமுகப் படுத்தவுள்ளது.

இதன்படி 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் ஆம் திகதி வங்கியானது தனித்துவமான குடும்ப சேமிப்புத் திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளது. பாதுகாப்பான நிதியியல் அடித்தளத்தை கட்டியெழுப்ப ஆரம்பிக்கும் குடும்பங்களுக்கு இது மிகவும் உகந்தது என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள வங்கியின்முதன்மை நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் பெர்னான்டோ, இச்சிறப்புச் சலுகையை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் குடும்பமாக சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதே. இந்த செயற்பாடானது தங்களது இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள உதவும். பாதுகாப்பானதும் ஸ்திரமானதுமான நிதியியல் எதிர்காலத்தை வழங்கவும் அதைக் கட்டுப்படுத்துவதற்கான பலமான பொருளாதார அலகாக மாறி முழுக் குடும்பமும் ஒன்றாக சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

அதுமட்டுமன்றி தங்கள் பிள்ளைகள் சார்ந்து பெற்றோரே சேமிப்பு செயற்பாட்டிற்கான முன்னுதாரணமாக விளங்கும் போது பிள்ளைகளும் சேமிப்பதற்கான முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்வார்கள். இதை மகிழ்ச்சிகரமானதும் வெகுமதி அளிப்பதுமான பழக்கமாக மாற்றிட வேண்டும் என்பதுடன் கவர்ச்சிகரமான அன்பளிப்புகளை எம்மிடமிருந்து பெற்று புதுவருடத்தின் முதல் நாளை சிறப்பாக தொடங்கிட முடியும். என்றார்.

*குடும்ப அங்கத்தவர்களால் ஆரம்பிக்கப் படும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சேமிப்பு கணக்குகளின் மொத்த வைப்புத் தொகை 25 ஆயிரம் ரூபா எனில் உடனடி பணப் பரிசு அல்லது ஆயிரத்து 250 ரூபா மதிப்புள்ள பரிசுக் கூப்பன் வழங்கப்படும். இவற்றை நாடு முழுவதும் உள்ள டி.எஸ்.ஐ காட்சியறைகளிலும் சரசவி புத்தகசாலைகளிலும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.*

*மேலும் பிள்ளைகளுக்காக செய்திடும் சேமிப்பை ஊக்குவித்திட 25 ஆயிரம் ரூபாவை பிள்ளையின் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடும் போது உடனடி பணப் பரிசு வழங்கப்படும் அல்லது இரண்டாயிரத்து 500 ரூபா மதிப்புள்ள பரிசுக் கூப்பன் வழங்கப்படும்.*

வணிகம்

## நுட்பம்

### மனித உணர்வுகளை கண்டறியும் கைப்பட்டி அறிமுகம்



நவீனத்துவங்களுடன் கூடியதான தொழில்நுட்ப யுகத்துடன் நாம் ஒன்றித்து பயணிக்க வேண்டிய தருணங்களில் இன்னும் பல புதியதான அறிமுகங்களும் கண்டுபிடிப்புக்களும் எம்மிடையே வெளிப்படுகிறது. வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. அந்தவகையிலே முதன் முறையாக மனித உணர்ச்சிகளை கண்டறியக் கூடியதான இலத்திரனியல் கைப்பட்டி ஒன்று தற்போது வடிவமைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அயனோவா (Ironoyo) எனும் நிறுவனமே மேற்படி அங்கோறோ (Ankkoro) எனும் மனித உணர்வுகளை கண்டறியும் கைப்பட்டியினை வடிவமைத்துள்ளது.

2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள சி.இ.எஸ் நிகழ்வில் இந்தச் சாதனத்தின் அறிமுகம் இடம்பெறவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இச்சாதனமானது ஒருவருடைய இயல்பை எடுத்துக்காட்டுவதுடன் உடனுக்கு உடன் மாற்றமடையக் கூடியதான உணர்ச்சிகளையும் கண்டறிந்து கொள்கிறது. குறிப்பாக 11 வகையான உணர்ச்சிகளை கண்டறியக் கூடிய வகையிலே இச்சாதனம் உருவமைப்பினை பெற்றுள்ளது.

## நாடளாவிய ரீதியில் 54 சியன காட்சியறைகள் ஆரம்பம்

கூரைத்தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலே நாடு முழுவதிலும் 54 சியன காட்சியறைகளை ஐடியா குரூப் ஒவ் கம்பனி ஆரம்பித்து வைத்துள்ளது. இதன்படி உங்கள் கூரைக்கு மறு நாமம் எனும் தொனிப் பொருளின் கீழான சியன காட்சியறைகள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலான பிரதான நகரங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஐடியா குரூப் ஒவ் கம்பனியானது தூய்மையான, நீடித்துழைக்கக்கூடிய மற்றும் கவர்ச்சிகரமான பரிபூரண கூரைத் தீர்வுகளை வழங்குவதுடன் சியன காட்சியறைகளின் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு செரமிக் தகடுகள், ஏ.எஸ்.கே சீட்கள், வீரா சீட்கள், 2 இற்கு 2 சீலிங் சீட்கள், பினிஷிங் சீட்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பல தயாரிப்புகளை உள்ளடக்கியுள்ளது.

மேலும் செரமிக் தகடுகள் ஆறு வர்ணங்களில் விற்பனை செய்யப்படுவதுடன் பாரம்பரிய சிங்கள ஓடுகள் கூரைகளால் வழங்கப்படும் குளிர்ச்சியான அம்சம் இதிலும் வழங்கப்படுவதாகசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக சிங்கர் சிறிலங்கா தெரிவு

இலங்கையிலுள்ள 10 தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக நடப்பாண்டிலும் சிங்கர் சிறிலங்காவை இலங்கை வர்த்தகசம்மேளனம்தெரிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற மிகச் சிறந்த நிறுவனப் பிரஜைகளுக்கான விருது வழங்கும் நிகழ்விலேயே சிங்கர் சிறீ லங்கா மேற்படி கௌரவித்தினை பெற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் மிகச் சிறந்த செயற்பாட்டுக்கான துறைசார் விருதாக சமையற்கலை போதனை திட்டத்துக்கான மிகச் சிறந்த நிலைபேறாண்மை வேலைத்திட்டத்துக்குரிய திறமைச் சான்றிதழும் சிங்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள சிங்கரின் விற்பனை மற்றும் வர்த்தகப் பணிப்பாளர் மகேஷ் விஜேரத்ன,

“2016ஆம் ஆண்டிலும் மிகச் சிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தினால் எமது நிறுவனம் கௌரவப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து நாம் பெருமையடைகிறோம். எமது முன்முயற்சிகளின் தரச்சிறப்பை உள்ளக ரீதியாக மீளாய்வு செய்வதுடன் இந்த கௌரவம் அமைந்து விடாது புகழ்பெற்ற நடுவர்களின் மதிப்பீட்டுக்கு சமர்ப்பிக்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளது. இது எமது தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கு உதவும். எமது வெற்றிக்கு ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்த சகல சிங்கர் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்” என்றார்.

இலங்கையில் நிறுவன ரீதியான நிலைபெறு தன்மையின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதும் மக்கள், புவி மற்றும் இலாபத்தை மையமாகக் கொண்ட வியாபாரக் கொள்கையை ஊக்குவிப்பதுமே மிகச் சிறந்த நிறுவனப் பிரஜை நிலைபெறுதகு விருதுகள் வழங்கப்படுவதன் நோக்கமாக காணப்படுகிறது.

அதாவது, கிடைக்கக்கூடிய வளங்களை மதிநுட்பமாகப் பயன்படுத்துதல், மாசடைதலை இயன்றளவு குறைத்தல், தொழிலாளர் கள் மற்றும் பாவனையாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துதல், பொது



வாகச் சகல மக்களினதும் நலன்களைப் பேணுதல் ஆகிய கொள்கைகளின் அடிப்படையிலான செயன்முறைகளையும் அமைப்புக்களையும் பயன்படுத்தி பொருள்கள் சேவைகளை உருவாக்கும் சிறந்த நடைமுறைகளையே இது குறித்துக்காட்டுகிறது என்பது நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் பல அணுவாயுதங்
# பரிசோதிக்கவுள்ளது வடகெ

வடகொரியா, அடுத்த வருடத்தின் இறுதிப் பகுதியில் சக்தி வாய்ந்த அணுவாயுதங்களை வைத்திருக்கும் என்று அந்த நாட்டிலிருந்து சென்று தென்கொரியாவிடம் தஞ்சம் புகுந்த தெ யொங் என்ற மூத்த அதிகாரி தெரிவித்தார்.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறுபட்ட அணுவாயுத சோதனைகளை நடத்தி வருகிறது. இதனால் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியாவின் முக்கிய ஆதரமான நிலக்கரி விற்பனையை முடக்கும் வகையில் எந்தவொரு நாடும் வடகொரியாவிடமிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என்று அண்மையில் தடையுத்தரவு பிறப்பித்தது. இதன் மூலம் வடகொரியா தனது முக்கிய வருவாயை இழந்து அணுவாயுத சோதனையைக் கைவிடும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம். அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் தனித்தனியாக வடகொரியாவுக்கு சில தடைகளை விதித்திருந்தன. ஆனால் தனக்கெதிரான தடைகளைக்கண்டு வடகொரியா மிரண்டுவிடவில்லை. தனது வலிமையைப் பறைசாற்றும் வகையில் மிகப்பெரிய இராணுவத் தளபாட அணிவகுப்பை அண்மையில் நடத்தியது.

அணிவகுப்பைத் தொடர்ந்து "ஐ.நா. சபையின் தடை சிறுபிள்ளைத்தனமானது" என்று



வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தெ யொங்கின் கருத்தும் மிக முக்கியமானது எனப் பார்க்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு இறுதிக்குள் பல்வேறுபட்ட அணுவாயுதங்களை வைத்திருப்பதே வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன்னின் திட்டம். அவர் தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த

தொடர்
உன்ன
மிகவும்
தெரிவி



## சஹைத் புறக்கணிப்பால் ருமேனியாவில் பரபரப்பு

புகாரெஸ்ட், டிசெ. 29

ருமேனியாவின் பிரதமராக சஹைத் என்பவரை அந்த நாட்டின் சமூக ஜனநாயகக் கட்சி மேற்கொண்ட பரிந்துரையை ருமேனிய ஜனாதிபதி புறக்கணித்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் அந்த நாட்டில் சில அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன. ருமேனியா நாட்டில் சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் இடதுசாரிகளின் சமூக ஜனநாயக கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. இதனையடுத்து, பிரதமர் பதவிக்கு முதல் பெண்ணாகவும், முதல் இஸ்லாமியநபராகவும்செவில்சஹைத்தை பரிந்துரை செய்ய அந்தக் கட்சி முடிவு செய்தது. இந்த பரிந்துரை ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் சஹைத் பிரதமராவதை ஜனாதிபதி விரும்பவில்லை. 52 வயதாகும் சஹைத்க்கு 5 மாத காலம்தான் அமைச்சர் அனுபவம் உள்ளது. போதிய அனுபவமற்றதால் தான் அவர் நிராகரிக்கப்பட்டார் என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது. இருப்பினும் சஹைத்தின் புறக்கணிப்பு அங்கு சில அதிர்வலைகளை ஏற்படுத்தியது. (ம)

## மோடிக்குக் கண்டனம்




பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்புக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்ததற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு சிவசேனா கடும் கண்டனம் தெரிவித்தது.

சத்ரபதி சிவாஜி தனது எதிரிகளான அவுரங்கசீப், அப்சல்கான், சாயிஸ்டா கான் ஆகியோர்களுக்கு என்றுமே வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டதில்லை. ஆனால் அவரது வழியில் நடப்பதாக தெரிவித்த பிரதமர் மோடி பாகிஸ்தான் பிரதமருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். மராட்டிய மன்னர் சிவாஜியை வெறும் அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்துவது தான் அரசியல் வாதிகளின் வாடிக்கையாகி வருகிறது என்று சிவசேனா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (ம)



இரண்டாம் உலகப் போரின் போது, ஹவாய் தீவில் உள்ள பியர்ல் ஹார்பர் பகுதியில் 1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்கக் கடற்படைத் தளத்தின் மீது ஜப்பான் தாக்குதல் நடத்தியது. 2 ஆயிரத்து 400 அமெரிக்கச் சிப்பாய்கள் குறித்த தாக்குதலில் கொல்லப்பட்டனர். அமெரிக்காவுக்குச் சொந்தமான பல கோடி பெறுமதியான போர்த் தளபாடங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. குறித்த தாக்குதலில் உயிரிழந்த சிப்பாய்களுக்கு அமெரிக்கா நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தியது. ஜப்பான் பிரதமர் சின்சோ அபே, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆகியோரும் குறித்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். "இனி ஒருபோதும் இவ்வாறான தாக்குதலை ஜப்பான் நடத்தாது" என்று சின்சோ உறுதியெடுத்தார். "இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பு" என்று ஒபாமா பாராட்டினார். (ம)

ஆப்
தலி
புக்கு
போ
ஆதி
ரஷ்
எச்ச
பிரதி
கூட்
நை
ஆப்
பட்ட
பாகி
கார்
முக்
தெரி

அ

அதி
பை
தொ
அந்
40
அள
அெ
ஆய
கோ
பில்
வுக்
மேற்
அெ
ஆய
ளது
ஆய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்களை
காரியா



..டர்ந்தும் ஆர்வமாய் உள்ளார். கிம் யோங் ..ன்னில் அந்த லட்சியத்தைத் தகர்ப்பது ..வும் கடினம் என்று தெ யொங் மேலும் ..ரிவித்தார். (ம)

## ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ். அச்சுறுத்தல்

தலிபான் ஆயுததாரிகளால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிய ஆப்கானிஸ்தானில் தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் ஆதிக்கமும் அதிகரித்து வருகிறது என்று ரஷ்யா, பாகிஸ்தான், சீனா நாடுகள் கூட்டாக எச்சரிக்கை விடுத்தன. இந்தமூன்றுநாடுகளின் பிரதிநிதிகள்கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் வைத்தே ஆப்கானுக்கு இந்த எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டது.

பாகிஸ்தான் எல்லையை ஒட்டி உள்ள நான் கார்ஹார் மாகாணம் ஊடுருவல்காரர்களுக்கு முக்கியமான பகுதியாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)



# எச்சரிக்கும் விதத்தில் பாயவில்லை அக்னி

## இந்தியா கருத்து

புதுடெல்லி, டிசெ. 29

அணு ஆயுதங்களை சுமந்தபடி கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன அக்னி-5 ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்தது இந்தியா. இந்தச் சோதனை எந்தவொரு நாட்டையும் எச்சரிக்கும் விதத்தில் அமையவில்லை என்று இந்தியா தெரிவித்தது.

நான்கு வகையான அக்னி ஏவுகணைகள் ஏற்கனவே இந்தியாவிடம் உள்ளன. அக்னி-1 ஏவுகணை 700 கி.மீ. தூரமும், அக்னி-2 ஏவுகணை 2 ஆயிரம் கி.மீ. தூரமும், அக்னி-3 ஏவுகணை 2 ஆயிரத்து 500 கி.மீ. தூரமும் அக்னி 4 ஏவுகணை 3 ஆயிரத்து 500 கி.மீ. தூரத்துக்கும் சென்று தாக்கும் திறன் படைத்தவை. அந்த வரிசையில் கடந்த திங்கட்கிழமை சோதிக்கப்பட்ட அக்னி-5 ஏவுகணை 5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் வல்லமை பெற்றது. 5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளன. அக்னி-5 ஏவுகணை சோதனையின் மூலம் தற்போது அந்த நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது.

இந்தியாவின் இந்த அடைவு சீனாவுக்கு பெரும் அச்சுறுத்தல் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஊடகங்களின் இந்தக் கருத்துக்கு சீனாவின் தரப்பால் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு அக்னி-5 ஏவுகணை சோதனை நடத்தப்பட்டிருக்கும் என்று சீனா நம்புகிறது. தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் அமைதி, அபிவிருத்தி ஏற்பட்டு உறுதித்தன்மை நிலவவேண்டும் என்பதை சீனா எப்போதும் விரும்புகிறது. அக்னி-5ஏவுகணையை இந்தியா சோதித்ததும், சில ஊடகங்கள், சீனாவை குறிவைத்தே இந்தச் சோதனை நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தன. சீனாவும், இந்தியாவும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளாகவும், வேகமாக வளரும் பொருளாதார சக்திகளாகவும் உள்ளன. சீனாவும், இந்தியாவும் எதிரி நாடுகள் அல்ல, கூட்டாளி நாடுகள். அதேபோல், ஏவுகணைச்சோதனை தொடர்பான விவகாரத்தில் தன்னிச்சையாக வதந்திகளைப் பரப்புவதையும், தனது கருத்துகளை திணிப்பதிலும் ஊடகங்கள் ஈடுபடக்கூடாது என்று சீனாவின் அயலுறவுத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் சுன்யிங் தெரிவித்தார்.

எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டையும் குறிவைத்து அக்னி-5 ஏவுகணைச் சோதனை நடத்தப்படவில்லை.

பன்னாட்டு விதிகளின் படியே இந்தச் சோதனை நடத்தப்பட்டது என்று இந்திய அயலுறவுத்துறைசெய்தித்தொடர்பாளர்விகாஸ் தெரிவித்தார். (ம)

# ரஷ்ய விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டது கருங் கடலில்



மொஸ்கோ, டிசெ. 29

கருங்கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளான ரஷ்ய இராணுவ விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சிரியாவில்நடைபெறும் உள் நாட்டுப் போர் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான போர் ஆகியவற்றுக்காக அங்கு முகாமிட்டிருக்கும் ரஷ்யப் படையினருக்கு தேவையான பொருள்கள் மற்றும் சிப்பாய்களுடன் புறப்பட்டுச் சென்ற விமானம் கருங்கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த இராணுவ இசைக்குழுவைச் சேர்ந்த 64 பேர் உட்பட 92 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்களையும் விமானத்தின் பாகங்களையும் தேடும் பணியில் ரஷ்யா தீவிரம் காட்டியது. இந்த நிலையில் விமானத்தின் கறுப்புப்பெட்டி நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. முன்னதாக விமானத்தின் ஏனைய சில பாகங்களும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)




# சசிகலாவை ஏற்கமாட்டோம்; சென்னையில் ஆர்ப்பாட்டம்

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக சசிகலா பதவியேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அவரது தலைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடைபெற்றது.

அ.தி.மு. கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சசிகலா பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்பார் என்று பரவலாக கருத்துக்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையிலேயே இந்த உணவு ஒறுப்புப் போராட்டம் நடைபெற்றது. சட்ட பஞ்சாயத்து இயக்கமே குறித்த போராட்டத்தை ஏற்பாடு செய்தது.

ஓமந்தூராரும், காமராஜரும், அண்ணாவும் அலங்கரித்த பதவிகளில் விரைவில் சசிகலா அமர்வதற்கான அறிகுறிகள் பலமாகத் தென்படுகின்றன. ஆளுங்கட்சியின் முன்னணி நிர்வாகிகளே சசிகலாவைத் தலைமை தாங்க வரும்படி கேட்டு வருவதை தினமும் பார்க்கிறோம். சென்னையில் நாளை (இன்று) நடைபெறவுள்ள அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் சசிகலா அக்கட்சியின் பொதுச் செயலாளராக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆளுங்கட்சிக்கும், ஆட்சிக்கும் சசிகலா தலைமை ஏற்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்ற மாயை கட்டமைக்கப்பட்டு வருகிறது. ஆனால், உண்மை இதுவல்ல. கோடிக்கணக்கான மக்கள் குமுறிக் கொண்டுதான் இருக்கிறார்கள் என குறித்த அமைப்பின் தலைவ.. இளங்கோ தெரிவித்தார். (ம)

# ஆயுத விற்பனையில் அமெ. முதலிடம்; பிரான்ஸ், ரஷ்யா அடுத்தடுத்த இடத்தில்

அதிகளவான ஆயுதங்களை விற்பனை செய்வதில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அந்த நாடு கடந்த வருடத்தில் மட்டும் 40 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு வியாபாரம் செய்துள்ளது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ஆயுத விற்பனையில் பிரான்ஸ் கோலோச்சுகிறது. கடந்தாண்டில் 15 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு ஆயுத வர்த்தகத்தை பிரான்ஸ் மேற்கொண்டுள்ளது. கடந்தாண்டில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸின் ஆயுத சந்தை மதிப்பு ஏற்றம் கண்டுள்ளது.

ஆயுத விற்பனையில் மற்றொரு ஜாம்பவானாகத் திகழ்ந்த ரஷ்யா பின்னடைவைச் சந்தித்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் 11.2 பில்லியன் டொலர் அளவுக்கு ஆயுத வர்த்தகம் செய்திருந்தது. ஆனால், 2015 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஆயுத வர்த்தகம், 11.1 பில்லியன் டொலராக சரிந்துவிட்டது.

2014 ஆம் ஆண்டில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்த சீனா, 2015 ஆம் ஆண்டில் 6 பில்லியன் டொலர் என்ற அளவுக்கு வர்த்தகத்தை அதிகரித்துள்ளது.



ஆயுத கொள்முதலைப் பொறுத்தவரை, 17 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு ஆயுத ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, கத்தார் முன்னிலை வகிக்கிறது. இதற்கு அடுத்தபடியாக 12 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு ஆயுதங்களை வாங்க எகிப்தும், 8 பில்லியன் டொலர் மதிப்பில் ஆயுத கொள்முதலுக்கு சவுதி அரேபியாவும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. தென் கொரியா, பாகிஸ்தான், இஸ்ரேல், ஐக்கிய அரபு இராச்சியம், ஈராக் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த நிலைகளில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எச்சரிக்கை மணி

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலான சட்டம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ள அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்திற்குப் பெரும்பான்மையான மாகாண சபைகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. 9 சபைகளில் 5 சபைகள் ஏற்கனவே இந்தத் சட்டத்தை நிராகரித்து விட்டன. எனினும் அதனை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஊடாக அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சிறப்புச் சட்டம், மாகாண சபைகளின் அதிகாரங்களை, மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரங்களை அடியோடு பறித்துவிடும் இயல்புகளைக் கொண்டது என்று சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஒரு புறத்தில் தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வது குறித்துப் பேச்சு நடத்திக் கொண்டே, மறுபுறத்தில் அந்த அதிகாரங்களைப் பறிப்பதற்கான அடிகளையும் ரணில் அரசு எடுத்து வைக்கின்றது என்று அவர்கள் கருதுகின்றனர். அந்தக் கருத்தை அடியோடு புறக்கணித்துவிட முடியாது. அதில் உண்மையும் இருக்கவே செய்கின்றது.

தமிழர்களுடனான பிரச்சினைக்கான தீர்வாகத்தான் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. எனவே, அவற்றின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் அல்லது கட்டுப்படுத்தும் வகையிலான எந்தவொரு சட்ட ஏற்பாடுகளும் அதிகாரப் பகிர்வு என்பதை அர்த்தமற்றதாக்கிவிடும். எனவே அதனை மாகாண சபைகள் எதிர்த்திருப்பது வரவேற்கத்தக்கதே.

அதேநேரத்தில் இந்த எதிர்ப்புக்கு ஊடாக மற்றொரு தெளிவான செய்தியும் வெளிப்பட்டுள்ளது. அபிவிருத்திச் சிறப்புச் சட்ட ஏற்பாடு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்மொழியப்பட்டது. பெரும்பாலான மாகாண சபைகளோ, ஐக்கிய மக்கள் முன்னணியின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. எனவே ரணில் முன்வைத்த ஒரு முன்வரைவை அவை சுலபமாக நிராகரித்துவிட்டன. தேசிய அரசு என்று என்னதான் கூறிக் கொண்டாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான நிழல் போர் மிக வலுவானது; தீவிரமானது என்பதை மாகாண சபைகளின் முடிவுகள் திட்டவட்டமாக வெளிப்படுத்துகின்றன.

அபிவிருத்திச் சட்டத்தை சிறி லங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக எதிர்க்கின்ற நிலையில், அதனை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமாக நிறைவேற்றுவது ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாத்தியமாகப் போவதில்லை.

இரு கட்சிகளுக்கும் இடையில் காணப்படும் இத்தகையதொரு முரண் நிலையில், புதிய அரசமைப்பு உள்ளிட்ட அரசியல் தீர்வு முயற்சிகள் எப்படி இரு தரப்புகளின் ஆதரவுடன் வெற்றியடையப் போகின்றன என்கிற இயல்பான கேள்வியும் இங்கு எழுகின்றது.

இரு கட்சிகளுக்கும் இடையில் கனன்று கொண்டிருக்கும் நீறு பூத்த நெருப்பு, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கொளுந்து விட்டு எரிகின்றது. இத்தகைய நிலையில் இந்த இரு கட்சிகளும் இணைந்துள்ள இந்த அரசு, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வரலாற்று வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளுமா என்கிற கேள்வியையும் தவிர்க்க முடியவில்லை.

ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்துக்கு உரிய முக்கியத்துவம் என்பவற்றை விட்டுக்கொடுப்பதிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடாப்பிடியுடன் நிற்கின்ற நிலையில், தீர்வு முயற்சிகள், தீர்க்கமான கட்டத்தை நெருங்க நெருங்க அதன் வெளிச்சம் மங்கிக் கொண்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது.

அபிவிருத்திச் சிறப்புச் சட்டத்தைத் தமிழர்கள் அடியோடு எதிர்க்கின்றபோதிலும், அதை ஏனைய மாகாண சபைகளும் சேர்ந்து எதிர்த்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைய முடியவில்லை. அது நிச்சயம், தமிழர்களுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் ஓர் எச்சரிக்கை மணியே!



# விழித்துக் கொண்டால், பிழைத்துக் கொள்வோம்

அ.அ.சத்தியசீலன்

முள்ளிவாய்க்கால் தினத்தன்று துரையப்பா அரங்கைச் சுற்றி முச்சக்கர வண்டியில் வலம் வர நேர்ந்தது. தெருக்கள் தோறும் கண்ணைக் கவரும் வெசாக்கூடுகள். தமிழர்கள் கூட்டம் கூட்டமாய் வந்திறங்கிய வண்ணமாகியிருந்தனர். சற்று யாகப்பர் கோயிற்சுற்றத்துத் தெருக்களுக்குச் சென்றேன். தெருக்களில், அரைகுறை ஆயத்தமாக வீட்டின் வெளியே வந்தவர்கள், நடந்தபடியே அலங்காரங்களைச் சரிசெய்துகொண்டு முற்ற வெளிநோக்கி உன்மையில் முட்டிமோதி மூர்க்கமாய் முன்னகர்ந்தார்கள். ஒருகணம் என்னை நான் கேள்வி கேட்டேன், நான் சுய நினைவுடன் இருக்கின்றேனா என்று. அதன் பின்னர், பலாலி வீதி, வேம்படிச் சந்தியைப்பார்த்ததும் 1995ம்ஆண்டு அடி அடியாக இரவில் இடம் பெயர்ந்து நடந்தது, நகர்ந்தது ஞாபகத்துக்கு வந்தது. பின்னர் வீடுவந்து காகங்களைப் பற்றி நினைத்தேன். ஒரு காகம் இறந்தால் எல்லாக் காகங்களும், கொதித்து, கூடிக்கரைந்து, தமது கவலையை, எதிர்ப்பை வெளிப்படுத்தும். ஆறுஅடி மனிதன், அவற்றின் கண்ணில் பட்டாற் கூட, தாழப்பறந்து தலையில் கொட்டி தமது அடக்கமுடியாத இனப்பற்றை, ஆற்றாமையை வெளிப்படுத்தும். ஆனால், எம்மவர்கள் முள்ளிவாய்க்கால் தினத்தன்று, முற்றவெளிக்குச் சென்று, எம்மினத்தைதிட்டமிட்டுக்கொலை செய்த நாளில், அதே கைகள் செய்த வெசாக் கூடுகளை பார்க்க முண்டிஅடிப்பது எந்த வகையில் நியாயம் என்று நாம் சிந்தனைகளில் விழித்துக் கொண்டால், உடையைச்சரி செய்வதுபோல், எமது அந்தச் செயலையும் சரி செய்வோம். செயற்பாடுகளின் பின்னணியை, பின்விளைவுகளை முன்னகரு முன்னரே முற்றிலுமாய் ஆராய்வோம். அவர்களது மாயவலைகளில் சிக்கிக் கொள்ளாமல் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வோம்.

### தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே உள்ளது, மனப்பிரச்சினையே

உண்மையில் தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் மொழிப்பிரச்சினை என்று எதுவும் இல்லை. பலகாலமாக ஒருசிங்களவர் ஆங்கிலத்தில் பேசுவார்; அதற்கு ஆங்கிலத்தில் பதிலளிப்பேன். தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில் இருப்பது மனப்பிரச்சனை. அது, ஆளவேண்டும்; அடக்கவேண்டும்; அழிக்கவேண்டும்; தமிழர்களைக் கீழ் நிலையில் வைத்திருக்கவேண்டும் என்ற சிங்களவர்களது பல சொல்லிலடங்கா மனப்பிரச்சினைகளே, தமிழனை வதைத்து அவர்களைச் சிதைத்து வருகிறது. இதுவே இலங்கையில் உள்ள பிரச்சினை. மொழி ஒரு பிரச்சினை அல்ல; மனங்களே பிரச்சினை. இரண்டாவது தமிழும், சிங்களமும் ஒரே தட்டில் வைத்து ஒப்பிடக் கூடியவையா? இல்லை; இமயமாய் இருக்கிறது தமிழ். என்னிடம் விலை மதிப்பற்ற பொருள் இருக்கும்போது, நான் ஏன் சிங்களத்தைக் கற்று, எனது சிந்தனைகளில் பிறழ்வை ஏற்படுத்தவேண்டும்? ஒருமொழிக்குள் வேற்றுச் சொற்களினதோ, மொழியினதோ ஊடுருவல் பல உளவியல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும். உண்மையைச்சொல்கிறேன். இது என் அவதானம். புலி என்று தமிழருக்குச் சொன்னால் நெஞ்சை நிமித்துவர்; புன்னகைப்பர். ஆனால், கொட்டியா என்றால் சிங்களவர் சுற்றிலும் பார்ப்பர்; வியர்ப்பர். எனவே மொழியின் ஊடுருவலுக்கான அனுமதி என்பது, எம்மதியினால் மிகப்பக்குவமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியது. அம்மொழியினால் பங்கமெதுவும் இல்லையெனில், அனுமதிக்கப்படவேண்டியதொன்றுமாகும். ஏனென்றால், பல மொழிகளைக் கற்பவர், பிற்காலத்தில் நல்ல ஞாபக சக்தியுடையவராயும், கூர்மையான சிந்தனை உடையவராயும் இருப்பார் என்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம். எனவே அரிய மொழியாகிய தமிழை அறிய ஆவலாக இருந்தால் கற்றுக்கொள்ளுங்கள். எங்களை விட்டு விடுங்கள். நீங்கள் சிங்களம் கற்றுக்கொள்ளுங்கள்; நாங்கள் தமிழ் கற்கிறோம் என்று சொல்வது, சமாதானத்துக்கான முயற்சி என்று தலைப்பிடப்பட்டாலும், இது ஊடுருவலின் ஒருவடிவமே. இப்படி சமாதானத்தில் அக்கறை கொண்டவர்கள், நாடெங்கிலுமுள்ள பெயர்ப்பலகைகளில் தமிழைப் பிழையாக எழுதி, தமிழைச் சிதைத்து, வதைத்து, தமிழரைப், பதை பதைக்க வைப்பார்களா என்ன?

**மெல்ல மெல்லப் பிறழ்வுபடும் கலாசாரக் கட்டுக்கோப்பு**

யாழ்ப்பாணத்தில் சீதனக்கொடுமை இருக்கின்றது; அதை உடனேநிறுத்த வேண்டும்.

இதை சொன்னவுடனே வேற்று இனத்தவரொருவர் எமக்காகக் கதைத்திருக்கின்றார் என்று எண்ணத் தோன்றும். சிங்களஇனவாதிகளால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு, பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு நட்டஈடு பெறுக் கொடுக்க சிந்தித்திருக்கின்றனரா? அவர்களது காயத்தை நிச்சயமாக அதுஆற்றாது. ஆனால் சிறிய உதவியாக இருக்கக்கூடும். சில பெண்கள் இதை நிராகரிக்கவும் கூடும். பாதிப்புக்கு உள்ளாக்கியவரை சட்டரீதியாகத் தண்டித்து, காயம்களைஆற்ற எவராவது சிந்தித்தார்களா? அல்லது யாழில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்தனரா? அல்லது முயற்சித்தனரா? ராணுவ முகாம்களை மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் அமைத்து, விதவைப் பெண்கள் பொறி வைக்கப்படுவதைத் தடுக்கச் சிந்தித்தனரா? எமது கலாசாரத்துக்குப் புறம்பான 'சேல்ஸ் ரெப்' எனப்படும் தொழிலில் வீடு வீடாக ஏழைப்பெண்கள், ஆண் பெண் சோடிகளாக அனுப்பப்படுகின்றனரே? அது எமது கலாசாரத்தக்கு ஒவ்வாதது. கலாசாரம் சீரழியும் வழிகளைத் திறந்து அதற்கு வாய்பளிக்கக்கூடியது. தற்போது மோட்டார் சைக்கிள், ஆட்டோக்களில் சுற்றும் ஒருதரப்பினர், பாடசாலை மாணவிகள் மற்றும் தனியார் கல்வி நிலையச் சிறுமிகள் என்போரை போகவும் வரவும் சிரமத்துக்கும், அரிகண்டத்திற்கும் உட்படுத்துகின்றனர். இவர்களைத் தடுக்க முடியாது கல்வி நிறுவனங்களும் கிராமவாசிகளும் திணறும் நிலையில் அவர்கள் சிரமமின்றி படிக்க வசதி செய்ய முற்பட்டனரா?

யாழில் சீதனம் என்பது புதுமணத் தம்பதினர்களுக்கு குடும்பத்தை ஆரம்பிக்கக் கொடுக்கப்படும் முதல் முதலீடு; ஊக்கத்தொகை. இது பல ஆண்களை கடும் உழைப்பாளிகளாக மாற்றுகின்றது. பெண்பிள்ளைகள் பிறந்துவிட்டால், பொதுவாக தந்தையின் செயற்பாடுகள் பெரியளவில் மாறி அவர் மிகுந்த பொறுப்புள்ள மனிதராக மாறுகின்றார். ஆனால் இன்றும்கூட சீதனம் எதுவும் வாங்காமல் திருமணம் செய்யும் ஆண்கள் எம்மிடமே இருக்கத்தான் செய்கிறார்கள். பெண்களிடம் மிகவும் விலை மதிக்க முடியாத சீதனமாக எதிர்பாக்கப்படுவது ஒழுக்கம். அத்துடன் கூட பொறுப்பு, பணிவு, தாழ்ச்சி, கடின உழைப்பு, பொன்னகைக்குஈடான புன்னகை எனும் சீதனத்தை அவர்கள் கொண்டுதான் வருகின்றார்கள். எனவே எந்தவொரு தமிழ்ப் பெற் றோரும் தமது பெண் பிள்ளைகளை வெறும் கையாக அனுப்புவது கிடையாது எனலாம்.

**கலப்புத் திருமண யோசனை திட்டமிட்டு கலப்பினமாக்கும் முயற்சி**

தமிழர், சிங்களவர்கள் மாற்றுத் திருமணம் செய்யுங்கள் !

முதலில், இது சிங்கள வன்முறையால் வதைக்கப்பட்டும், நியாயம் வழங்கப்படாத பெண்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் ஒருகூற்று. இருப்பினும், தமிழர்கள் போரில் தோற்றுவிட்டதாகவும் சிங்களவர்கள் வென்றுவிட்டதாகவும் சொல்கிறார்கள். இந்தக்கருத்தை அரசியல்ஞானமுள்ள எந்த ஒருவரும் ஏற்றுகொள்ள மாட்டார்கள். பல வல்லரசுக்கள் வடக்கு கிழக்கில் வலிமையான ஒரு நிர்வாகத்தைப் பார்த்தார்கள். அது எந்தவகையில், பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக தங்கள் ஆதிக்க வெறிக்கு குந்தகம் விளைவிக்குமெனச் சிந்தித்தார்கள். சிங்கள இனத்தின் குரோதத்தில், தம் வலிமையைக் கொட்டித் தமிழரை எரித்தார்கள். தமிழர்களது வலிமையும், கலாசார அழகுமே, அவர்கள் கண்களை குத்தியது எனலாம். அவர்கள் வலிமையானவர்கள். ஆனால், கலாசாரத்தில், ஒழுக்கத்தில் வடக்கு கிழக்கு தமிழருக்கு இணையாக எவர்தான் இருந்தார்கள்? இதன் பின்னணியில் ஒரு பெரிய உளவியல் உன்மையுமுண்டு. எப்போதும் ஒழுக்கக்கேடான சமுதாயம், ஒழுக்கமுள்ளவரை தன்வழியில் இழுத்துச் சீரழிக்க, திட்டமிட்டுச் செயற்படும். இப்போது மாற்றுத்திருமணம் செய்யும் வஞ்சகத்தின் வார்த்தைவாள் போன்று இதயத்திடையே நுளைந்தாலும், சில ஆள்கள் அது நஞ்சகத்தின் வார்த்தை என்பதை அறியாது, ஏதோ அவர்கள் தமது மேல் நிலையில் இருந்து இறங்கி வந்து, தம்மைத் திருமணம் செய்யக் கேட்கிறார்கள் என்று வஞ்சகமில்லாது நினைக்கிறார்கள். இன அழிப்பைப் பல வழிகளில் செய்யலாம். இங்கே மாற்றுத் திருமணம் என்பது எம் தனித் தமிழினம் அழிந்து, ஒரு கலப்பினமாக மாற வழி வகுக்கும். அழிந்து போகும். இனங்களிடையே சமாதானம் ஏற்படுத்த என்று தலையங்கம் இடப்பட்டாலும், இது இன அழிப்புக்கான ஒரு தந்திர நகர்வேயாகும்.



**குடிசார் செயற்பாடுகளில் படையினரது தலையீடு**

ஆரம்பக் கல்வியில் ராணுவத் தலையீடு, சிகை அலங்காரம் போன்று சிறு தொழில் நடத்தல்.

இதை பலர் வெறும் பொருளாதார ரீதியான ஒரு நகர்வாக மட்டும் பார்க்கிறார்கள். ஆனால் இதற்குப் பின்னால், படிப்படியான உளவு பார்த்தல், கலாசாரச்சீரழிவு மற்றும் தங்களுடைய கடந்தகால குற்றங்களை மறைத்து மக்கள் மத்தியிலும், எதிர்காலச் சமுதாயத்துக்கும், இறந்தவர்கள் தீவிரவாதத்தில் ஈடுபட்டதால் கொல்லப்பட்டனர். நாங்கள் நல்லவர்கள் என்ற அர்த்தம் எம்மை அறியாமலே புகுத்தப்படுகிறது. சிறு சிறு குற்றங்களைச் செய்தவர்களுக்கு இலங்கை சட்டத்துறை தண்டனை வழங்கி இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் சரியாகப் பேணப்படுகின்றன என்றதொரு பொய்யான தோற்றத்தை உருவாக்குகிறது. போர்க்குற்றம் புரிந்தவர்கள், திட்டமிட்டுப் போரை நடத்திய அதே வல்லரசுகளால், காப்பாற்றப்பட்டு விட்டார்கள். இப்போது மனங்களில் தரவுகளை மாற்றி அமைக்கும் வேலைத் திட்டமே முன்னெடுக்கப்படுகிறது.

**தமிழர் நிலங்களை அனுமதி பெறாமல் ஆக்கிரமிக்கும் புத்த சிலைகள்**

முதலில், சிங்களவர்கள் வாழாத இடங்களில் புத்தர் சிலையைத் திணித்தல் எதற்கு என்று கேட்டுக் களைத்து விட்டார்கள் தமிழர்கள். இரண்டாவது, தனியார் காணிகளை ஆக்கிரமித்து சிலை நாட்டல். இது எந்த அளவு அபாண்டமான அடாவடி நடவடிக்கை. மூன்றாவது, தமிழரை சிங்களவர்கள் அதிகமாக வாழும் பகுதியில் இருக்கக் கூடாது என்றால், என்ன செய்வீர்கள் என்றனர் பாராளுமன் றில். தமிழர் சிங்களப் பகுதிகளில் வாழுகின்றார்கள். ஆம்; அவர்கள் கடின உழைப்பினால் பலகோடி ரூபா பணத்தைக் கொண்டு சிறிய நிலத்துண்டுகளை வாங்குகின்றாகள். அடாவடியாய் ஆக்கிரமிக்கவில்லை.

எனவே, இரண்டும் ஒப்பிட முடியாத செயல்கள். நான்காவது, தமிழர் பகுதிகளில் சிங்களச் குடியேற்றங்கள். இவர்கள் சிங்களப் பகுதிகளில் குடியேற்றக் காணிகள் இல்லாமையிலா வருகிறர்கள் அல்லது எமது தனித்துவத்தைத் தணித்து, ஈற்றில்முற்றாக அணைக்கவா வருகிறர்கள்? தமிழர் பகுதியில் உள்ள வெற்று இடங்கள் தமிழர்களுக்கு பிற்காலத்திற் தேவைப்படும். எம்மினம், தமிழினம் பெருகும். எனவே அவர்கள் குடியேற நிலம் தேவை. அப்போது நாம் காட்டுக்குள் சென்று குடியேறமுடியாது. எனவே எமது இந்த நிலப்பரப்புக்கள் பாதுகாக்கப்பட்டு எம்மால் எதிர்காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்

எனவே நாம் விழிக்கவேண்டும்; எமது மொழி, கலாசாரம் என்பவை எம்மை மென்மேலும் வளப்படுத்தும். அவை எமது சொத்து. அடையாளம்; தனித்துவம். அவற்றை எம்மிடமிருந்து பிரிக்கும் எந்தத் தந்திர நகர்வையும் நாம் தகர்த்தெறிவோம்.



# வாசகர் திருமுகம்

## அவசரம் ஆபத்தைத் தரும்

நத்தார் தினத்தில் இருந்து யாழ். நகரம் தினமும் மாலை நேரங்களில் களைகட்டிக் கொண்டிருக்கிறது. புதுவருடத்துக்கான ஆடைத் தெரிவுகளுக்கும், பொருள்கள் வாங்குவதற்கும் நகருக்கு வந்து திரும்புவோர் மற்றும் தம் அலுவலகப் பணி முடித்து வீடு திரும்புவோருமாக யாழ். நகரின் மத்திய பகுதி, பரபரப்புடன் இயங்குவதை எவராலும் அவதானிக்க முடியும். இந்த நிலையில், நகரத்தின் மத்தியில் பொறுப்பற்ற விதத்தில் அதிவேகமாகத் தங்களது வாகனங்களைச் செலுத்துபவர்களை என்ன செய்யலாம்? எப்படி அழைக்கலாம்?

கடந்த புதன்கிழமை, மாலை 6 மணியளவில் மின்சார நிலைய வீதியில் இருந்து கஸ்தூரியார் வீதி வழியாக ஐயப்ப அடியவர்கள் யானையுடன் ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்த நிலையில், அவர்களை ஊடறுத்து ஒருசிலர் தமது மோட்டார் சைக்கிள்களை வேகமாகச் செலுத்த முயன்றதைக் கண்ட பலர், கண்டனத்துடன் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். விபத்துக்கள் மலிந்த இன்றைய நாள்களில், விபத்துக்களை நாங்களே உருவாக்குகின்றோமே யொழிய, அவை தாமாக நிகழ்வதில்லை என்பதை இந்த அவசரகாரர்கள் எப்போது தான் உணர்ந்து கொள்வார்களோ?

*அலெக்ஸ் பரந்தாமன்*
*புதுக்குடியிருப்பு*

## கரிசனையோடு பரிசீலிப்பீர்களா?

பாடசாலைகளை அரைமணித்தியாலம் முன்னதாகவே அரம்பிக்கின்ற விடயம் குறித்து, வசதியுள்ள ஜமீன்தார்களை மையமாகக் கொண்டு தீர்மானங்களை எடுக்காமல், நொந்துபோயுள்ள இடம் பெயர்ந்தவர்கள், தாய் தந்தை இல்லாதவர்கள், வாடகை வீட்டில் இருப்பவர்கள், கூலிவேலை செய்பவர்கள், மலசலகூட வசதி இல்லாதவர்கள், பொதுக்கிணற்றுப் பாவனையில் உள்ளவர்கள், விவாகரத்துப் பெற்றவர்கள்ஆகியோரது பிள்ளைகளை மையமாக வைத்து முடிவை எடுப்போமாக இருந்தால், சில வேளைகளில் காலை 8.30 மணிக்கே பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டி வரும். பெரும்பாலும் பாதிக்கப்படுவது தரம் ஐந்துக்குக் கீழ் கல்விபயிலும் மாணவர்களே. எட்டு மணிக்குத் தொடங்கும் போதே வதைபட்ட மாணவர்களுக்கு, 7.30 மணிஎன்பது கொடூரந்தான். ஏழைகளை வாக்கொன்று தேவைப்படும்போது ஐயா, அம்மா போட்டு வணங்குகிறார்கள். முடிவெடுக்கும்போது குளிரூட்டிய அறைகள் ஒரு போதும் பயன்தராது. தயவு செய்து பரிசீலிப்பீர்களாக.

*கே.எஸ்.சிவஞானராஜா*
*கொககுவில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கு தாத்தாவின் அறிவுரைகள்

*(அன்பான சிறுவர்களே! உங்களுக்கு தாத்தா சில அறிவுரைகளைக் கூறுகின்றேன். அவற்றை நீங்கள் தவறாமல் கடைப்பிடிப்பீர்களென நம்புகின்றேன்.)*

1. எப்போதும் உண்மையே பேசுங்கள்.
2. பொய் பேசுபவரைக் கண்டால் விலகியிருங்கள்.
3. கல்வியே கண்ணெனக் கருதி நடவுங்கள்.
4. தாய், தந்தையரைத் தெய்வங்களாகப் போற்றுங்கள்.
5. பெரியவர்களை மதித்து நடவுங்கள்.
6. ஆண்டவன் உள்ளாரென்பதை நம்புங்கள்.
7. சத்துள்ள ஆகாரங்களை உண்ணுங்கள்.
8. சுகாதாரத்தில் கவனம் கொள்ளுங்கள்.
9. தினமும் விளையாட்டில் ஈடுபடுங்கள்.
10. வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துங்கள்.

*அன்புள்ள தாத்தா*



## அழகில் மயங்கிய மீன் குஞ்சுகள்



ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. மீன் குஞ்சுகள் எப்பொழுதும் கரையோரம் கூடி விளையாடிக் கொண்டிருப்பது வழக்கமாகும்.

அதில் சோமு, சிண்டு என்பவை ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தன.

ஏய் சிண்டு... என்னைப் பிடி பார்க்கலாம் என்றது சோமு. என்கிட்டேயே சவால் விற்றியா இப்ப பாரு, ஒரு நொடியில் பிடிக்கிறேன் என்று சொல்லியது சிண்டு. அப்போது கரையில் ஒரு காகம் புழுக்களைக் கொத்திக் கொண்டிருப்பதை பார்த்து ஏய் சோமு, அங்கே பார் அவன் எவ்வளவு கறுப்பாக இருக்கிறான். அவன் குரலை நீ கேட்டிருக்கிறாயா? அருவருப்பாக இருக்கும். அவனைப் பார்த்தால் பயமாக இருக்கிறது வா போய்விடலாம் என்று சிண்டு சொன்னதும், எல்லா மீன்களும் குளத்துக்குள் வேகமாகச் சென்றன.

அவசர அவசரமாக மீன்கள் உள்ளே சென்ற போது பசங்களா? ஏன் இப்படி ஓடி வற்றீங்க? என ஒரு பெரிய மீன் கேட்டது

கரையில் காகம் இருக்கு. அதனோட நிறமும் குரலும் பயமா இருக்கு ? அதான்...

ஓ....! காகமா, அதால நமக்கு எந்த ஆபத்தும் இல்லே. உருவத்தை மட்டுமே வெச்சு ஒருத்தரைப் பற்றி தப்பா நினைக்கக் கூடாது என்று அந்த பெரிய மீன் சொல்ல, மற்ற மீன்குஞ்சுகள் இந்த தாத்தாவுக்கு வேற வேலை இல்லை. எப்பவும் உபதேசம் தான். வாங்க போகலாம். என கூறிச் சென்றது

அடுத்த நாள் வந்தது; குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்து இருந்தது; அதை பார்த்த மீன் குஞ்சுகள், ஏய் அங்கே பாரு வெள்ளையா... அட! என்ன பறவை அது? வெள்ளையா எவ்வளவு அழகா இருக்கு! அலகும் நீளமா கச்சிதமா இருக்கு.

அடடே! அதனோட நடையைப் பாரேன். மீன் குஞ்சுகள் பேசும் சத்தம் கேட்டு குளத்தை நெருங்கியது கொக்கு.

உடனே மீன் குஞ்சுகள்; அண்ணே! நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. உங்க அலகைத் தொட்டுப் பார்க்கலாமா?

கொக்குக்கு ஒரே கொண்டாட்டம் ; ஓ! தொட்டுப் பாரேன்.

ஒரு மீன் குஞ்சு கொக்கை நெருங்க, கொக்கு மீனைக் கவ்வியது. நல்லா மாட்டினியா? என்றது. மாட்டிய மீன் ஆ! என்னை விட்டு விடு! என்று கெஞ்சியது. இதை பார்த்த மற்ற மீன் குஞ்சுகள் ஆபத்து... ஓடுங்க! ஓடுங்க! என்று குளத்திற்குள், சென்றன.

அந்தக் கொக்கு கவ்விய மீனுடன் வானத்தில் சென்று மறைந்தது.

மற்ற மீன் குஞ்சுகள் ; அந்த தாத்தா மீன் சொன்னது சரியாப் போச்சு. அழகை மட்டும் பார்த்து ஒருத்தரோட பழகக்கூடாது. ஆமாம்! ஆமாம்! என்று உறுதியெடுத்துக் கொண்டன.

அன்று முதல் மற்ற மீன் குஞ்சுகள் கவனமாக இருந்தன. சந்தோசமாக வாழ்ந்தன.


## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



துன்பம் எம்மைத் தீண்டும்போது,
கலங்காமல் அதைக் கண்டு சிரிக்கப்
பழகுங்கள். அப்படிச் சிரிக்கத்
தொடங்கினால் அந்தச் சிரிப்பே துன்பத்தை
வெட்டுகின்ற வாளாக மாறிவிடும்.

*பாரதியார்*





## மழை நீர் சேகரிப்பு

வீட்டுக்கொரு தொட்டி கட்டி....
மழை நீரை சேமிப்போம்...!
ஊருக்கொரு குளம் வெட்டி...
மழை நீரை சேமிப்போம்...!
குளம், குட்டையை தூர் வாரி..

மழை நீரை சேமிப்போம்...!
தடுப்பணைகள் கட்டி வைத்து...
மழை நீரை சேமிப்போம்..!
சிக்கனமாய் செலவு செய்து...
தண்ணீரை சேமிப்போம்..!

## வரலாற்றில் இன்றைய தினம்

1427 - ஹனோயிலிருந்து மிங் இராணுவம் வெளியேறத் தொடங்கியதை அடுத்து சீன ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

1851 - மசாசூட்ஸ் பொஸ்டனில் அமெரிக்காவின் முதலாவது YMCA திறக்கப்பட்டது.

1988 - மட்டக்களப்பில் காணாமற்போன 271 பேர் பற்றிய விவரங்களை சர்வதேச மன்னிப்புச் சபை திரட்டியது.

- தெற்கில் 2 தினங்களில் எரியுண்ட நிலையில் 44 சடலங்கள் மீட்பு.

1993 - பூநகரியில் படுகாயமடைந்த சிப்பாய்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் வழங்கப்படவில்லையென இராணுவத்துக்குள் பெரும் அதிருப்தி.

- முல்லையில் 30 குளங்கள் உடைப்பெடுத்ததால் 10 ஆயிரம் கால்நடைகள் உயிரிழப்பு.

- மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் வீட்டுக்கு குண்டுவீச்சு.

1999 - புங்குடுதீவில் இளம் பெண்ணைக் கடத்தி, பாலியல் வல்லுறவின்பின் படுகொலை.

2005 - குடாநாட்டில் கண்ணி வெடியகற்றும் செயற்பாட்டை ஹலோ ரஸ்ட் இடைநிறுத்தியது.



இதயத்தில் பெருந்தன்மை இருந்தால், அது, நற்பண்புகளின் அழகாகப் பிரகாசிக்கும்.

நற்பண்புகளில் அழகு இருந்தால், அது இல்லத்தில் இணக்கமுடன் வாழத் தூண்டும்.

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 – 2020

சுப ஸ்ரீ துன்முகி வரும் தை மாதம் (26.01.2017) 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசுராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.




பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி (து, தீ, து, தோ, ச, சா, சி, ஆகிய எழுத்துக்களைப் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களும் பங்குனி மாதத்தில் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன்கள் பொருந்தி வரும்)

வான மண்டலத்தில் 12ஆவது ராசியாக உள்ள உங்கள் மீன ராசிக்கு அதிபதி குருவாகும். தெய்வத்திற்கும் மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டவர்கள் நீங்கள். எப்பொழுதும் எதையும் நிதானமாக யோசித்துச் செயற்படும் ஆற்றல் உடையவர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக செயற்படும் ஆற்றலும் மற்றவர்களை மதித்து நடக்கும் பண்பும் உடையவர்கள். எதிலும் ஈடுபாட்டுடன் முனைந்து செயற்படும் நீங்கள் மற்றவர்களின் உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள். இப்படிப்பட்ட குணம் உடைய உங்கள் மீன ராசிக்கு சனி பகவான் உங்கள் ராசிக்கு இதுவரை 9ஆம் இடத்தில் சஞ்சரித்தவர் இனி 10ஆம் இடமான தொழில் ஜீவ ஸ்தானத்திற்கு வந்து பலன் அளிக்க உள்ளார். சனி பகவான் உங்கள் ராசிக்கு 11, 12 மற்றும் வீட்டுக்கு அதிபதியாவார். அவர் உங்கள் ராசிக்கு இப்பொழுது 10ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய உள்ளார். பொதுவாகவே சனி பகவான் 10ஆம் வீட்டில் சஞ்சாரம் செயவது சிறப்பில்லை என்று பொதுவாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே அவை பற்றிய கவலையை விட்டுவிட்டு இனி என்ன மாதிரியான பலன்களை உங்களுக்கு அளிக்க உள்ளார் என்பதைப் பார்ப்போம். உங்களுக்கென்று சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். இதுவரை உங்களைப் பற்றிய தவறான பார்வை மாறி பெயர் புகழ் அந்தஸ்து சற்று கூடும். அரச விடயங்கள் சற்று லாபகரமாக இருந்து வரும். இதுவரை அரச விடயத்தில் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் நீங்கி சாதகமான செய்திகள் வந்து சேரும். எதைச் செய்ய ஆரம்பித்தாலும் எடுத்தோம் முடித்தோம் என்றில்லாமல் சற்று வேகமாக முயற்சி எடுத்தீர்கள் என்றால் எண்ணிய எல்லாம் இனிதே நடந்தேறும். எப்பவும் அவசரப்படாமல் எதிலும் சற்று நிதானித்துச் செயற்படுவீர்கள் என்றால் வெற்றி நிச்சயமாகும். தேவையில்லாமல் பணத்தை மிச்சப்படுத்தாமல் தேவையான விடயத்துக்கு தேவையான செலவுகளைச் செய்து வரவும். அப்போதுதான் விரையச் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியும். அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படும். அடிக்கடி பயணங்கள் ஏற்படும். அதனால் தேவையற்ற பிரச்சினைகளும் ஏற்பட்டு விலகும். பேச்சில் சற்று கவனமாக இருத்தல் வேண்டும். பணப்புழக்கம் சற்று தாராளமாக இருந்து வரும். தேவையற்ற விடயங்களைப் பற்றிப் பேசுதல் கூடாது. போக்குவரத்து வண்டி வாகனங்களில் அதிக எச்சரிக்கையுடன் சென்று வருதல் வேண்டும். அடிக்கடி வீடு மாற அல்லது ஊர் மாற வேண்டிய அவசியம் வந்து சேரும். எடுக்கும் முயற்சிகளில் சற்று கவனம் தேவை. எதிர்பார்த்த செய்திகள் சாதகமாக இராது. புதிய விடயங்களைக் கற்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். சகோதர சகோதரிகளால் தேவையற்ற மனக் குழப்பங்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டு விலகும். உறவுகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு மனவருத்தங்கள் ஏற்படும். நெருங்கிய உறவினர்களை விட்டுப் பிரிய நேரிடும் பழைய பொருளை விற்றுப் புதிய பொருள்கள் அல்லது சொத்துக்கள் வாங்க வேண்டி வரும். கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கி நல்ல கல்வி பயில வாய்ப்பு அமையும். வேலையில் இருந்து வந்த தடைகள் கடினமான போராட்டங்களுக்குப் பின் விலகும். பார்க்கும் வேலையில் திருப்தியற்ற சூழ்நிலை இருந்து வரும். கடன் வாங்க வேண்டி வரும். பழைய கடனை அடைக்கப் புதிதாக கடன் வாங்க வேண்டி வரும். போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றி வாய்ப்பும் அதனால் ஒரு சிலருக்கு நல்ல வேலை உத்தியோகம் அமைய வாய்ப்பு ஏற்படும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வழக்குகள் சற்று சாதகமாக அமையும். விவகாரத்து கேட்பவர்களுக்கு விவகாரத்து கிடைக்கும். தாய் மாமன்களால் எதிர்பாராத நனமையேற்படும். வீட்டு வளர்ப்புப் பிராணிகளால் நன்மையேற்படும். இதுவரை திருமணத்தில் இருந்த தடை நீங்கி திருமணம் இனிதே நடந்தேறும். சுப நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்து கொள்ள வாய்ப்பு அமையும். கணவன் மனைவி உறவு சீராக இருந்து வரும். காதல் விடயங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நண்பர்களால் தேவையற்ற மனவருத்தங்களும் வேதனைகளும் ஏற்படும். தாயாரின் உடல் நலத்தில் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும். புதிய நட்புகளால் எதிர்பார்த்த நன்மைகளும் அமையும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. உடலில் சளித் தொல்லைகள் ஏற்படாமல் கவனித்தல் நலம். நெஞ்சு, வயிறு, கால் போன்ற உடல் உறுப்புகளில் பிரச்சினை வராமல் பார்த்துக் கொள்ளல் அவசியம். உடலில் சிறு பிரச்சினை என்றாலும் நல்ல மருத்துவரை அணுகுதல் வேண்டும்.

**பெண்களுக்கு**

வேலையில் அதிகக் கவனம் செலுத்துதல் வேண்டும். பார்க்கும் வேலையில் ஒரு திருப்தியற்ற நிலை இருந்தாலும் அவசரப்பட்டு வேலையை விட்டு விடுதல் கூடாது. வேலை தேடுபவர்களுக்கு வேலை எளிதில் அமையும். அரசு வேலை கிடைக்கவும் ஒரு சிலருக்கு வாய்ப்பு கிட்டும். உடன் பணிபுரிபவர்களால் தேவையற்ற மனச்சஞ்சலங்கள் ஏற்படும். உயரதிகாரிகள் சாதகமாக அமைவர். அடிக்கடி ஆடை, ஆபரணச் சேர்க்கை அமையும். விருந்து கேளிக்கைகள் சுற்றுலா மகிழ்ச்சிகரமாக அமையும். காதல் விடயங்கள் சாதகமாக இருந்து வரும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். குடும்பத்தில் புதுவரவால் மகிழ்ச்சி அமையும். உடல் ஆரோக்கியத்தில் நன்கு கவனம் தேவை. தேவையற்ற விடயங்களைப் பற்றிப் பேசுதல் கூடாது. கணவரின் உடல் நலத்தில் சற்று கவனம் செலுத்துதல் வேண்டும்.

## நாளை

**மார்கழி-15**

வெள்ளிக்கிழமை -30.12.2016

திதி: பிரதமை பி.ப.02.24

நட்சத்திரம்: பூராடம் பி.இ.02.03

ராகுகாலம்:10.59-12.29 வரை

சுபநேரம்:06.29-07.59 வரை

# அ.தி.மு.கவின் பொதுச்செயலாளராக சசிகலா பொறுப்பேற்பாரா?

தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமல்லாமல் ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டிலும் இன்றைய நாள் ஒரு முக்கியமான தினமாக அமைந்துள்ளது. இந்தியாவின் முக்கிய கட்சிகளில் குறிப்பாக தமிழ்நாட்டினதும் தமிழர்களினதும் தலைவிதியைத் தீர்மானிக்கும் இருபெரும் கட்சிகளில் ஒன்றான அ.தி.மு.கவின் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. குறித்த கட்சியின் பொதுச் செயலாளர் யார் என்பது தீர்மானிக்கப்படலாம் என்று பரவலாக எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சராகவும் அ.தி.மு.. கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இருந்த ஜெயலலிதா உயிரிழந்ததை அடுத்து, முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் பொறுப்பேற்றுள்ளார். ஆனால் குறித்த கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வெற்றிடமாகவே உள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்கு சாலப் பொருத்தமானவர் என்று கட்சியின் முக்கிய தலைவர்கள் உட்பட முதலமைச்சர் பன்னீர்செல்வத்தின் ஆதரவையும் பெற்றவராக சசிகலா உள்ளார். சசிகலா, பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று பன்னீர்செல்வம் ஜெயா உயிரிழந்து சில தினங்களில் சசிகலாவிடம் கேட்டுக்கொண்டார்.

'மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (ஜெயலலிதா), உயிரிழந்ததை அடுத்து கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்கு பொருத்தமானவராக சசிகலாவே உள்ளார். ஜெயலலிதாவின் உற்ற நண்பியாக, மெய்ப்பாது காவலராக, அரசியல் ஆலோசகராக. விளங்கியவர் சசிகலா. எனவே ஜெயலலிதா கட்சியைக் கொண்டு சென்ற அதே இராணுவக் கட்டமைப்புடன் தொடர வேண்டுமாயின் சசிகலா பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்க வேண்டும்' என்று பன்னீர்செல்வம் தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.




கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், போயஸ் கார்டனில் வைத்து கடந்த திங்கட்கிழமை சசிகலாவை மீண்டும் சத்தித்தார் பன்னீர்செல்வம். கலந்தாலோசிக்கப்பட்ட விடயம் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை. ஆயினும் பொதுச் செயலாளர் பதவி வெற்றிடம் குறித்தே அதிமிகையாக கருத்தில் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. குறித்த அபிப்பிராயங்கள் ஏற்கும் படியாகவும் உள்ளன. பன்னீர்செல்வம் மட்டுமல்லாமல் ஏனைய அமைச்சர்களில் பெரும்பான்மையினரதும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களினதும், தொண்டர்களினதும் ஆதரவைப் பெற்றவராக சசிகலா உள்ளார்.

ஆனால், பதவியை ஏற்பது தொடர்பில் சசிகலா எவ்விதத் துலங்கல்களையும் வெளிப்படுத்தவில்லை. சசிகலா இவ்வாறு மௌனித்திருப்பதே அடுத்த பொதுச் செயலாளர் விடயத்தில் எதிர்பார்ப்பை இன்னும் அதிகமாக்கியுள்ளமைக்கு முக்கிய காரணம் எனலாம்.

இந்த வாதப் பிரதிவாதங்களில் இருந்து அ.தி.மு. கழகம் அடுத்த தலைமையைத் தேர்ந்தெடுப்பதில் தளம்பல்களை எதிர்கொள்கிறது என்பது மட்டும் தெளிவாகிறது. அங்கேதான் ஜெயா தவறு செய்துள்ளார். கருணாநிதிக்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தை வழிநடத்தத் தகுதியானவர் என்று ஸ்ராலின் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

கட்சியினதும் தனதும் அரசியல் வாரிசை உருவாக்குவதில் கருணாநிதி வெற்றிகண்டுள்ளார். ஆனால் ஜெயலலிதா அதைச் செய்யவில்லை. ஒருவேளை தனக்குப் பின்னர் கட்சியை வழிநடத்தத் தகுதியானவர் என்று ஒருவரை வழிநடத்தியிருந்தால் அல்லது அடையாளம் காட்டியிருந்தால் பொதுச் செயலாளர் விவகாரம் இவ்வளவு இழுபறி நிலைக்கு உட்படாது என்பது மட்டும் நிதர்சனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களும் மனிதத்துவத்துக்கான தேவைகளும்



மருத்துவர் சி.யமுனாநந்தா

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வரும் சூழலில் புதிய வருடத்தை தமிழ் மக்கள் நிறைந்த எதிர்பார்ப்புக் களுடன் வரவேற்கத் தயாராகிவிட்டனர். 2009 இல் ஆயுதப்போராட்டம் முடக் கப்பட்ட பின் என்பதனை விட 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட MOU (Memorandum of U nderstanding) சமாதான உடன்படிக் கைக்குப் பின் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளைப் பெறவும், மனிதத்துவத்துடன் வாழவும் சர்வதேச உதவிகளை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

ஈழத்தமிழர்கள் தமது நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு, இராஜதந்திர ரீதியில் கிடைக்கப் பெற்றுள்ள மூன்றாம் தரப்பு ஆவணங்கள்

01.1987 ஆம் ஆண்டில் உருவான இந் திய - இலங்கை ஒப்பந்தம்
02.2002 ஆம் ஆண்டில் நோர்வே அனுசரணையில் உருவான அமைதி உடன்படிக்கையும், தமிழீழ விடு தலைப் புலிகளுடனான 5 சுற்றுப் பேச்சு வார்த்தைகளும், இதன்போது உரு வாக்கப்பட்டSLMN (Srilanka Monitoriing Mission)
03.ஐ.நா. செயலாளர் நாயகம், இலங்கை சனாதிபதியின் 2009 ஆம் ஆண்டு கூட்டான பிரகடனம் (மகிந்த-பான்கீ மூன் பிரகடனம்)
04. ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை(UNSG expert panel Report)ஐ.நா. செயலாளர் நாயகம்நியமித்த நிபுணர்குழு அறிக்கை - 2013
05.ஐ.நா.மனித உரிமை அவையின் தொடர் தீர்மானங்களும் 2017 ஆம் ஆண்டின் 34ஆவது கூட்டத் தொடரில் எதிர்பார்க்கப்படும் தீர்மானமும்.
06.2010இல் Dublin Permanent People's Tribunal தீர்மானம் Dublin Permanrnt People's Tribunal 2010 தீர்மானத்தில் இலங்கை அரசு மீது போர்க்குற்றச்சாட் டுக்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான செயல்களுக்கான குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன.

2013 இல் நிறைவேற்றப்பட்ட தமிழக சட்டப் பேரவைத் தீர்மானம் முதலமைச்சர் ஜெய லலிதா அம்மையாரால் கொண்டு வரப் பட்டது. அதில் இந்திய, இலங்கையை நட்பு நாடான நிலையை நீக்கி, பொருளாதாரத் தடைகளை விதித்து, இலங்கைத் தமிழர்கள் மீதான இன அழிப்புக்கு சர்வதேச விசார ணைக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் ராஜதந்திர நகர்வுக்கு மேற்கூறிய 7 சர்வதேச தீர்மா ணங்கள் மிகவும் ஆணித்தரமான மூலங்க ளாகும். இதனை எமது இளம் சந்ததியினர் முற்றாகக் கற்றறிதல் வேண்டும். அடுத்து ஐ.நா. மனித உரிமை அமர்வின் 34ஆம் கூட்டத்தொடர் எதிர்வரும் பங்குனி மாதம் 2017ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் நாடாளுமன்ற கட்சி அரசியலுக்கு அப்பால், எமக்கு தேவைப்படும் மனிதத்தைப் பெறு வதற்கு முயற்சிக்கு வேண்டும்.

**ஈழத்தமிழர்களுக்கு இன்னமும் கிடைக்காத மனிதம்**

01.சிறையில் உள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை
02.தமிழ் குடும்பங்களுக்கு ஏற்பட்ட அழிவு களுக்கு முறையான இழப்பீடு
3.காணாமல் போனவர்களுக்கான விவரங் களை அறிதல்
04.காயப்பட்டோர், சித்திரவதைக்கு உட்பட் டோர், உடல் நோய்வாய்ப் பட்டோருக் கான மருத்துவ உதவியும், சமூகப் புனர்வாழ்வும்
05.கொல்லப்பட்டவர்களின் நினைவுச் சின் னங்களும், கொல்லப்பட்டவர்களின் உற வினர்களுக்கான நிரந்தர உதவிகள்.

சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளின் முழுவிவரமும் இருட்டடிக்கப் பட்டு உள்ளது. எவ்வித விசாரணையும் இன்றி பல தமிழர்கள் சிறை களில் 10 வருடங் களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுமுள் ளனர்.

**தமிழர்களின் மனிதத்தை மேம்படுத்து வதற்கான சர்வதேச உடன்பாடுகள்**

01.இலங்கை - இந்திய ஒப்பந்தம் (1987
02.நோர்வே அனுசரணை அமைதி உடன் படிக்கை (2002)
03.பான்கீமூன் - மகிந்த பிரகடனம் (2009)
04.ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை (2013) (UNSG Expert Panel Peport)
05.ஐ.நா. மனித உரிமை அவைத் தீர்மானங் கள் (2015) (UNHRC Resolution)
06.மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பு (2010)
07.தமிழக சட்டசபைத் தீர்மானம் (பங்குனி 27,2013)

ஈழத்தமிழ் அரசியல் செல்நெறியை முன் னெடுப்பவர்கள் குறிப்பாக இளம் அரசியல் விஞ்ஞானம் கற்போர் தமிழ் மனிதத்தை மேம் படுத்துவதற்கான அடிப்படைகளை அறிதல் வேண்டும்.

சிங்கள அரசிடம் தமிழ் மக்கள் அடக்கு முறைக்கு எதிராக எதிர்பார்ப்பது.

01.தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங் கள் முற்றாக நிறுத்தப்படல் வேண்டும்.
02.தமிழ்கிராமங்களில் பௌத்த விகாரை கள் அமைப்பது நிறுத்தப்படல் வேண் டும்.
03. தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக் கிரமிப்பு விலத்தப்படல் வேண்டும்.
04.தமிழர் தாயகமாக கடல் ஆக்கிரமிப்பு விலத்தப்படல் வேண்டும்.
05.தமிழர் தாயக பொதுவிட ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும்.

தமிழர்களுக்கு இலங்கையின் வடகிழக்கு பிரதேசத்தில் சுயாட்சி அடிப்படையிலான அரசியல் அதிகாரத்தை சிங்களமும் சர்வதேசமும் வழங்க வேண்டும்.

> “பெரிய இன அழிப்பை நடத்திய சிங்கள அரசு, அதனை உலக ரீதியில் இராஜதந்திரமாக மறைத் தது போக வரலாற்றில் மறைப்பதற்காகத் தமிழர் தாயகத்தில் பெரிய சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுக்கின்றது. இதற்காக தமிழ்க் கிராமங் கள் தோறும் புத்தவிகாரைகளை நிறுவுகின்றது. தமிழர் தாய கத்தின் கடல்வளங்களைக் காவு கொள்கின்றது. வலிகாமம், வன்னி பெருநிலம் என்பவற்றில் பெருமளவு நிலத்தை உயர் பாதுகாப்பு வலயமாக தடுத்து வைத்துள்ளது.

**காவு கொள்ளப்பட்ட தமிழ் மனிதம்**

01.சிறையில் உள்ள தமிழ் கைதிகளின் விடுதலை
02.அழிவுகளுக்கான இழப்பீடு.
03.காணாமல் போனவர்களின் குடும்பங்களுக் கான நீதி.
04.காணமல்போய் சித்திரவதைக்கு உட்பட் டோருக்கான நீதி.
05.கொல்லப்பட்டோர் குடும்பங்களுக்கான நீதி.

பெரிய இன அழிப்பை நடத்திய சிங்கள அரசு, அதனை உலக ரீதியில் இராஜதந்திரமாக மறைத் தது போக வரலாற்றில் மறைப்பதற்காகத் தமிழர் தாயகத்தில் பெரிய சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுக்கின்றது. இதற்காக தமிழ்க் கிராம ங்கள் தோறும் புத்தவிகாரைகளை நிறுவுகின்றது. தமிழர் தாயக கடல்வளங்களை காவு கொண்டு உள்ளது. வலிகாமம், வன்னி பெருநிலம் என் பவற்றில் பெருமளவு நிலத்தை உயர் பாதுகாப்பு வலயமாக தடுத்து வைத்து உள்ளது.

எனவே தற்போதைய அரசினால் மேற்கொள்ளப் படும்.

01.சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.
02.பௌத்த விகாரைகள் அமைத்தல் நிறுத்தப் படல் வேண்டும்.
03.இராணுவ ஆக்கிரமிப்பு முற்றாக விலத்தல் வேண்டும்.
05.பொதுவிட ஆக்கிரமிப்பு முற்றாக அகற்றப் படல் வேண்டும்.

இறுதியாக இலங்கை அரசு, ஒற்றை ஆட்சிக்குள் அரசியல் தீர்வை வழங்க முனைவது, முழு இலங் கையையும் சிங்களமயமாக்கலுக்கான திட்டமா கவே தமிழர்களால் கருதப்படும். எனவே சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வே தமிழ் மக்கள் விரும்பி நிற்பதாகும். அன்றேல் இலங்கையில் மீளவும் போராட்டங்கள் விடுதலையை நோக்கி மீளவும் தொடர வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும் நாள். சுபவிரயங்களை மேற்கொள்வதால் வீண் விரயங்கள் குறையும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள். உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள் விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

**மிதுனம்:** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும் நாள். ஆரோக்கியம் சீராக மாற்றுமருத்துவத்தை மேற்கொள்வீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். புதிய வியாபாரம் வளர்ச்சியைக் கொடுக்கும்.

**கடகம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள். மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** எதிர்கால வெற்றிக்கு அடித்தளமிடும் நாள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள். பெற்றோர் வழியில் அனுகூலம் உண்டு. பழைய வாகனங்களை மாற்றிப் புதிய வாகனங்கள் வாங்க முற்படுவீர்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். எடுத்த செயலை எளிதில் முடிக்க உடன்பிறப்புகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும். வழக்கில் வெற்றி கிட்டும்.

**துலாம்:** பக்குவமாக நடந்து கொண்டு பாராட்டுப்பெறும் நாள். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வங்கிச் சேமிப்பு உயரும்.

**விருச்சிகம்:** பிரதோச வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள். வருமானம் இருமடங்காகும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். ஆன்மிகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சுபவிரயம் அதிகரிக்கும் நாள். சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தி

**மகரம்:** லாபகரமான நாள். பலருடைய அன்பிற்கும் பாத்திரமாவீர்கள். திடீர் பணவரவால் சந்தோசம் அதிகரிக்கும். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும் நாள். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும். கல்மனம் படைத்த சிலரையும் சாமர்த்தியமாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் விலகும். கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும். திடீர் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

# வருமானத்தில் முதலிடத்தில் சல்மான்கான்

பிரபல போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் இந்தியாவில் அதிகம் சம்பாதிக்கும் தனி நபர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் 2015-2016ஆம் ஆண்டுக்கான 100 பேர் அடங்கிய பட்டியலை நேற்று வெளியிட்டது. அதில் பொலிவூட் நடிகர் சல்மான்கான் முதல் இடம் பிடித்துள்ளார். இதுவரை முதல் இடத்தில் இருந்து ஷாருக்கானை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்துக்கு வந்திருக்கிறார்.

சல்மான்கானின் ஆண்டு வருமானம் 270 கோடி ரூபா. ஷாருக்கானின் ஆண்டு வருமானம் 222 கோடி ரூபா. ஆனால் புகழ் அடிப்படையில் ஷாருக்கான் முதல் இடத்தில் இருக்கிறார். ஏற்கனவே புகழ் அடிப்படையில் முதல் இடத்தில் இருந்தது கிரிக்கெட் வீரர் கோக்லி. வருமான அடிப்படையில் தற்போது 3ஆவது இடத்தில் இருக்கிறார். 203 கோடி வருவாய் ஈட்டிய அக்ஷய் குமாருக்கு 4ஆவது இடம் கிடைத்துள்ளது. கிரிக்கெட் வீரர் டோனி 5ஆவது இடத்தில் இருக்கிறார். இந்தப் பட்டியலில் நடிகைகள் யாரும் இடம் பெறவில்லை.



## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | 2 | 6 | |
| 6 | | 1 | | 8 | | | | |
| 3 | | | | | 6 | 8 | | 7 |
| | 4 | 6 | 1 | 5 | | 9 | | |
| | 3 | | | | | | 5 | |
| | | 5 | | 9 | 7 | 6 | 4 | |
| 8 | | 7 | 5 | | | | | |
| | | | | 7 | | 4 | | |
| 4 | 6 | 3 | | 2 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 7 | 6 | 8 | 3 | 4 | 9 |
| 7 | 3 | 9 | 5 | 2 | 4 | 6 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 9 | 1 | 7 | 5 | 2 |
| 6 | 2 | 3 | 8 | 7 | 5 | 9 | 1 | 4 |
| 1 | 5 | 7 | 6 | 4 | 9 | 2 | 3 | 8 |
| 9 | 4 | 8 | 1 | 3 | 2 | 5 | 7 | 6 |
| 5 | 7 | 1 | 9 | 8 | 6 | 4 | 2 | 3 |
| 8 | 6 | 2 | 4 | 5 | 3 | 1 | 9 | 7 |
| 3 | 9 | 4 | 2 | 1 | 7 | 8 | 6 | 5 |


சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.

**ஆசிரியர் :** டேய் அகிலா நீ ஏண்டா கடைசி மேசைக்குக் கீழே உட்கார்ந்திருக்கிறா?

**அகிலன்:** நீங்க தானே டீச்சர் சொன்னீங்க, வகுப்பில இருக்கிறதே தெரியக் கூடாதுன்னு, அதனாலதான்












சதுரங்கக் காய்களுடன் மனதிற்குள் உரையாடும் பொழுது நான் ஒரு விஞ்ஞானியின் உருக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புருவ முடி சரி செய்யும் முறை




1. புருவமுடியை சிறிய சீப்பால் வாரிக்கொள்க.
2. பின்னர் தேவையற்ற முடியை உரோம நீக்கியால் நீக்குக.
3. புருவத்தில் நீளமாக வளர்ந்திருக்கும் முடியை சிறிய கத்தரிக்கோலால் வெட்டிக் கொள்க.
4. மீண்டும் வாரி துல்லியமான திருத்தங்களைச் செய்க.



## பெண்களுக்கு நன்மை பயக்கும் மீன் உணவுகள்

- மீன் உணவுகளில் பெண்களுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் அடங்கியுள்ளன.
- அசைவ உணவு வகைகளில் அதிக நன்மை தருவதாகத் திகழ்பவை மீன்கள்.
- ஒரு வேளை மீன் சாப்பிடுவது இரண்டு வேளை உணவுக்குச் சமமானது என்று கூறத்தக்க வகையில் அதில் சத்துகள் நிறைந்துள்ளன. முக்கியமாக புரதம், விற்றமின்கள் ஏ, டி மற்றும் பி, இரும்பு, அயடின், செலினியம், துத்தநாகம் உள்ளிட்ட உடலுக்குத் தேவையான அரிதான தனிமச் சத்துகளும் உள்ளன.
- பெண்கள் உடல் வளர்ச்சிக்கு மீன் உணவு அவசியம். குறிப்பாக, கர்ப்பமாக இருக்கும்போது, குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான அரிதான அயடின் சத்து மீன்களில் கிடைக்கிறது. குழந்தைப் பிறப்புக்கு பிறகும் தேவையான பால் சுரக்க மீன்கள் சிறந்த உணவாக உள்ளன.
- மீன்கள், மற்ற அசைவ உணவுகளைவிட குறைந்த கலோரியை கொண்ட புரதத்தைப் பெற்றிருப்பது ஆரோக்கியத்துக்கு உகந்தது.
- நுண்சத்துகளும் மீன்வகைகளைப் பொறுத்து மாறுபடுகின்றன. ரத்தத்திற்கு தேவையான நுண்சத்து, எலும்புக்கு தேவையான கல்சியம் போன்றவை தாவர உணவுகளைவிட மீன்களில் சிறப்பான வகையில் உடலுக்கு கிடைக்கின்றன.
- இதய நோயாளிகள் குறைவான அளவில் ஒழுங்கான இடைவெளியில் மீன் சாப்பிட்டு வந்தால், மாரடைப்பு உயிர் அபாயத்தை கூடியவரை தவிர்க்கலாம்.





## வாழைப் பூ துவையல்

### தேவையான பொருள்கள்

வாழைப் பூ – 1
மஞ்சள் தூள் – ¼ தேக்கரண்டி
தேங்காய் எண்ணெய் – 2 தேக்கரண்டி
கடுகு – ½ தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு – 1½ மேசைக்கரண்டி
செத்தல் மிளகாய் – 3
பெருங்காயம் – ஒரு சிட்டிகை
புளி விழுது – ¼ தேக்கரண்டி
தேங்காய் – 2 மேசைக்கரண்டி (துருவியது)
உப்பு – தேவையான அளவு

### செய்முறை :

வாழைப் பூவை நன்கு கழுவி சுத்தம் செய்து சிறிதாக நறுக்கி அதனுடன் தேவையான அளவு நீர், உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து குக்கரில் 2 விசில் வரும் வரை வைக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், செத்தல் மிளகாய் போட்டு தாளித்த பின் புளி விழுது சேர்த்து 3 நொடிகள் வதக்கவும்.

பின்பு வேக வைத்த வாழைப் பூவைச் சேர்த்து 2 நிமிடம் நன்கு கிளறவும். அடுத்து அதில் தேங்காய் துருவலை சேர்க்கவும். அனைத்தும் நன்றாக வதங்கியதும் ஆற வைக்கவும். நன்றாக ஆறியதும் அதனை மிக்சியில் போட்டு அதனுடன் உப்பு, சிறிது நீர் விட்டு கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும். சுவையான சத்தான வாழைப் பூ துவையல் தயார்.



## இ புதுசு



### பல அடுக்கு வர்ண மாலைகள்

பல அடுக்கு வர்ண மாலைகள் அறிமுகமாகியுள்ளன. விரும்பிய வகையில் அணிந்து கொள்ளலாம். இவை 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் வான் தாக்குதல்; 10 குழந்தைகள் உள்ளிட்ட 20 பேர் சாவு

பெய்ரூட், டிசெ. 29
சிரியாவின் கிராமம் ஒன்றில் நடத்தப்பட்ட வானூர்தித் தாக்குதலில் 10 குழந்தைகள் உள்ளிட்ட 22 பொது மக்கள் உயிரிழந்தனர். சிரியாவின் எண்ணெய் வளம் நிறைந்த டேர் எஜ்ஜோர் மாகாணத்தில் ஹோஜ்னா கிராமம் உள்ளது. இங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதிக்கம் உள்ளது. ஐ.எஸ். பயங்கரவாதிகளைக் குறிவைத்து சிரியாவில் அமெரிக்கா தலைமையிலான படைகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றன.
இந்த நிலையில், நேற்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாத விமானப்படை தாக்குதல் நடத்தியதில் 10 குழந்தைகள் உள்ளிட்ட 22 பொதுமக்கள் உயிரிழந்தனர். சாவடைந்தவர்கள் இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர் என மனித உரிமை அமைப்பு தெரிவித்தது. (வ)


## 45 ஆம் நாள் நினைவலைகள்

கண்கள் மகிழ
05 . 07 . 1936



கண்கள் நெகிழ
14 . 11 . 2016

கலைமகளின் கலைச்சிகரம்

### அமரர் தில்லை சின்னையா

(ஓய்வு நிலை உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் திணைக்களம்)

ஞானச் சுடரேற்றி நின்றானை நல்லானை
தேனமுதச் சொல்லானை நாமிழந்தோம்- வானவழி
பார்த்துத் தொழுகின்றோம் பரமனிடங் கேட்கின்றோம்
காத்தருள அவன்கருணை வேண்டி.

" எங்கே உங்களது அன்புடை நெஞ்சம்
ஏங்கித் தவிக்குதே எங்களின் நெஞ்சம் "

"கவிதாலயா"
15, நெத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(J 7205)
(22,18)

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்கள்

### கோவிந்தர் சோமசுந்தரம்

(முன்னாள் கிராமசபை உத்தியோகத்தர்)



தோற்றம் 25.02.1932
மறைவு 26.12.2016

கிளிநொச்சி, பூநகரி, ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும் பூநகரி, அத்தாவை வசிப்பிடமாகவும் வடகாட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தர் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்(முன்னாள் கிராம சபைத் தலைவர்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நகுலாம்பிகை (விவாக பிறப்பு. இறப்புப் பதிவாளர்)அவர்களின் அன்புக் கணவரும் சிவகுமார் (ஜேர்மனி). சிவநேசன்(நோர்வே). சிவபாலன் (லண்டன்). சிவரூபன்(சுவிஸ்). சிவதாசன்(லண்டன்). சிவரஞ்சினி (ஆசிரியை - கொல்லவிளாங்குளம். அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை). சிவதர்சினி (லண்டன்) காலஞ்சென்ற சிவசுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா அவர்களின் அன்புச்சகோதரரும் பாமாலினி (நோர்வே). சசிகலா(லண்டன்). கருணகலா (சுவிஸ்). கேமாலினி(லண்டன்). கிருஸ்ணவேணு (கிராமசேவையாளர் ஒட்டறுத்த குளம்). ஶ்ரீகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவபாக்கியம். சுப்புலட்சுமி. பாலகிருஸ்ணன் (இலங்கை). பாலச்சந்திரன்(சுவிஸ்). ரஞ்சிதமலர் (நோர்வே). புஸ்பராணி(ஜேர்மனி) காலஞ்சென்ற சுந்தராம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவரூபி. சிவலோசனா. சிவறஞ்சன். சிவசாந்தன் காலஞ்சென்ற சிவதயாளன். சிவசங்கர். சிவப்பிரியன் ஆகியோரின் பெரிய தந்தையும் லதுமிகா. லகிசன். மிருதிகா. திகானுகா. சுபானுகா. நிரோசி. நிசானி. வைஷ்ணவி. விசால். அபிசயா. அக்சயா. சாருஷன். சாருதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை பி.ப 3.00 மணி அளவில் நடைபெற்று வடகாட்டு இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வடகாடு,
வவுனிக்குளம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:

| | |
|---|---|
| நகுலாம்பிகை(மனைவி - இலங்கை) | +94 77 892 0801 |
| கிருஸ்ணவேணு (மருமகன் - இலங்கை) | +94 77 237 2509 |
| சிவா(மகன் - ஜேர்மனி) | +491 522 335 1375 |
| நேசன்(மகன் - நோர்வே) | +479 945 426 |

(V/179)
(14,17,18,)



## மரண அறிவித்தல்

### திருமதி அமிர்தசீலி மலக்கியாஸ்



பிறப்பு 28.12.1938
இறப்பு 26.12.2016

தாளையடியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமகாவும் கொண்ட திருமதி அமிர்தசீலி மலக்கியாஸ் கடந்த (26.12.2016) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ் - சிசிலியா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற மலக்கியாஸ் (பாக்கியராசா) வின் அன்புமனைவியும் பிலோமினா, வசந்தி (ஜேர்மனி) காலஞ்சென்ற சாந்தினி மற்றும் ஜெயந்தினி (ஆசிரியர் யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), அமுதினி (ஜேர்மனி) ஆகி யோரின் பாசமிகு தாயாரும் இராசதுரை, அன்ரனி பெர்னாண்டோ (ஜேர்மனி), சிவகணேசன் (விரிவுரையாளர் கிழக்கு பல்கலைக்கழகம்), எட்வின் (அதிபர்), டியூக் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் அருட்சகோதரி லூயிஸ் மேரியின் அன்புமச்சாளும் மற்றும் நெல்சன் (ஜேர்மனி), வில்சன் காலஞ்சென்ற புனிதசீலி மற்றும் பனிமயசீலி (ஆஸ்திரேலியா), ஜோன்சன் (சுவிஸ்), குணசீலி ( ஆஸ்திரேலியா), தியாகசீலி (ஆஸ்திரேலியா), பீற்றசன் (சுவிஸ்), ஜெயசீலி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜசிந்தா (ஜேர்மனி), டொமினிக்கா காலஞ்சென்ற அன்ரன், சில்வேஸ்ரர் (ஆஸ்திரேலியா), டொறின் பியாட்டிஸ் பபி (சுவிஸ்), நவரட்ணசிங்கம் (ஆஸ்திரேலியா), மாகிறேற் (பிரான்ஸ்), பாக்கியநாதன் (ஆஸ்திரேலியா), கலா (சுவிஸ்), ஜெபதிலக் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் கவிதா, கவிராஜ், விஜிதா, விஜயராஜ், விமல், சுஜிதா, புவிராஜ், அனற், அஜித், அன்ரூ, தர்சிகா, கருபிரமந்தினி, ஜோய்விதூஷன், ஜோசப்டனுசன், செறின், நடினா, றிக்காடோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (31.12.2016) சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு காலை 9.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 07, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

(ஜே/7146)(17.19.20)



உதிப்பு
10 . 11 . 1947



உதிர்வு
26 . 12 . 2016

### குமாரசாமி இரத்தினம்

(ஓய்வுநிலை கிளை முகாமையாளர் -சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம்)

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி இரத்தினம் 26.12.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அரியேஸ்வரியின் அன்புக் கணவரும் சகீலன் (சுவிஸ்), கோகிலன்( அபிஷா றெக்ஸ் - சாவகச்சேரி), ராஜினி (டென்மார்க்), ஜீவாயினி (பிரான்ஸ்), பகீரதி (கனடா), சுகல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேந்திரம் (இ.போ.ச புளியம்பொக்கணை), சிவானந்தம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி, மகேந்திரம்(கால்நடை வைத்திய நிலையம் கைதடி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யாழினி (சுவிஸ்), சுசிகலா, புவனேஸ்வரன் (டென்மார்க்), சிவநாதன் (பிரான்ஸ்), கிருபானந்தன்(கனடா), சதீஸ் (நகரசபை சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சயானா, சாதனா, அபிஷா, அனோஸ்கா, அக்ஷயன், நிலக்ஷன், நிலக்ஷி, வாணன், நிலா, ரம்மியா, ரதுஷன், ஆகாஷ், சிபி, கனி, அஸ்மிதா, தருண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர். இ. கோகிலன் -
(மகன் - அபிஷா றெக்ஸ் சாவகச்சேரி ,
செயலாளர் லயன்ஸ் கழகம் - சாவகச்சேரி)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(8/27297)(216)

077 912 4249


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்குண்டு**

2 பரப்பு வெற்றுக்காணி A9,
கண்டி வீதியில், யாழ்ப்பாணம்
கச்சேரிக்கு அருகில்
தரகர்கள் வேண்டாம்.
தொடர்பு - 076 708 7942,
075 048 4074

**யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும்
நிர்வாகத்தெரிவும் - 2017**

இடம் - கல்லூரி மண்டபம்
காலம் - 08.01.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - பி.ப. 3 மணி
அனைத்து பழைய மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

செயலாளர்,
பழைய மாணவர்சங்கம்.

## மரண அறிவித்தல்

## இளையதம்பி தர்மகுலசிங்கம்



நாவற்குழி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட (சாமி தோட்டம்) இளையதம்பி தர்மகுலசிங்கம் 27.12.2016 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற மல்லிகாவின் அன்புக் கணவரும் மீனாம்பிகை (லண்டன்), நாகேஸ்வரி, சற்குணலட்சுமி, புவனேஸ்வரி, தனலட்சுமி, காலஞ்சென்ற ஜீவானந்தம் மற்றும் அற்புதராசா காலஞ்சென்றவர்களான செல்வராசா, சொர்ணராசா மற்றும் கிருஷ்ணராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.12.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாவற்குழி மேற்கு,
கைதடி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

திருமதி

## தெய்வானைப்பிள்ளை தர்மலிங்கம்

பிறப்பு 05 . 08 . 1939



இறப்பு 25 . 12 . 2016

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை தர்மலிங்கம் 25.12.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சின்னையா தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராஜா, செல்லத்துரை மற்றும் தங்கரத்தினம், பாலசிங்கம், கதிரவேலு ஆகியோரின் சகோதரியும் சேவாசெல்வி, சிற்சபேசன் (நோர்வே), ரவீந்திரன் (நோர்வே), விஜயகுமாரி (சுவிஸ்), ஸ்ரீரதி (அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியபாமா, சாந்தி, யோகதாஸ், ஆனந்தசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் சாரங்கன், சாருஜன், ரகுஜன், அட்சயன், வினிதா, ஆர்த்தி, அபிரா, மதுஷாலினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மத்தி,
நீர்வேலி.**

தகவல்:
**பிள்ளைகள்.**

## ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பான் நாட்டின் கிழக்குப் பகுதியில் ஹோன்சூ தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆகப் பதிவாகி உள்ளது. டோக்கியோ உள்ளிட்ட சில முக்கிய நகரங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல் நள்ளிரவு வரை வெளியாகவில்லை. மேலும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. (வ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண் மகிழ்வு 17 . 05 . 1937



விண் மகிழ்வு 29 . 11 . 2016

### அமரர் சிவக்கொழுந்து விநாயகமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்)

எமது குடும்ப விளக்கின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து நேரில் அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசிகள், பத்திரிகைகள், முகநூல், இணையத்தளங்களினூடாக அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய நிறுவனங்கள், பாடசாலைகளுக்கும், அஞ்சலி உரைகள் ஆற்றியோருக்கும் எமது சிரம்தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 29.11.2016 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தின் அணையா விளக்கு அமரர் சிவக்கொழுந்து விநாயகமூர்த்தி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், சபிண்டீகரணக் கிரியைகளும் இன்று (29.12.2016) வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அதில் பங்குபற்றுவதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேம்பிராய் கலட்டி விநாயகரின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம். இவ்வழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்.**

விநாயகமூர்த்தி வாத்தியார் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ். ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவனும் குரு நல்லை **க. கண்ணதாஸ்** அவர்களின் சீடனும் **திரு. சி. ஞானப்பிரகாசம்** அப்பாலை அண்ணாவியார் அவர்களின் பூட்டனும் வேய்ங்குழல் வித்துவான் **திரு.ஜி. எஸ். வசந்தகுலசிங்கம்** அவர்களின் பேரனும் யாழ். இந்துக்கல்லூரி மாணவனும் **திரு.திருமதி வ.ருக்மிணிகாந்தன் - நகுலேஸ்வரி** தம்பதியரின் புதல்வனுமான

### செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன்

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்



இடம் - இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலா மண்டபம்
யாழ்ப்பாணம்
காலம் - 30.12.2016 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி

*தலைவர் :
செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்
அவர்கள்

*பிரதம விருந்தினர் :
திரு. ஐ. தயானந்தராஜா
(யாழ். இந்துக்கல்லூரி அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள் :
கலாபூசணம் இசைத்தென்றல் திரு. ம.யேசுதாசன் அவர்கள்
தண்ணுமை வேந்தன் திரு. மா. சிதம்பரநாதன் அவர்கள்
திரு. எம். ஆர். ராஜ்மோகன் அவர்கள்
சட்டத்தரணி சிரேஷ்ட சங்கப்பணிப்பாளர்,
மதிப்பீட்டுரை திருமதி சுகன்யா அரவிந்தன் அவர்கள்
விரிவுரையாளர் இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்.

அணிசேர் கலைஞர்கள்
பாட்டு - திரு. தவநாதன் றொபேட்
வயலின் - திரு. அ. ஜெயராமன்
மிருதங்கம் - செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன்
கெஞ்சிரா - பிரம்மஸ்ரீ ந. சிவசுந்தரசர்மா
கடம் - திரு. ஞா. வசந்த்
முகர்சிங் - திரு. ந. சதீஸ்குமார்
தம்புரா - திரு. க. ரஜீவன்



கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திரு. திருமதி வ. ருக்மிணிகாந்தன் குடும்பத்தினர்.

## இனி இவை இன்னும் எவ்வளவு காலம்?

உலகின் மிகவும் வேகமான விலங்கினமான சிறுத்தைப்புலி அழிவை நோக்கிய பாதையில் மிகவும் வேகமாகப் பயணிப்பது போலத் தோன்றுகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். தமது பாரம்பரிய வாழ்விடங்களை விட்டு உணவைத் தேடி அலை அலைந்து திரியும் நேரத்தில் மனிதர்களின் தாக்குதல்களுக்கு ஆளாகின்றன. தற்போது 7100 சிறுத்தைப் புலிகளே உலகளவில் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. உடல் மெலிதாக இருந்தாலும், கால்களில் அசாத்திய பலம் கொண்டவை சிறுத்தைப் புலிகள். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை


யாழ் நகரில் K.K.S. Road இல் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.

1. சமையற்காரர்கள் (இலங்கை, இந்திய உணவுவகை)
2. சமையல் உதவியாளர் (இருபாலாரும்)
3. றொட்டி தயாரிப்பாளர் (கொத்துறொட்டி)
4. தேநீர் தயாரிப்பாளர்
5. உதவியாளர்கள்.

**077 515 8862/ 075 283 8353**


## மரண அறிவித்தல்

# நல்லதம்பி கணேசபிள்ளை



வேலணை மேற்கு. 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி கணேசபிள்ளை 25.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மீனலோஜினியின் அன்புக்கணவரும் கனகேந்திரன் (லண்டன்). திருச்செல்வி(ஆசிரியை. யா/ கொக்குவில் ஸ்ரீ இராம கி. வி). நற்குணராசா (லண்டன்). காலஞ்சென்ற தவச்செல்வி மற்றும் சந்திரகலா (ஜேர்மனி). ஆனந்தகுமரன் (அமெரிக்கா). மதிவதனி(பிரான்ஸ்). வதனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லட்சுமி. ஸ்ரீவிசயன். சாந்தி. வரதநாதன். சுதாகரன். றஜிகலா. விக்னேஸ்வரலிங்கம். உதயவிக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சந்தியா மற்றும் கெசியா. சஜன். மதுஷியா. லக்ஷியா. ஹசன். அகிலன். அரவிந். மதுஷாந். அஸ்வின். சயானா. தர்ஷா. கஜிதா. தனுஜா. டிலக்சன். ஷனோஜன். லக்ஷயன். தர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா. சிவகாமிப்பிள்ளை. நாகபிள்ளை. கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(29.12.2016) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்**
**075 470 8300 (மகன்), 077 666 9054(மகள்)**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 . 01 . 1951 | 26 . 12 . 2016 |

### திருமதி **பரமேஸ்வரி பாலசிங்கம்**

கைதடி நாவற்குழி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் 26.12.2016 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் கணேசலிங்கம், கந்தசாமி புவனேஸ்வரி, செல்வராசா (பிரான்ஸ்), சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடேசமூர்த்தி (சுவிஸ்), ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும், திவ்யா, தமிழ்ப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியும் சஜித், தக்ஷியா, தர்ஷனன், கிஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி**
**நாவற்குழி தெற்கு.**

(C/27502)
(10.17.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 905 7729**

## மரண அறிவித்தல்

| அன்னையின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 25 . 10 . 1936 | 26 . 12 . 2016 |



# நாகமுத்து கந்தப்பு

யாழ் அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த நாகமுத்து கந்தப்பு 26.12.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து- வேலாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி- சின்னத்தங்கம் தம்பதியினரின் அருமை மருமகனும் சின்னத்தம்பி காலஞ்சென்ற சின்னப்பிள்ளை மற்றும் மருதப்பு. கந்தையா. ஐயம்பிள்ளளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னத்தம்பி இராஜதுரை அவர்களின் மைத்துனரும் திருமதி செல்வரட்ணத்தின் அன்புக் கணவரும் தேவமனோகரி(டென்மார்க்),தேவமனோகரன்(சுவிஸ்). செல்வமனோகரன் (லண்டன்). பேபிமனோகரி (சுவிஸ்). பாலமனோகரி(லண்டன்) காலஞ்சென்ற மாய மனோகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவ சர்வணபவன். சுமதி. எழிலரசி. பார்த்திபன். செல்வமோகன் ஆகியோரின் மாமனாரும் கபிலன். மிதுலா. கனீபல். நிரோஜன். நிசாங்கி. டனி. அஞ்சலி. மக்சிம். ஸ்ரீபன். மௌனிஷா. மகிலன். றம்யன். ஜெனீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016 ) வியாழக்கிழமை ந.ப 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தோப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
076 938 6941

## மரண அறிவித்தல்

# திருமதி லலிதாம்பிகை மகேந்திரம்

**( காரைநகர் - திருக்கோவில்)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் தற்போது இல.82, பிரதானவீதி, திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லலிதாம்பிகை மகேந்திரம் 28.12.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-மாணிக்கம் (கல்கமுவ ஸ்ரோர்ஸ்) தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை(ஓய்வுபெற்ற ஆசிரியர், காரை இந்துக் கல்லூரி)-சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கணபதிப்பிள்ளை மகேந்திரம் (ஓய்வுபெற்ற லிகிதர், சுகாதாரத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் நந்தினி(U.K), காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் சாந்தினி(U.K), மாலினி (முகாமையாளர், மக்கள் வங்கி, திருக்கோவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமசிவம்(U.K), கனகசுந்தரம் (U.K), அமலேஸ்வரநாதன்(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், திருக்கோவில்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் விமலாம்பிகை, அன்னலட்சுமி ,தவமலர், பாக்கியம் காலஞ்சென்ற வரதராசா மற்றும் நவமலர் காலஞ்சென்ற சிவராசா மற்றும் செல்வராசா, மங்கயற்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லீலாவதி, ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் தனுஜன்(U.K), சங்கவி(U.K), நிலானி(U.K), வித்தகன் (U.K), கனுஷ்ரிகன்(தம்பிலுவில் ம.ம. வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை(30.12.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது திருக்கோவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருக்கோவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.82, பிரதானவீதி,**
**திருக்கோவில்.**
**T.P 067 226 5058**

தகவல் :
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 கொடிய விடம் கொண்ட பாம்புகளுடன் இருவர் கைது

புனே, டிசெ. 29
இந்தியாவின் மேற்குப் பகுதி நகரான புனேயில் அடுக்குமாடிக் குடியிருப்பில் 70க்கும் மேற்பட்ட கொடிய விடம் கொண்ட பாம்புகளை வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மரப்பெட்டிகள் மற்றும் சாக்கு மூட்டைகளிலிருந்து 40க்கும் மேற்பட்ட கண்ணாடி விரியன் மற்றும் 30 நாக பாம்புகளை அந்த அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.
மேலும் அந்தப் பாம்புகள் வைக்கப்பட்டிருந்த வீட்டில், கைது செய்யப்பட்ட நபருடன், அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடம் இருந்தனர்.
பாம்புகளின் விடம் எடுப்பதற்காக, கைது செய்யப்பட்டவர்கள் பாம்பாட்டிகளிடமிருந்து அல்லது காடுகளிலிருந்து பாம்புகளைப் பிடித்து வந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தியாவில் சில பகுதிகளில் பாம்புகளின் விடம் இலாபத்திற்காக விற்கப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட வன உயிரினங்களைப் பிடித்து வைத்திருப்பது சட்டவிரோத செயலாகும். (வ)

## விற்பனையாளர்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் கணினியில் Bill போடக் கூடிய அனுபவம் உள்ளவர்கள் (பெண்கள்) விரும்பத்தக்கது.


தொடர்பு - 077 293 5095
077 915 7883

# இந்துக்களுக்கு பிரிட்டனில் சிக்கல்

பிரிட்டன் அரசு வெளியிட்டுள்ள புதிய 5 பவுண்ட் நாணயத்தாள்களில் மிருகக்கொழுப்பு தடவப்பட்டுள்ளது என்பதால், அவற்றை நன்கொடையாகப் பெற இந்து கோவில் நிர்வாகங்கள் தடை விதித்துள்ளன. குறிப்பிட்ட நாணயத்தாள்கள் மீது தடவப்பட்டுள்ள கொழுப்புப் படிமத்தை அகற்ற வேண்டும் என்று கோரி 50 ஆயிரத்திற்கும் அதிகமான இந்துக்கள் பிரிட்டன் அரசுக்கு கையெழுத்து இயக்கம் நடத்தி, மனு அளித்துள்ளனர்.
பிரிட்டன் வங்கி, பிரிட்டனின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் படத்துடன் கூடிய, 5 பவுண்ட் நாணயத்தாள்களை, இந்த ஆண்டு செப்ரெம்பரில் அறிமுகப்படுத்தியது. (வ)

# ரயில் நிலையத்தில் தூங்கிய நபரை உயிரோடு கொளுத்த முயன்ற 7 அகதிகள் கைது

பெர்லின், டிசெ. 29
வீடில்லாத ஒரு நபரை தீ வைத்து கொளுத்த முயற்சி செய்ததாக கூறி ஏழு இளம் அகதிகள் மீது ஜேர்மனியில் உள்ள அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். கிறிஸ்துமஸ் தினத்தன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.




பெர்லினிலுள்ள ஒரு சுரங்க ரயில் நிலையத்தில் இருந்த அந்த நபர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் தொடர்பாக கண்காணிப்பு கமராவில் பதிவான காட்சிகளை பொலிஸார் வெளியிட்ட பின்னர், உடனடியாக ஆறு சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.
இதன்போது அந்த நபர் எந்தவித பாதிப்புக்கும் ஆளாகாமல் தப்பினார்.
ஜேர்மன் நாட்டினரால், வீடற்ற மக்கள் மீது பெருமளவு தாக்குதல் நடைபெற்றுவருகிறது. பெரும்பாலும் இந்தத் தாக்குதலை நடத்துபவர்கள் தீவிர வலது சாரி செயற்பாட்டாளர்களாக உள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை தம்பிராசா

(உரிமையாளர் - தம்பிராட்டி உதிரிப்பாக வாணிப நிலையம், ஸ்கந்தபுரம்)



பிறப்பு :- 17.05.1938
இறப்பு :- 28.12.2016

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிராசா நேற்று (28.12.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இலட்சுமி தம்பதிகளின் மருமகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், நவநீதராசா, கேதீஸ்வரராசா, பிரதீபராசா, கேதீஸ்வரி, தேன்மொழி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகரெத்தினம் மற்றும் தவமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், பொன்னம்மா மற்றும் சரஸ்வதி, நடராசா ஆகியோரின் மைத்துனரும், நவரெத்தினராசா, மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும், பிரணவன், கபின், அபிஷன், மகிழினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவியாத்தனை,
களபூமி, காரைநகர்.
(J/7226)
(11,18)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### லோகநாதன் சதீஸ்

தோற்றம் 04.08.1981 மறைவு 26.12.2016



நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் சதீஸ் 26. 12.2016 அகால மரணமடைந்தார்.

அன்னார் லோகநாதன் - சாரதாதேவி தம்பதிகளின் மூத்த புதல்வனும் சபேஸ், தாட்சாயினி ஆகியோரின் சகோதரனும் ரஜீவனின் மைத்துனரும் திவ்யாவின் அன்புக் கணவரும் சண்முகராசா -சாந்தி தம்பதியினரின் (சுழிபுரம்) அன்புமருமகனும் பிரதீபன், பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெற்றோர்
நீர்வேலி வடக்கு, இராச வீதி.
மாமா
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்
021 205 3537




Neergi Beauty Parlour Advance Updating Class

வருட இறுதிக்கான துரித கால பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன

அழகுக்கலை பயின்ற / பயில விரும்புகின்ற மகளிருக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்புக்கள் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும் .

சிறப்பு சலுகை 50 % விசேட கழிவு

இடம். YMCA மண்டபம் (கச்சேரி)
காலம். 30/12/2016-31/12/2016
நேரம். காலை 9.00 மணிமுதல் -4.30 வரை

Neergi Beauty Parlour . 077 786 9760

## பாஸ்டர்

### கருப்பையா தர்மலிங்கம் ராமசாமி

இலங்கை பெந்தகோஸ்தே சபையைச் சேர்ந்த பாஸ்டர் கருப்பையா தர்மலிங்கம் ராமசாமி நேற்று (28.12.2016) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் சாட்சியின் கூட்டம் இன்று (29.12.2016) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுண்டுக்குளி விசுவாச வீட்டில் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து பி.ப. 2 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று கொட்டடியில் உள்ள இலங்கை பெந்தகோஸ்தே சபை சவக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
இலங்கை பெந்தகோஸ்தே சபை.
இல.111, கண்டி வீதி, சுண்டுக்குளி
021 222 2339

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா வைரவநாதர்



பிறப்பு:- 03.04.1932
இறப்பு:- 27.12.2016


இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வைரவநாதர் 27.12.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவநாதரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா-கண்மணியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரு-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் தேவபாலன் (லண்டன்), காலஞ்சென்ற சிவபாலன் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) மற்றும் தேன்மொழி, ஜெயபாலன் (ஜேர்மனி), தேவகி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி (லண்டன்) சிவயோகம் , சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ரதி (ஜேர்மனி), வின்சன்ட் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மகேஸ்வரி, காலஞ்சென்ற சாரதாமணி தேவி மற்றும் சேமசுந்தரம், காலஞ்சென்ற மகேந்திரம் மற்றும் விஜயலட்சுமி, தர்மசீலன் (சுவிஸ்), அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் வில்லியம், ஜெனனி (லண்டன்),தீபன் (லண்டன்), நிதன்(லண்டன்), வியாபகன் (டயலொக்),ஸ்ரீபன் சிந்து (ஜேர்மனி), அலைமகள் (யாழ். பல்கலைக் கழகம்), சிவசங்கா, கோகுலன் (ஆசிரியர், பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயம் ), இராகுலன் (B.SC), ஜதுகுலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அகிலா (இராமநாதன் நுண்கலைப்பீடம்), வரகுலன் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), நிதர்சன்(ஜேர்மனி), நாவேந்தன் (ஜேர்மனி),லேயா (லண்டன்), லோய்ஸ் (லண்டன்) போகினி (முல்லைத்தீவு சண்முகரட்ணம் மகாவித்தியாலயம்), யாழினி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப்பாட்டியும் சப்ரோன் மாயா (லண்டன்), கலும் (லண்டன்), ஸ்வேதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு
தகவல்: குடும்பத்தினர்.
(11,18)
077 334 9298

## மரண அறிவித்தல்



### நடராசா ஞானகுமாரன்

யாழ்.திருநெல்வேலிகிழக்கு, செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா Florida வை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஞானகுமாரன் (Formar chief Technical Officer - Dept of Chemistry, University of Jaffna) 23.12.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா (JP) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ராஜாகந்தசாமி - புஸ்பராணி (உரும்பிராய்) தம்பதிகளின் அன்பு மருமகனும், றூபிகாவின் (Formar Management assistent - Chemistry Dept, University of Jaffna )பாசமிகு கணவரும், பிரவீனின் அன்புத் தந்தையும், சிவகுமார் (இலங்கை), ஜெயகுமார் (ஜேர்மனி), கலைவாணி (இலங்கை), உருத்திரகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,நவநீதன் (லண்டன் - உரும்பிராய்), சிறிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2016) வியாழக்கிழமை ஐக்கிய அமெரிக்கா ( Florida)வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/7225)
(11,18)
தகவல்: குடும்பத்தினர்.
+4479 9080 3357, +1954 683 9140

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார்...

தங்க ஆபரணங்களைத் திருடிக்கொண்டு ஓட்டோவில் தப்பிச் சென்றதாகக் கருதப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களை பொலிஸார் தடுத்துநிறுத்த முற்பட்டபோது அவர்கள் நிறுத்தாமல் சென்றனர் என்று கூறப்பட்டது.

இதனையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் இரவு 8.30மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் திருகோணமலைத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், மேலும் இரு சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (த-ய-40,45)

## பாதுகாப்பு...

பாடு என்று அழைக்கப்படும், கண்ணி வெடிகளைத் தடை செய்யும் பன்னாட்டு அறிவிப்பில் 160 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இந்தப் அறிக்கையில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை கடந்த மார்ச் மாதம் அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சு இன்னமும் இதற்குப் பச்சைக்கொடி காண்பிக்கவில்லை. இது குறித்து பிரிஐ செய்தி நிறுவனத்துக்குக் கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே, கண்ணி வெடிகளைத் தடை செய்யும் பன்னாட்டுப் அறிவிப்பில் அரசு கையெழுத்திடும். இந்த உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திடாமல் இருப்பதற்கும், நல்லிணக்கத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை-என்றார். (த-5)

## வடக்கு...

கவனித்துக் கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கனடாவின் மார்க்கம் நகருக்கு எதிர்வரும் 4ஆம் திகதி புறப்படுகின்றார். அவர் 16ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கவுள்ளார். இந்தக் காலப் பகுதியில் முல்லைத்தீவு நகர் இரட்டை நகர ஒப்பந்தம் உள்ளிட்ட நிதி சேகரிப்பு நிகழ்வுகளில் அவர் பங்குகொள்ளவுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் அந்த அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் ஜனவரி 7 ஆம் திகதி கனடாவுக்குப் பயணமாகின்றனர். கனடாவில் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சுகாதாரப் பன்னாட்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் செல்லவுள்ளனர்.

இதனால் ஏக காலத்தில், முதலமைச்சர், சுகாதார அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோர் நாட்டில் இருக்கமாட்டார்கள். மீன்பிடி அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரே, மூன்று அமைச்சுக்களையும் நிர்வகிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. (த-5-101)

## வற்றாப்பளைச்...

"இராணுவத்தினரின் நோயாளர் காவு வண்டியுடன் மோதியதாலேயே இந்த விபத்து நடைபெற்றது. விபத்துக்குக் காரணமாகவிருந்த காவு வண்டியைச் சம்பவ இடத்திலிருந்து இராணுவத்தினர் அகற்ற முயற்சித்தனர். இதனால் அவர்களுடன் முரண்பாடு ஏற்பட்டது' என்று சாட்சிகள் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு இராணுவ முகாமிலிருந்து இராணுவ நோயாளர் காவு வண்டி முள்ளியவளை நோக்கி வந்தது. வற்றாப்பளையிலிருந்து முள்ளியவளை நோக்கிச் சென்ற முதியவர், வற்றாப்பளைச் சந்தியில் திரும்ப முற்பட்டார். இதன்போது நோயாளர் காவு வண்டி மோதி சூரிப்பிள்ளை கந்தப்பிள்ளை (வயது-75) என்ற முதியவர் உயிரிழந்தார் - என்றனர்.

விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து இராணுவத்தினரின் நோயாளர் காவு வண்டியை உடனடியாக அகற்றினர் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். இதனால் சடலத்தை எடுக்க விடாது அவர்கள் பொலிஸாருடன் முரண்பட்டுள்ளனர். இதனால் அந்த இடத்தில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

முல்லைத்தீவு மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்கு வந்தார். மக்களுடன் கலந்துரையாடினார். நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று உறுதியளித்தார். இதனையடுத்து சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு மக்கள் அனுமதித்தனர். (த-5-7-102)

## உருவானது...

பட்டுள்ளதாக பூகோள சிங்கள அமைப் பின் செயலாளர் நிஹால் மெண்டிஸ் தெரிவித்தார்.

அஸ்கிரிய மாநாயக்க பீடாதிபதி வரகாகொட ஞானரத்ன தேரருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தெரிவித்ததாவது:

போரை வெற்றிகொண்டு நாட்டை ஒற்றுமையாக்கி சமாதானமாகப் பயணிக்கும் இந்தத் தருணத்தில், புதிய அரசமைப்பின் ஊடாக கூட்டாட்சிக்குச் செல்வது குறித்து மக்களைத் தெளிவுபடுத்தவேண்டும்.

உள்நாட்டில் உள்ளவர்களைவிட வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் இது தொடர்பில் நல்ல புரிந்துணர்வுடன் செயற்படுகின்றமையைப் பார்க்க முடிகின்றது. எமது இறைமை இல்லாது போனால் எமது இனம் பன்னாட்டு சமூகத்தின் மத்தியில் அசௌகரியத்துக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்துள்ளனர் என்றார். (த-5)

## இலங்கை...

சிரிய அரச படைகள் மேற்கொண்டு வரும் கொடூரமான போர்க் குற்றங்கள் 2009 ஆம் ஆண்டின்போது இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்கள் மீது நடத்திய இனப்படுகொலையை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் பணிமனையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பன்னாட்டுச் சமூகம் மீள இந்த முறையும் அப்பாவிக் குடிமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதிலும், பன்னாட்டு ஒழுங்கமைப்புகள் மற்றும் சட்டமுறை விதிகளைப் பேணுவதிலும் இழிவான வகையில் தவறியுள்ளது.

பல்வேறு மனித உரிமை அமைப்புகள் ஐ.நாவின் சிரிய விவகாரம் தொடர்பான விசாரணைக் குழுவிடம் முன்வைத்த ஆவணத்தின்படி அலெப்போ பகுதியில் ரஷ்யாவின் வான்வழித் தாக்குதல்கள் மூலம் 380 சிறுவர்கள் உட்பட ஆயிரத்து 207 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுக்கும் பன்னாட்டுச் சட்டங்களுக்கு முரணான வகையில் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளதையும் இந்த ஆவணம் குறிப்பிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு நடுப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தில் தஞ்சமடைந்திருந்த தமிழ் மக்களை அரச படையினர் சுற்றிவளைத்துக் குண்டு பொழிந்து கொன்றொழித்தபோது உயிரிழந்தோர் ஒரு லட்சத்தினர் என மதிப்பிடப்பட்டது.

அந்த நேரத்திலும் ஐ.நாவும் உலக சமூகமும் அரசின் தாக்குதல் அழிவுகளைக் கண்டும் காணாமல் இருந்ததும் இந்தக் குற்றங்கள் சார்பில் இன்றுவரை ஒருவர்கூடத் தண்டிக்கப்படவில்லை என்பதோடு குற்றம் புரிந்தோரைச் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதில் உலக ஆதிக்க வலுவுள்ளோர் யாரும் ஆர்வம் காட்டுவதாயும் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

போர்க்குற்றம் புரிந்தோர் தத்தமது நாடுகளினது இறையாண்மை என்ற கவசத்தின் பின்னால் மறைத்துப் பாதுகாக்கப்படும் நிலமை இருக்கக்கூடாது. அந்த வகைக் குற்றம் புரிந்தோர் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படாத போது முழு மானிடத்தின் எதிர்காலமுமே கேள்விக்குள்ளாகிறது.

உலகமட்ட நிறுவனங்களை உருவாக்குவதெனில் மக்களது சார்பில் இயங்கத் தவறி உலக அரசுகளின் பிரதிநிதியாகிவிட்ட ஐ.நா. உட்பட்ட நிறுவனங்களிடையே தீவிரமானதும் ஆழமானதுமான மறுசீரமைப்புத் தேவைப்படுகிறது. அத்தகைய மறுசீரமைப்பு நிகழுமானால் அதுவே பன்னாட்டு ஒழுங்கும் நீதியும் முறிவடைந்ததன் காரணமாக அத்தமற்ற வகையில் அநியாயச் சாவடைந்த அனைத்து உயிர்களுக்குமான பிராயச்சித்தமாக அமையும். அப்போது உலகெங்குமுள்ள சாதாரண குடிமக்கள் மனதில் தாமும் வெறும் எண்ணிக்கையாகிப் போய்விடாமல் மனிதர்களாக மதிக்கப்படும் வாய்ப்பு உண்டென்று நம்பிக்கை பெறுவர் - என்றுள்ளது. (த-5)

## மத்தியும்...

வடக்கு, வடமத்திய, ஊவா, தென் மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளில் இந்தச் சட்ட வரைவு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சட்டவரைவுக்கான ஒப்புதல் வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக மத்திய மாகாண சபை நேற்றுக் கூடியது. சட்டவரைவு மீது விவாதம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. சபை நடவடிக்கைகளிலிருந்து வெளிநடப்புச் செய்வதாக அவர்கள் அறிவித்து, சபையிலிருந்து வெளியேறினர். இதன் பின்னர் சட்ட வரைவு சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் 32 பேர் சட்டவரைவுக்கு எதிராக வாக்களித்தனர். ஆதரவாக எந்தவாக்கும் கிடைக்கவில்லை.

வாக்கெடுப்பு நடந்தபோது சபையில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தும் எந்தவொரு உறுப்பினரும் இருக்கவில்லை. மாகாண சபைகளில் இந்தச் சட்டவரைவு தோற்கடிக்கப்பட்டு வரும் நிலையில், சட்ட வரைவில் திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இதேவேளை வடமேல் மாகாண சபையில் சிறப்பு அபிவிருத்தி சட்டவரைவு நேற்று தோற்கடிக்கப்பட்டது. (த-5)

## தனியார்...

சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

மாகாணசபை அமர்வு முடிந்த பின்னர் தனியார் விடுதியில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வில் அவர் பங்கேற்றார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. சபை அமர்வு முடிந்த பின்னர் விடுதியில் மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண சபை அலுவலர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சபை அமர்வில் கருத்துத் தெரிவித்த அனந்தி சசிதரன், எமது மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எம் அனைவரிடமும் இருக்கின்றது. அந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற நிதியில்லை என்று கூறிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இவ்வாறான ஒரு மதிய உணவு விருந்துபசார ஏற்பாடு அதுவும் தனியார் உணவு விடுதிகளில் நடத்த வேண்டிய தேவை இருக்கின்றதா ? இவ்வாறு நடப்பதைக் கேள்விப்பட்டால் இதற்குத்தானா உங்களுக்கு வாக்குப் போட்டோம் என்று மக்கள் கேள்வி கேட்பார்கள்-என்றார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் "இந்த மதிய உணவு நிகழ்வு வருட இறுதியில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து பரஸ்பர நட்புப் பாராட்டுதலாக அமையவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருட இறுதியிலும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விடுதிகளில் நடைபெறுவது வழக்கம். அதைப்போன்றே இந்த வருடமும் எம்மால் இந்த விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதைப் பிழையாக விளங்கிக் கொள்ள வேண்டாம். நான் மிகவும் சிக்கனவாதி. ஆகவே அதற்கேற்ற முறையில்தான் செலவழிப்பேன். விடுதி மண்டபம் இலவசமாகத் தரப்பட்டிருக்கின்றது. உணவுக்கும் விலைக் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதன்போது திருமதி அனந்தி சசிதரன், நாங்கள் அவர்களிடம் இலவசமாக உதவிகளைப் பெற்றுக் கொண்டால், அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகின்றபோது நாமும் அதில் பங்காளியாக வேண்டி வரும் - என்றார்.

சகல விடயங்களையும் கவனத்தில் எடுத்தே நாம் இதனைச் செய்துள்ளோம் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பதிலளித்தார். (த-5-8)

## 2017இல்...

முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது. பொருளாதாரத் தடைகள், இராணுவத்துக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகள் போன்றவற்றை எதிர்க்கொள்ள முடியாமல் இலங்கை மிகவும் மோசமான நிலையிலேயே இருந்தது.

பன்னாட்டுச் சமூகத்துக்குப் பணிந்து போகும் ஜனாதிபதி எமக்குத் தேவையில்லை, முதுகெலும்புள்ள ஜனாதிபதியே எமக்கு வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பன்னாட்டுச் சமூகத்துக்குப் பணிந்து போகவும் இல்லை. பன்னாட்டுச் சமூகத்தைப் பகைத்துக் கொள்ளவும் இல்லை என்பதை இங்குக் கூறிக்கொள்ளவேண்டும்.

பன்னாட்டு மட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் காணப்பட்ட சவாலை ஜனாதிபதி சூட்சுமமான முறையில் எதிர்கொண்டார். 19ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்து உலக நாடுகளின் நன்மதிப்பைபெற்றுக்கொண்டுள்ளார். இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்த மீன்பிடி ஏற்றுமதி தடை தற்போது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தலா 82 ஆசனங்களே உள்ளன. ஏனையோரின் ஆதரவினாலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 ஆசனங்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 90 ஆசனங்களும் கிடைத்துள்ளன. இரு கட்சிகளுக்கும் இரு வேறுபட்ட கொள்கைகள் காணப்பட்டாலும்; இரண்டு கொள்கைகளையும் இணைத்து மக்களுக்குப் பயனளிக்கும் செயற்திட்டங்கள் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மாற்றமொன்று ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. அடிப்படைக்கூறு சார்ந்த சில தீர்மானங்களை ஜனாதிபதி எடுக்க வேண்டியிருக்கும்.

ஜனவரி 8 ஆம் திகதி நல்லாட்சி அரசின் இரண்டாண்டு பூர்த்தி கொண்டாடப்படவுள்ள நிலையில் இந்தியாவின் அடிப்படையில் இலங்கையில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் இலங்கையினை தெளிவுபடுத்துவதற்காக இந்தியாவின் ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபுநாயுடு இலங்கைக்கு வருகை தரவுள்ளார் - என்றார். (த-5)

## சுவாமிநாதனிடம்...

தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எவர் எதிர்த்தாலும் வடக்கு மாகாணத்தில் பொருத்து வீடு அமைக்கப்பட்டே தீரும். அதில் மாற்றமில்லை என்று அமைச்சர் சுவாமிநாதன் தொடர்ந்தும் தெரிவிப்பது தொடர்பில் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் விருப்பு இன்றி எதனையும் நடைமுறைப்படுத்தக் கூடாது. வடக்கு கிழக்கு மக்கள் பல வழிகளிலும் துன்பப்பட்டவர்கள். அந்த மக்களின் தேவையினை அவர்களே கூறவேண்டும்.

அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களே பொருத்து வீடுகளை விரும்பாத நிலையில், பொருத்து வீடுகளைத் தான் அமைக்க வேண்டும் என்றும் அவற்றை அமைத்தே தீருவேன் என்றும் அமைச்சர் சுவாமிநாதன் கூறிப் பிடிவாதமாக இருப்பது நல்லதல்ல.

இதனை உடனடியாக மறுபரிசீலனைசெய்து மக்களின் விருப்பத்துக்கு ஏற்றதாக மனச்சாட்சியின்படியே அமைச்சர் சுவாமிநாதன் நடந்து கொள்ளவேண்டும்- என்றார். (வ-4,101)

## கனடா...

தலைவர் ஒருவரும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட லோகநாதன் சதீ[illegible] (வயது-35), பாலசுப்பிரமணியம் அதி[illegible] (வயது 21) ஆகியோரே உயிரிழந்தவர்கள[illegible] கனடாவின் பிக்கறிங்கில் வீதி மற்றும் [illegible] டோனா வீதி ஆகியன சந்திக்கும் பகுதி[illegible] இருவரும் பயணித்த வாகனங் கள் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்ப[illegible]தாக அங்கிருந்து கிடைக் கும் தகவல்கள் தெ[illegible]வித்தன.

விபத்தில் உயிரிழந்த குடும்பத் தலைவ[illegible] மனைவி இலங்கையிலேயே வசித்து வ[illegible]கிறார் எனவும், அவர் தனது கணவரிடம் செ[illegible]வதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொ[illegible]டிருக்கும் வேளையில் இந்த இடர் ஏற்பட்டு[illegible]தாகவும் கூறப்பட்டது.

(த[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்துக்கு இரு பன்னாட்டுப் பதக்கங்கள்

## பளுதூக்கலில் கிடைத்தன


விஸ்ணுகாந்

யாழ்ப்பாணம், டிசெ. 29
தெற்காசிய நாட்டுப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பளுதூக்கலில் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் பதக்கங்களைக் கைப்பற்றினர். மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஏ.எட்வின் வூட் 85 கிலோ எடைப்பிரிவில் 205 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், யாழ். மத்திய கல்லூரி மாணவன் எஸ். விஸ்ணுகாந் 105 கிலோ எடைப் பிரிவில் 225 கிலோ பளுவைத்தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். இவர்களுக்கான பயிற்சியை ஏ.விதன் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)


எட்வின்யூட்

## கோட்டமட்டம் இனி இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 29
அடுத்த வருடம் முதல் கோட்டமட்டப் போட்டிகள் நடைபெறமாட்டது என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இந்த வருடம் கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் ஆகிய படிமுறைகள் பின்பற்றப்பட்டன. ஆனால் அனைத்து உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர்களின் ஒப்புதலுக்கு அமைய கோட்ட மட்டப் போட்டிகள் அடுத்த வருடம் முதல் நடைபெறமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது. பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டிகள் நிறைவடைந்ததும் நேரடியாக வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (ம-422)

## வயதுப் பிரிவுகளிலும் மாற்றம் கல்வி அமைச்சு ஏற்படுத்தியது

யாழ்ப்பாணம், டிசெ. 29
2017 ஆம் ஆண்டிலிருந்து மெய்வல்லுநர் மற்றும் பெரு விளையாட்டுகளில் வீரர் வீராங்கனைகள் பங்கேற்கும் வயதுப் பிரிவில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.
இதுவரை காலமும் 13 வயதுக்குட்பட்ட, 15 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட, 19 வயதுக்குட்பட்ட, 21 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.
ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய மாற்றத்தின் படி அடுத்த வருடத்துக்கான போட்டிகள் 12 வயதுக்குட்பட்ட, 14 வயதுக்குட்பட்ட, 16 வயதுக்குட்பட்ட, 18 வயதுக்குட்பட்ட, 20 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் நடைபெறவுள்ளன. (ம-422)




## எவ்.ஏ. கிண்ணத் தொடர்: மேரிஸ், வீனஸ் வென்றன

யாழ்ப்பாணம், டிசெ. 29
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென். மேரிஸ், புத்தூர் வீனஸ் அணிகள் வெற்றிபெற்றன. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது.
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சென். மேரிஸ் அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் அணி மோதியது.
3:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் எல்லாளன் அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதியது. இதில் வீனஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 29
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால் பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி அணியை எதிர்த்து ஞான கலா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதவுள்ளது. (ம-23)

## சதுரங்கத் தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ். சதுரங்க முற்றம் நடத்தத் திட்டமிட்ட நடப்பு வருடத்துக்கான தொடர் இன்று ஆரம்பமாகிறது. யாழ். இந்துக்கல்லூரியில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தத் தொடர் எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. முதலாம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு நடைபெறும். (ம-23)

## இளைஞர் வி.க. அரையிறுதிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 29
கொம்மந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இன்று நடைபெறவுள்ளன.
12 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடரின் முதலாவது அரையிறுதியில் கொக்குவில் பிரம்படி அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணியும், இரண்டாவது அரையிறுதியில் ஞானம்ஸ் அணியை எதிர்த்து ஐங்கரா அணியும் மோதவுள்ளன.
8 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடரின் முதலாவது அரையிறுதியில் இணுவில் கலையொளி மற்றும் மல்லாகம் சிறி முருகன் அணிகளும் இரண்டாவது அரையிறுதியில் கொக்குவில் ஏ.பி. மற்றும் கொக்குவில் பிரம்படி அணிகளும் மோதவுள்ளன. (ம-108)

## பெருவிளையாட்டுக்களில் சில நேரடியாகவே தேசியத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 29
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் சில நேரடியாக தேசியமட்ட போட்டிகளாக நடைபெறவுள்ளன என கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி அறிவித்தார்.
அடுத்த வருடம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது. இதன்படி ரென்னிஸ், ஹொக்கி, கூடைப்பந்து, கடற்கரை கரப்பந்தாட்டம், மல்யுத்தம், குத்துச்சண்டை, ஜூடோ, தைக்கொண்டோ, பளுதூக்கல், உடற்பயிற்சி, சைக்கிள் ஓட்டம், அரை மரதன் ஆகிய போட்டிகளே அவ்வாறு நேரடியாக தேசியமட்டத்தில் நடைபெறவுள்ளன. (ம-422)


யாழ். சதுரங்க முற்றம் யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் சதுரங்க பயிற்சிப்பட்டறையை நடத்தியது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் அதில் பங்கெடுத்தனர். (ம-23)

## போராடி வென்றது அல் கிஜிரா விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், டிசெ. 29
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பெரும் போராட்டத்தின் மத்தியில் வெற்றிபெற்றது அல் கிஜிரா அணி. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் [illegible] சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல் கிஜிரா அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதியது. நிர்ண [illegible] இரு அணிகளும் [illegible] கோலைப் பதிவுசெய்திருந்தன. இதனால் சமநிலைத்தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் அல்கிஜிரா அணி வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கட்டான நிலையில் தவிக்கிறது பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் குறித்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற நெருக்கடியில் பங்களாதேஷ் களமிறங்கவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றுள்ளது. இதனால் இன்றை ஆட்டத்திலும் நியூசிலாந்து வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதி. எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க இந்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற நிலையில் பங்களாதேஷ் களமிறங்குகிறது.

இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 1:1 என்றாக்குவோம் என்று பங்களாதேஷ் அணியின் தலைவர் மொகமதுல்லா ஏற்கனவே அறிவித்திருந்த காரணத்தால் இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலக்குக் காப்பாளரும் துடுப்பாட்ட நட்சத்திரமுமான ரகிம் கடந்த ஆட்டத்தில் தசைப்பிடிப்பு ஏற்பட்டு ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்து வெளியேறினார். இதனால் இன்றைய ஆட்டத்தில் அவர் களமிறங்காவிட்டால் அது பங்களாதேஷுக்கு மேலும் பின்னடைவைக் கொடுக்கும். (ம)





# அசார் அலி இரட்டைச் சதம் ஆஸ்திரேலியா தக்க பதிலடி

ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றைய நிலவரத்தின்படி ஆட்டம் சமநிலையில் முடிவடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகிறது. மெல்போர்ணில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சை எதிர்த்து அசார் அலி ஆதிக்கம் செலுத்தினார். மழையும் அவ்வப்போது ஆதிக்கம் செலுத்தியது. பாகிஸ்தான் 310-6 என்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் முடிவுக்கு வந்தது. அசார் அலி 139 ஓட்டங்களுடனும் ஆமிர் 28 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஒரு ஓட்டத்தை எடுத்திருந்த போது ஆமிர் ஆட்டமிழந்தார். அசாருடன் இணைந்து வியக்க வைக்கக்கூடிய போராட்டத்தை வெளிப்படுத்தினார் சொகைல் கான். இரட்டைச் சதம் கடந்தார் அசார் அலி. 10 ஆம் நிலை வீரரான சொகைல் கான் அரைச்சதம் கடந்து வியக்க வைத்தார். 65 ஓட்டங்களுடன் சொகைல் கான் ரண்அவுட் செய்யப்பட்டார். 443-9 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் கசில்வூட், பேட் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், ஸ்ராக், லையன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு அதன் ஆரம்ப வீரரான ரென்சொவ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். வோர்ணருடன் இணைந்தார் கவாயா. ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் விளையாடினார் வோர்ணர். கவாயாவும் அதிகம் நிதானிக்கவில்லை. கிடுகிடுவென ஓட்டங்கள் அதிகரித்துச் சென்றன.

பாகிஸ்தான் மெல்லமெல்லமாகச் சேர்த்த ஓட்டங்களை ஊதித்தள்ளும் அறிகுறியை வெளிப்படுத்தியது வோர்ணர், கவாயா இணை. சதம் கடந்தார் வோர்ணர். கவாயா அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். இணைப்பாட்டமாக 198 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 144 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழந்தார். சிமித், கவாயா நாள் முடிவு வரை தாக்குப் பிடித்தனர். 278-2 என்றுள்ளது ஆஸ்திரேலியா. கவாயா 95 ஓட்டங்களுடனும், சிமித் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# ஆவரங்கால் இந்து இளைஞரின் கரப்பந்தாட்டத் தொடர் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 29

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆவரங்கால் இந்து இளைஞர், மட்டுவில் மோகனதாஸ், ஆவரங்கால் மத்தி, காமாட்சி அம்பாள் அணிகள் வெற்றிபெற்றன.

**இந்து இளைஞர் - கலையொளி**

ஆவரங்கால் இந்து இளைஞரின் மைதானத்திலேயே இந்த ஆட்டங்கள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:13, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது.

**சரஸ்வதி-மோகனதாஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது. முதலிரு செற்களையும் முறையே 25:23, என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றிபெற்றது மோகனதாஸ் அணி.

**ஆவரங்கால்-மத்தி. கலைமதி**

பிறிதொரு ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும் மோதின. 25:12, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி வெற்றிபெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி.

**காமாட்சி அம்பாள் - சோமஸ்கந்தன்**

மற்றொரு ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியும் புத்தூர் சோமஸ்கந்தன் அணியும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 25:18, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய காமாட்சி அம்பாள் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# ஆஸியின் ஒருநாள் கனவு அணி: தலைவராக கோக்லி தெரிவானார்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, ஒருநாள் ஆட்டங்க ளுக்கான தனது கனவு அணியை அறிவித்தது. தலைவராக விராட் கோக்லி நியமிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது டெஸ்ட் கனவு அணிக்கும் கோக்லியையே தலைவராக நியமித்திருந்தது. இந்த நிலையில் ஒருநாள் ஆட்டங்களுக்கும் அந்த அந்தஸ்தைக் கோக்லிக்குக் கொடுத்துள்ளது. ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் ஒரு வீரராக அணியில் தொடர்கிறார்.

ஆஸ்திரேலிய கனவு அணி- கோக்லி (தலைவர்), டேவிட் வோர்ணர், குயின்டன் டி ஹொக், சிமித், அசாம், மிச்செல் மார்ஷ், ஜோஸ் பட்லர், ஜஸ்பிரீத் பும்ரா, இம் ரான் தாகீர்.

ஏனைய இடங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. (ம)



# ரஞ்சித் தொடரில் சாதனை; குஜராத் வீரர் படைத்தார்

இந்தியாவின் மாநில அணிகளுக்கு இடையில் நடைபெறும் ரஞ்சித் தொடரில் குஜராத் அணி வீரர் உலக சாதனை படைத்தார்.

ஒடிசா, குஜராத் அணிகள் மோதிய இந்த ஆட்டத்தில் குஜராத் வீரர் கோஹல் ஆட்டமிழக்காமல் 359 ஓட்டங்களை விளாசினார். இதன் மூலம் முதல் தர ஆட்டங்களில் ஆரம்ப வீரராகக் களமிறங்கி அதிக ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் விளாசிய வீரர் என்ற சாதனையை அவர் நிலைநாட்டினார்.

அதாவது, 1899 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் சர்ரே அணிக்காக ஆடிய பாபி ஆபெல் என்ற வீரர் சோமர்செட் அணிக்கு எதிராக தொடக்கத்தில் களமிறங்கி 357 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அந்த சாதனை தற்போது சமித் கோஹல் வசம் வந்துள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் 263 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஒடிசா 199 ஓட்டங்களில் சுருண்டது. இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய குஜராத் கோஹலின் முச்சதத்துடன் 641 ஓட்டங்களைக் குவித்தது. ஆட்டம் சமநிலையானது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்ணனையாளர் நிக்கொல்ஸ் மீண்டும் மருத்துவமனையில்

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் வர்ணனையாளராகச் செயற்பட்டுவரும் நிக்கொல்ஸ் இரண்டாவது தடவையாகவும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்தது. அன்றைய தினம் வயிற்றுவலி காரணமாக நிக்கொல்ஸ் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் நலம்பெற்று மீண்டும் பணிக்குத் திரும்பினார்.

ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று அவருக்கு மீண்டும் வயிற்றுவலி ஏற்பட்டதை அடுத்து மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
பிரிவு 1 ஆரம்பம்
01-01-2017
ஞாயிறு 9.00 மணி

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2830 திகதி 28.12.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
42 52 64 65 P
போனஸ் இல. சனிக்கிழமை ஜக்பொட்
43
ரூ. 43,102,350/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள் 31.12.2016 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 122 திகதி 28.12.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 04 27 38 58
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,004,100
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk






# ஆதிக்கம் செலுத்தும் அடித்தளத்தை பலமாக அமைத்தது தென்னாபிரிக்கா

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் வலுவான ஆதிக்கம் செலுத்தக்கூடிய அடித்தளத்தைப் பலமாக அமைத்தது தென்னாபிரிக்கா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 286 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் லக்மல் 5 இலக்குகளையும், பிரதீப் மற்றும் கேரத் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை, இரண்டாம் நாள் முடிவில் இலங்கை 181-7 என்றிருந்தது. தனஞ்சய டி சில்வா 43 ஓட்டங்களுடனும், சமீர 7 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் தனஞ்சயவால் பெறமுடியவில்லை. பவிலியனுக்கு அனுப்பி வைத்தார் பிளண்டர். நான்கு பந்துகளையே லக்மலால் தாக்குப்பிடிக்க முடிந்தது. சமீர ஓரிரு பவுண்டரிகளைப் பதிவு செய்ய 205 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை. பந்துவீச்சில் பிளண்டர் 5 இலக்குகளையும், அப்பொட் 3 இலக்குகளையும், ராபாடா, மகாராஜ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

81 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா, ஆரம்பம் முதலே சிறிது அடித்தாட ஆரம்பித்தது. பந்துப்பரிமாற்றத்துக்கு 4.30 என்று நகர்ந்தது. சராசரி இணைப்பாட்டமாக 116 ஓட்டங்கள் பகிரப்பட்ட பிற்பாடு 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் எல்கர். அம்லா, குக் இணைந்து மீண்டும் ஒரு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இரு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் அம்லா. சதம் கடந்து ஆட்டமிழந்தார் குக். பிளாசிஸ், குயின்டனும் அடித்தாட நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 351-5 என்றுள்ளது தென்னாபிரிக்கா. இதுவரையிலுமான நிலவரத்தின்படி அந்த அணி 432 ஓட்டங்களில் முன்னிலை பெற்றுள்ளது. (ம)

# பன்னாட்டு அரங்கில் சாதித்தது வயாவிளான் மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், டிசெ. 29

தெற்காசிய நாடுகளுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான பளுதூக்கலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த வசாவிளான் மத்திய கல்லூரி மாணவிகள் வெள்ளி, வெண்கலம் என இரு பதக்கங்களைக் கைப்பற்றினர்.



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற போட்டிகளில் 70 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றிய குகசீலன் றெஜினா 93 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தினையும், 53 கிலோ எடைப் பிரிவில் தே.லயன்சிகா 90 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# மே.தீவுகளின் வீராங்கனை டொற்றின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்

மேற்கிந்தியத் தீவுகள் பெண்கள் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீராங்கனையான டொற்றின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆஸ்திரேலியக் கழகங்களுக்கு இடையில் ரி-20 தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. பிரிஸ் பெய்ன் அணிக்காக ஒப்பந்தமாகி விளையாடி வருகிறார் டொற்றின். நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பரிஸ் பெய்னை எதிர்த்து மெல்பேர்ண் பலப் பரீட்சை நடத்தியது. களத்தடுப்பில் ஈடுபடும்போது பந்தை தடுக்க முற்படுகையில் சக வீராங்கனையுடன் தலையோடு தலைமோதி மயங்கி விழுந்தார் டொற்றின். இதனையடுத்து முதலுதவி வழங்கப்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தற்போது அவர் நலமுடன் உள்ளார் என்று பிரிஸ் பெய்ன் கழக நிர்வாகம் தெரிவித்தது. இந்த உபாதை காரணமாக டொற்றின் தொடரின் ஏனைய ஆட்டங்களில் இருந்து விலக வேண்டி ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் ப[illegible] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org